

# முன்னேற்றப் பாதையில் வடகிழக்குப் பிராந்தியம்

**வ**ட கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள 7 மாநிலங்களும் ஏழு சகோதரிகள் என்று அன்புடன் அழைக்கப் படுகின்றன. கலாச்சாரத்திலும் நில அமைப்பிலும் இவை ஒன்றுடன் ஒன்று பிணைந்து இருப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. வடகிழக்கில் உள்ள 7 மாநிலங்கள் அஸ்ஸாம், திரிபுரா, மேகாலயா, மிசோரம், நாகலாந்து, அருணாச்சலபிரதேசம், மணிப்பூர், சிக்கிம் ஆகியவை ஆகும். இவற்றில் சிக்கிம் மாநிலம் அண்மையில் தான் வடகிழக்குப் பிரதேசத்தில் சேர்க்கப்பட்டது. இந்த மாநிலங்கள் இந்தியாவின் வடகிழக்கு எல்லைகளாக திகழ்கின்றன. இவை அரசியல் ரீதியாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் மிகவும் முக்கியமானவை ஆகும். வட கிழக்கு பிராந்தியம் மியான்மர், வங்கதேசம், புதிய வல்லரசாக உருவெடுத்து வரும் சீனா ஆகிய 3 நாடுகளின் எல்லையாக அமைந்திருக்கின்றன. இந்த காரணத்தால் வட கிழக்கு பிராந்தியத்தின் மேம்பாடு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

வட கிழக்கு மாநிலங்கள் ஏழு சகோதரிகள் என்று பிணைத்துப் பார்க்கப்படும் போதிலும், இனம், பூகோளம், கலாச்சாரம், மொழி ஆகிய அனைத்து அம்சங்களிலும் வித்தியாசங்களைக் கொண்டிருக்கின்றன. அஸ்ஸாமிகள் நாகாக்களிடமிருந்தும், பிகாரிகள் பஞ்சாபிகளிடமிருந்தும், போடோக்கள் கரோக்களிடமிருந்தும் மாறுபட்டிருக்கின்றனர். இம்மாநிலங்களில் உள்ள பெரும்பாலான மக்கள் பழங்குடியினர் ஆவர். இதனால் இந்த பகுதியில் பழங்குடியின கலாச்சாரம் காலங்காலமாக வேரூன்றி கிடக்கின்றன.

கண்களுக்கு குளிர்ச்சியளிக்கும் நிலப்பகுதிகள், பலவகையான பல்லுயிர் வாழிடங்கள் உள்ளிட்ட அம்சங்கள் இருப்பதால் இப்பகுதி மகிழ்ச்சியளிக்கும் சுற்றுலாத் தலமாகவும் திகழ்கிறது. அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள தேசியப் பூங்காக்கள் முதல் மேகாலயாவின் நீர்வீழ்ச்சிகள் மற்றும் ஏரிகள், சிக்கிம் மாநிலத்தின் பனி படர்ந்த கஞ்சன்ஜங்கா வரை அனைத்தும் இயற்கை அழகாகவும், கலாச்சாரப் பன்முகத்தன்மை கொண்டவையாகவும் உள்ளன. இப்பகுதியின் நடனங்கள் மெய்சிலிர்க்க வைக்கின்றன; இந்த பகுதியில் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களும், துணிகளும் உலகம் முழுவதும் பிரபலமடைந்துள்ளன.

எனினும், ஈடன் தோட்டமாக திகழும் வடகிழக்கு பிராந்தியத்தில் பாம்பை போன்று அச்சுறுத்தி வரும் பயங்கரவாதம் அப்பகுதிக்கு கிடைக்க வேண்டிய வளர்ச்சியின் பயன்களை பறித்துக் கொண்டன. இப்பகுதியில் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் இல்லாததால் இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காக பிற மாநிலங்களுக்கு செல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பகுதியை பாதிக்கும் இன்னொரு முக்கிய ஆபத்து போதைப் பொருட்கள் ஆகும். இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்களும், முதியோரும் போதைப் பொருட்களை சட்டவிரோதமாக பயிரிடுகின்றனர். வட கிழக்கு மாநிலங்களில் தேயிலை, இஞ்சி, பழங்கள், காய்கறிகள் ஆகியவை அதிக அளவில் விளைகின்றன. தோட்டக்கலையும் இப்பகுதியில் சிறந்து விளங்குகிறது. இப்பகுதியில் விளையும் அலங்கார மலர்கள் புகழ்பெற்றவையாகும். நவீன வேளாண் உத்திகள் இங்கு பின்பற்றப்படுவதில்லை என்பதால் உழைப்புக்கேற்ற வருவாய் கிடைப்பதில்லை. இப்பகுதியில் நிலைத்தன்மைக்கு இன்னுமொரு அச்சுறுத்தலாக திகழ்வது வெள்ளம் ஆகும். இப்பகுதியில் பாயும் பிரம்மபுத்திரா நதியில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. வடகிழக்கு மாநிலங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இன்னும் மேம்படுத்தப்படவில்லை. வட கிழக்கு பிராந்தியத்திலிருந்து இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு சிலிகுரி வழியாகத் தான் சென்றாக வேண்டும்.

இந்தியாவின் முக்கியப் பகுதியாக திகழும் வடகிழக்குப் பகுதி இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு இணையாக வளர வேண்டும் என்றால் அதற்கு மேற்கண்ட பிரச்சினைகள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும். அப்போது அங்கு வாழும் மக்களுக்கு வளர்ச்சியின் பயன்கள் கிடைப்பதுடன், வளம் பெறவும் முடியும்.

**– முதன்மை ஆசிரியர்**

# திட்டம்

## மாத இதழ்

மலர்: 47
இதழ்: 8

ஏப்ரல் 2016
சைத்ர – வைஷாக 1938

முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**

கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | : | ரூ. 22.00 |
| ஓர் ஆண்டு | : | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | : | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | : | ரூ. 610.00 |

சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை
சென்னை – 600 006.
தொலைபேசி: 2827 2382

❖ வடகிழக்கு பகுதியின் மேம்பாடு
– சஞ்சய் ஹசாரிகா

❖ வடகிழக்கு இந்தியாவில் நீர்வழிகள்
– டாக்டர் விஷ்வபதி திரிவேதி

❖ வடகிழக்கு மாநிலங்களில் கல்வியும் வேலைவாய்ப்பும் அதற்கான வழிகளும்
– டாக்டர் நடாலி வெஸ்ட் கர்ஹோங்கர்

❖ அரசியல் சட்டத்தின் ஆறாவது அட்டவணை: மேகாலய மாநில நிலைமை
– டாக்டர் சிந்தாமணி ரௌத்

❖ வடகிழக்கின் குவி மையம்: நலவால்வு மற்றும் இளையோர் நலத்திட்டங்கள் வழி வளர்ச்சி
– டாக்டர் அருணா பட்டாச்சார்யா சக்ரவர்த்தி

❖ வடகிழக்கு மாநிலங்களில் விவசாயத்தின் எதிர்காலம்
– வீ.பா. கணேசன்

❖ வடகிழக்கு மாநிலங்களில் வேளாண்மை: இயற்கை வேளாண்மையின் வழியாக நீடித்த வேளாண்மையும் வளமையும்
– நிரேந்திர தேவ்

❖ வடகிழக்கு மின்மயமாக்கல்: சவால்களும் வாய்ப்புகளும்
– கே. இராமநாதன்

❖ வடகிழக்கு இந்தியாவில் பழங்குடியினர் மேம்பாடு
– என்.சி. சக்சேனா

❖ வடகிழக்கு பிராந்தியத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள்
– டாக்டர் கிருஷ்ண தேவ்

அடுத்த இதழில்....
**மாற்றுத் திறனாளி**
பற்றிய கட்டுரைகள் இடம்பெறும்

# வடகிழக்கு பகுதியின் மேம்பாடு

– சஞ்சய் ஹசாரிகா

**1990**களின் ஆரம்பத்தில் மாநாடுகளிலும், அரசு அணுகுமுறைகளிலும் சாதாரண பேச்சுக் களிலும், இந்தியாவின் வடகிழக்கு பகுதி, தென்கிழக்காசிய பகுதியை நோக்கி செல்வது பற்றி இருந்தது. ஆனால், இதில் பெரிய முன் னேற்றம் தென்படவில்லை. ஆகவே, இந்த வடகிழக்கு பகுதியின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பங்களாதேஷ் உடனான அரசியல் மற்றும் வர்த்தக உறவுகள் மேம்பட வேண்டும்.

இப்படிச் செய்தால்தான் பிரதமர் டாக்கா விலும், குவஹாத்தியிலும் தெரிவித்ததுபடியும் அவருக்கு முந்தைய தலைவர்கள் கூறியது போலவும், வடகிழக்கு பகுதி, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவுடன் மேம்பட்ட இணைப்பு ஏற்படும்.

இதன்படி வடகிழக்கு பகுதி தனக்கு தெற்கே மற்றும் மேற்கே உள்ள பகுதிகளை எதிர் நோக்கி யிருக்க வேண்டுமே தவிர கிழக்கை நோக்கி அல்ல, ஏனெனில் கிழக்கே இராணுவ ஆட்சியிலிருந்து கூச்சலான ஆனால் நிச்சயமற்ற ஜனநாயகத்தை நோக்கி மாறும் மியன்மார் என்ற நெடிய மற்றும் நிச்சயமற்ற சுவர் உள்ளது.

தற்போது, எளிமையாக வியாபாரம் செய்யும் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட் டுள்ளது. இதற்கு முன்னோடியாக திரிபுரா மாநில அரசு பங்களாதேஷ் அரசின் ஒத்துழைப் போடு ஒரு பெரிய வலைதள நுழைவாயிலை ஏற்படுத்தியுள்ளது. இது இந்தியாவின் மூன்றா வது வலைதள நுழைவாயிலாகும். பங்களா தேஷிலிருந்து அடிக்கடி வரும் வியாபாரி கள் பிரதிநிதிக்குழுக்களை வளம் பெற்று வரும் அகர்தலா நகரில் அடிக்கடி பார்க் கலாம். இதற்கு முக்கிய காரணம், திரிபுரா வில் மற்ற வடகிழக்கு மாநிலங்களைவிட நல்ல அரசாட்சி இருப்பதும் மக்களுக்கு சேவைகளை வழங்குவதில் அரசின் உறுதிப் பாடு காணப்படுவதும் காரணமாக இருக்க வேண்டும். நாட்டுக்கு எதிரான போராட் டங்கள் இப்போது பழமையான நிகழ்வாகி




விட்டது. மாநிலத்தில் அமைதி காணப் படுவதை அடுத்து 2015ல் மாநில அரசு மக்களால் மிகவும் வெறுக்கப்பட்ட இராணுவப் படைகளுக்கான சிறப்பு அதிகாரங்கள் சட்டம் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகள் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டன.

பங்களாதேஷிலிருந்து டார்ஜிலிங் போன்ற பகுதிகளுக்கு கொல்கத்தா வழியாக சுற்றிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லா மல் நேரடியாக செல்வதற்கு நம் நாடு பாக்டோக்ராவில் கடவுச் சேவை வசதிகளை துவக்க உள்ளது. இது ஒரு சிறிய மற்றும் படிப்படியான நடவடிக்கைதான். ஆனால், கடந்த காலங்களில் பங்களாதேஷுக்கு போவ தற்கு அரசு முறையான அனுமதி பெறுவது மிகவும் தொல்லையாக இருந்தது. இந்த பகுதிகளுக்கு மிக அருகாமையிலிருந்த வங்க தேச தூதரக அலுவலகங்கள் கொல்கத்தா விலும், அகர்தலாவிலும் மட்டுமே இருந்தன. கடவுச்சீட்டு *(VISA)* பெற சுற்றுப்பாதையில் செல்ல வேண்டியிருந்ததால் இரண்டு மூன்று நாட்களும், பல்லாயிர ரூபாய் செலவும் இருந்தது. இதைப் போலவேதான் வங்க தேசத்திலிருந்து இந்தப் பகுதிகளுக்கு அரசு முறைப்படி மேற்கொள்ளப்படும் பயணங்

**சஞ்சய் ஹசாரிகா,** பேராசிரியர், இயக்குனர், வடகிழக்கு ஆய்வுகள் மற்றும் கொள்கை ஆராய்ச்சி மையம், ஜமியா மிலியா இஸ்லாமியா மத்திய பல்கலைக்கழகம், புதுதில்லி.

களும் இருந்தன. (இங்கே நாம் சட்டத்திற்கு புறம்பான குடியேறிகளைப்பற்றி குறிப்பிட வில்லை) மேலும், பல ஆண்டுகளுக்குப் பிறகு சில்ஹட் மற்றும் குவஹாத்தியில் தூதரக அலு வலகங்களை துவக்குவதில் முன்னேற்றங்கள் காணப்படுகின்றன.

இவைகளுக்கு அப்பாற்பட்டு கிழக்கு நோக்கு கொள்கை மற்றும் இணைப்பு ஏற்படுத்துதல் மற்றும் இந்த பகுதிக்கு பன்னாட்டு மூல தனத்தை ஈர்ப்பதில் மிகப்பெரிய சவால்கள் உள்ளன. இந்த பிரச்சினைகளை பூசி மெழுகா மல் நேரடியாக எதிர்கொள்ள வேண்டும்.

முதலாவதாக 60 ஆண்டுகளாக இந்தப் பகுதியில் சச்சரவும் எதிர்ப்பு சதி வேலை களும் மாநிலத்திற்குள்ளும் மாநிலத்திற்கு எதிராகவும் நடைபெற்று வந்த வகையில் இந்தப் பகுதியை பாதிக்கப்பட்ட பகுதியாக கருதப்பட்டதை எளிதாக மறக்க முடியாது. இந்த காரணங்களால்தான் அரசின் பெரும் முயற்சிக்குப்பின்னும் இந்தப் பகுதிக்கு முதலீடுகளை ஈர்க்க முடியவில்லை. இந்தப் பகுதியில் உள்ள பாதுகாப்பு கவலைகளை மத்திய அரசின் கொள்கை அணுகுமுறைகள் சார்ந்துள்ளன. ஆகவே, இந்தப் பகுதியில் பெருமளவிலான நம்பிக்கையற்ற நிலைமையும் மக்களிடையே, ஒதுக்கப்பட்ட எண்ணமும் காணப்படுகிறது. அங்கே நடைபெற்றுள்ள பாதுகாப்பு படைகள் சார்ந்த மனித உரிமை மீறல்களால் (இவைகள் அரசு சாராத மற்றும் பிற அமைப்புகளால் முறையாக தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளன) இந்த எண்ணங்கள் மேலும் தீவிரமடைந்துள்ளன.

“தென்கிழக்கு ஆசியாவோடு இந்தப் பகுதியை இணைப்போம் என்று கூறுவது எளிது” ஆனால், இரு நாட்டு எல்லைகளில் இராணுவ பாதுகாப்பு இருப்பதால் இது எப்படி சாத்தியம்?” என்று 2014ல் ‘ஜீல்லாங் டைம்ஸ் என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் பட்ரிஷியா முக்கிம் கேள்வி எழுப்பினார். இந்த கிழக்கு நோக்கு கொள்கை இந்நாள் வரை கடலோர மாநிலங்களான மேற்கு வங்கம், ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகியவைகளுக்கு மட்டுமே பயன்பட்டு வந்துள்ளது. ஏனெனில், உலக வர்த்தகம் பெரும்பாலும் கடல்வழி மூலமாகவே நடை பெறுகிறது. மிகக்குறைந்த அளவில்தான் சாலை மற்றும் ரயில்வே மூலம் நில வழியில் நடைபெறுகிறது.

இந்தியாவின் மற்ற பகுதிகளைக்காட்டிலும் இங்கு உள் கட்டமைப்பு வசதிகள் மிகக் குறைவு. வணிகக் குழுமங்களுக்கு மிகவும் தேவையான நிலங்களை கையகப்படுத்துதல் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பாரம்பரிய, அரசியல், சமூக கூட்டமைப்புகளுக்கிடையே சிக்கியுள்ளது. இது அல்லாமல் சிறப்பாக செயல்படும் மாநிலங்களான மகாராஷ்டிரம் மற்றும் தமிழ்நாடு போன்றவைகளோடு ஒப் பிடும்போது வடகிழக்கு பகுதி வளர்ச்சியில் பின்தங்கியுள்ளது.

வடகிழக்கு பகுதியை நிலம்சார் மாநிலங் களிலிருந்து விடுவித்து வங்கக் கடலுக்கு நேரடி இணைப்பை ஏற்படுத்த வேண்டும். அகர்தலா விலிருந்து பங்களாதேஷின் அகௌரா வழியே சிட்டகாவ் துறைமுகத்துக்கு இணைப்பு வழங்குவதன் மூலம் இதை செய்யலாம். இந்த வகையில் முன்னேற்றம் நிதானமாகவே உள்ளது. B.G.வர்கீஸ் போன்ற கொள்கைசார் நிபுணர்கள் இதற்கு ஊந்துதல் கொடுத்தும் கடந்த 20 ஆண்டுகளாக இரு நாடுகளுக்கு மிடையே பேச்சு வார்த்தை நடந்து கொண்டே உள்ளது.

ஆயினும் இந்த இணைப்பால் பங்களாதேஷ் பொருட்களுக்கு வடகிழக்கு உள்ளிட்ட இந்திய சந்தைகளின் வாய்ப்புகளும், இந்த பகுதியில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு பங்களா தேஷ் சந்தைகளிலும் ஒரு பெரிய துறைமுகம் வாயிலாக உலக சந்தைகளிலும் வாய்ப்புகள் கிடைக்கும்.

தேசிய மூங்கில் முனையத்தின்படி இந்த பகுதியில் சுமார் இரண்டு கோடி டன் மூங்கில் களை ஒவ்வொரு ஆண்டும் அறுவடை செய்ய முடியும். லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் ஆனால் தரைமட்டத்தில் அவசரமே தென்படவில்லை. இந்தப்பகுதி சிறு சிறு பொருட்களான, ரேசர் பிளேடுகள், மீன், பென்சில், உணவுப் பொருட்கள் முதல் கார்கள், தொலைக்காட்சி பெட்டிகள்வரை இறக்குமதியையே நம்பி இருக்கிறது. இது மற்றவர்களுக்கு ஒரு சந்தையாகவே உள்ளதே தவிர உற்பத்தி மையமாக இல்லை. பழங்கள், காய்கறிகள், கால்நடைகள், ஆகியவை பங்களாதேஷ் மற்றும் மியன்மார் நாடுகளுக்கு அப்படியே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவற்றை மேலும் பதனிட்டு பல நாட்கள் உபயோகப்படும் வண்ணம், உயர் மதிப்பு அளிக்கும் தொழில்கள் இங்கு இல்லை.

இங்கு மனிதவள மேம்பாட்டு குறியீடுகளும் மிகப்பெரிய சவாலாகவே உள்ளன. அரசு அளிக்கும் தகவல்களின்படி அஸ்ஸாமில் தாய்மார்களின் பேறுகால மரண விகிதம் இந்தியாவிலேயே மிக அதிக அளவில் 300ஆக உள்ளது. இந்த அளவு உத்தரபிரதேசம் மற்றும் மத்திய பிரதேசத்தை விட அதிகம். இது 2005–06ல் இருந்த 490 புள்ளிகளைவிட (ஒரு லட்சம் குழந்தை பிறப்புக்கு) மேன்மையானதாக இருந்தாலும் இந்த நிலைமையை சீர் செய்யா விட்டால் என்னதான் கிழக்கே, மேற்கே அல்லது தெற்கே பார்த்தாலும் இப்பகுதி மக்களின் அடிப்படை மனித தன்மானம் உயர்ந்து எல்லோரும் சமமாக வாழ முடியாது. இதைச்செய்ய வேண்டியது மத்திய, மாநில அரசுகளின் அடிப்படை பொறுப்பாகும்.

மற்றொரு முக்கிய சவால் பருவ நிலை மாற்றங்களால் இப்பகுதி மக்கள் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு குடியேற வேண்டிய சூழ் நிலை. ஒவ்வொரு ஆண்டும் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கில் கடுமையான வெள்ளம் ஏற்படுகிறது. சமீபத்தில் நடந்த வெள்ளத்தில் 350 இடங்களில் கரை உடைப்பு ஏற்பட்டது. ஆனாலும் வடகிழக்கு பகுதியிலோ, இந்தியா வின் பிற பகுதிகளிலோ இந்த நதிக்காடுகளை பாதுகாப்பது பற்றியோ மாற்று நிலைமைகள் பற்றியோ விவாதங்களே இல்லை.

இந்த கிழக்கு நோக்கும் அணுகுமுறை சிறந்ததாக இருந்தாலும் ஒரு முக்கிய கருத்தை கவனிக்க தவறி விட்டது. நதிகள் மூலம் பெரிய அளவில் பொருட்களை கொண்டு செல்வதைப் பற்றி நமக்கு ஒரு தெளிவான கொள்கை இல்லாத வரையில் இந்த அணுகு முறை பயனளிக்காது. ஆகவேதான் போக்கு வரத்து அமைச்சகத்தின் நீர்வழி போக்கு வரத்து மேம்பாட்டு திட்டம் இந்த பகுதிகளை மற்றவைகளோடு இணைக்க முக்கியமான தாகும். ஒவ்வொரு ஆண்டும் மூன்றிலிருந்து ஐந்து மாதங்கள் வரை இங்குள்ள சாலை, இரயில் போக்குவரத்து வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. இன்றைய மற்றும் எதிர் கால நிலைமைகளை சீராக்கும் எந்த ஒரு பொருளாதார கொள்கையும் இதை கவனத்தில் கொள்ள வேண்டும். எல்லாவகையான கொள்கை வகுக்கப்படும் போதும் எல்லா மட்டத்திலும் செயல்படுத்தப்படும்போதும் பேரிடர் மேலாண்மையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆனால், இது கரையோரப் பகுதிகளில் வசிக்கும் உள்ளூர் மக்களுக்கு பயன்படுமா? இந்த நதிகளில் பெரிய கப்பல்கள் செல்லும் போது அதிலுள்ள மீன்கள் மற்ற வளங்கள் பாதிக்கப்பட்டு சாதாரண மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதா?

இப்படி வடகிழக்கு பகுதியில் நதிகளில் பெரிய அளவு உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும்போது கீழ்ப்பகுதிகளில் என்ன வகையான பாதிப்புகள் ஏற்படும்? இங்குள்ள மீன் வளங்கள் என்னாகும்? இந்த பகுதிக்கே உரித்தான மீன்கள் என்னாகும்? இந்த நதி களை நம்பியுள்ள விவசாயிகளும் மீனவர் களும் எப்படி பாதிக்கப்படுவார்கள்? இந்தப் பகுதியில் வாழும் 400 டால்பின்களின் கதி என்ன ஆகும்?

இவை இப்படி இருந்தாலும் சில துறை களில் முன்னேற்றங்களை எளிதாக செய்ய முடியும். இப்படிப்பட்ட சுலபமான பணி களை தென்கிழக்கு ஆசிய பல்கலைக் கழகங்கள், ஊடகங்கள், கைவினைப்பொருட் கள் அமைப்புகள் போன்றவர்களோடு கூட்டாகவும் மற்றும் கலைஞர்களின் பரஸ்பர விஜயங்களாலும், கலைநிகழ்ச்சிகளாலும் இந்த இரண்டு பகுதிகளையும் இணைக்கலாம். இப்படி செய்வதன் மூலம் அரசுசார்ந்த பேச்சுவார்த்தைகள் நடக்கும் அதே சமயத்தில் அரசுகள், உலக அமைப்புகள் மற்றும் நிறுவனங் களின் உதவியோடு இரண்டாவது வழியினா லான அணுகுமுறையால் மக்களின் மனமாற் றத்தை ஏற்படுத்த முடியும்.

தொலைநோக்கில் பார்க்கும்போது இங்குள்ள பல இன மக்களுக்கும், அரசுக்கு மிடையேயான மோதல்களை தீர்ப்பதால் பல நன்மைகள் உண்டாகும். அப்போது இந்த பகுதிக்கு அதிக வெளிநாட்டு வியாபாரி களும், சுற்றுலாவினரும் வருவார்கள். (இங்கு தொடர்ந்து நடக்கும் வேலை நிறுத்தங்களி னாலும் கடையடைப்புகளாலும் முடங்கிக் கிடக்கும் மாநிலங்களால் உற்பத்தியும், லாபமும்தான் பாதிக்கப்படுகின்றன.)

இப்படி மோதல்களை தீர்த்து வைப்பதன் மூலம் இப்பகுதி இளைஞர்களுக்கு புதுத் தெம்பும் அமைதியாகவும், தன்மானத்தோடும் நியாயமாகவும் நல்ல எதிர்காலத்தை எண்ண முடியும் இப்படி அரசியல், சமூக மற்றும் பொருளாதார வேற்றுமைகளை களைவதன் மூலமும்தான இந்தப் பகுதிக்கான நல்ல எதிர் கால முன்னேற்றம் அமைய முடியும். •

# வடகிழக்கு இந்தியாவில் நீர்வழிகள்

– டாக்டர் விஷ்வபதி திரிவேதி

நீர்வழிகளை போக்குவரத்துக்காக பயன்படுத்துவது இந்தியாவில் புதியது ஒன்றுமல்ல. அக்பர் காலத்திலிருந்தே யமுனை மற்றும் கங்கை நதிகள் மக்களையும், பொருட்களையும் எடுத்துச்செல்ல பயன்படுத்தப் பட்டுள்ளன. பிறகு, ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் பல நீர்நிலைகள் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டன. நாடு சுதந்திரமடைந்த தற்கு பிறகு, ரயில் மற்றும் சாலை போக்குவரத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் பட்டு நீர்வழி போக்குவரத்து குறைந்தது. நாட்டில் *14,500* கிலோமீட்டர் தொலைவில் நீர்வழி பாதைகள் இருந்தபோதும், கடந்த ஆண்டுவரை *4500* கிலோ மீட்டர் தூரம் வரைதான் தேசிய நீர்வழிப் பாதைகளாக அறிவிக்கப்பட்டிருந்தன. தற்போது அரசு இதில் தீவிரமாக செயல்பட்டு மேலும் *106* நீர்வழிப் பாதைகளை தேசிய நீர்வழிப் பாதைகளாக அறிவித்துள்ளது. இதனால், மொத்த தேசிய நீர்வழிப் பாதைகளின் எண்ணிக்கை *111*ஆக உயர்ந்துள்ளது. இதில் *19* நீர்வழிகள் வடகிழக்கு இந்தியாவில் உள்ளன. (அட்டவணையில்–1ல் காண்க)

இப்போது புதிதாக வடகிழக்கில் அறிவிக்கப்பட்டுள்ள தேசிய நீர்வழிகள் அந்தப் பகுதியில் நிச்சயமாக புதிய மற்றும் மாற்று போக்குவரத்து உள் கட்டமைப்புகளை உருவாக்கும். வடகிழக்கில் உள்ள நீர்நிலைகளில் போக்குவரத்து வழிகளை நாம் இன்னமும் முழுமையாக பயன்படுத்தவில்லை. தேசிய நீர்வழிகள் *(NW 2)*, அதாவது *891* கிலோ மீட்டர் தூரம் கொண்ட பிரம்மபுத்திரா நதி, சாதியாவிலிருந்து வங்க தேச எல்லை துப்ரி வரையிலான நீர்வழியில் அதிக வாய்ப்புகள் இருந்தும், இந்தப் பகுதியை பயன்படுத்த முழுமையான திட்டங்கள் உருவாக்கப்படவில்லை. இந்தப் பகுதியில் மனிதர்களும் பொருட்களும் பாதுகாப்பாக எப்போதும் பயணம் செய்ய முடியும்.

அட்டவணை - 1

| மாநிலம் | நதிகள் / வாய்கால்கள் எண்ணிக்கை | நதிகள் / வாய்கால் பெயர் |
|---|---|---|
| அருணாசல பிரதேசம் | 1 | லோஹித் |
| அஸ்ஸாம் | 14 | ஆய், பாரக், பேகி, தன்சிரி / சாதே, தேஹிங், திகு, தோயன்ஸ், கன்காதர், ஜின்ஜிராம், கோபிலி, லோஹித், புதிமாரி, சுபன்சிரி மற்றும் த்லவாங் (தலேஸ்வரி) |
| மேகாலயா | 5 | கனோல், ஜின்ஜிராம், கைன்ஷி, சிம்சாங் மற்றும் உமன்கோட் (தாவ்கி) |
| மிசோராம் | 1 | த்லவாங் (தலேஸ்வரி) |
| நாகாலாந்து | 1 | திஸூ - ஸூங்கி |
| | 19 | |

குறிப்பு: லோஹித், ஜின்ஜிராம் மற்றும் த்லவாங் ஆகிய நீர்வழிகள் வடகிழக்கில் ஒன்றுக்கும் மேற்பட்ட வடகிழக்கு மாநிலங்களில் உள்ளன. ஆகவே, வடகிழக்கில் பத்தொன்பது நீர்நிலைகள். கங்காதர் நீர்வழி அஸ்ஸாமிலும் மேற்கு வங்கத்திலும் உள்ளது.

**டாக்டர் விஷ்வபதி திரிவேதி,** தலைவர், தேசிய கப்பல் துறை வாரியம் கப்பல் துறை, அமைச்சகம், இந்திய அரசு.

பாசிகாட் அருகிலுள்ள பிரம்மபுத்திராவின் மேட்டு பகுதிகளில் தொடர்ந்து போக்குவரத்து இருந்தாலும் படகுகளின் எண்ணிக்கையும், கொள்ளளவும் குறைவாகவே உள்ளதால் போக்குவரத்தும் குறைவாகவே உள்ளது. அந்தப்பகுதியில் இராணுவமும் தங்களுடைய வண்டிகளை இந்த நதியை கடக்க பயன்படுத்துகிறது. இரண்டாவது நீர்வழி துவக்கத்திலுள்ள துப்ரி இந்த நூற்றாண்டின் துவக்க காலத்தில் ஒரு வகையான துறை முகமாக செயல்பட்டது. ஆனால், அது தொடர்ந்து பயன்பாட்டில் இல்லை. இந்த நீர்வழிப்பாதையில் இந்தியா மற்றும் வங்க தேச பகுதிகளுக்கான மீன் மற்றும் காய்கறிகள் போக்குவரத்து பெரிய அளவில் உள்ளது (படம் 1 காண்க)

## இந்தியா வங்க தேச உடன்படிக்கை நீர்வழி

திட்ட வல்லுனர்கள் மிகுந்த நல்ல எண்ணங்களுடன் தேசிய நீர்வழி–2ஐ தேசிய நீர்வழி–1 உடன் (ஹூக்ளி / கங்கை) இந்திய வங்க தேச உடன்பாட்டு நீர்வழி தடத்தின்கீழ் இணைத்தனர். ஆனால் இரண்டு நாடுகளுக்குமிடையேயான எல்லை பிரச்சினைகள், வங்கதேசத்தில் பயணிப்பது, வங்க தேசத்தில் நீர்வழிப்பாதைகள் போதுமான அளவு உருவாக்கப்படாதது, வங்க தேசத்தில் பத்மா நதியில் உடன்பாட்டு வழியில் போதுமான அளவு ஆழமில்லாதது ஆகியவற்றால் இந்த வழி நன்றாக செயல்படும் ஒரு மாற்று வழியாக அமையவில்லை. உண்மையில் வடகிழக்கு பகுதியில், பொது உணவு பங்கீட்டிற்காக நியாயவிலைக் கடைகளிலும் /

படம்–1

**தேசிய நீர்வழிகள்–2**

**பிரம்மபுத்திரா: சாதியாவிலிருந்து துப்ரி (வங்கதேச எல்லை வரை) 891 கி.மீட்டர்.**



படம் – 2



இந்திய வங்க தேச உடன்பாட்டு நீர்வழிகள்
தேசிய நீர்வழிகள் ஒன்று, இரண்டு, ஆறு இணைப்பு

ரேஷன் கடைகளிலும் பொருட்களை வழங்க இந்த உடன்பாட்டின் அடிப்படையிலான நீர்வழிப்பாதையை உபயோகப்படுத்தி பல கோடி ரூபாய்களை சேமிக்க முடியும். அதோடு சாலை போக்குவரத்தில் ஏற்படும் நெருக்கடியையும் தவிர்க்கமுடியும். இந்திய உணவுக் கார்ப்பரேஷன் இந்த முயற்சியை எடுக்கவில்லை. அப்படி சில முயற்சிகளை எடுத்தாலும் வடகிழக்கு பகுதிகளுக்கு உணவு பொருட்களை எடுத்துசெல்வதில் வெற்றி காணவில்லை (படம் – 2).

இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம் தேசிய நீர்வழி இரண்டில் உள் கட்டமைப்புகளை ஏற்படுத்த திட்டமிட்டு இருந்தாலும் இன்னும் செய்ய வேண்டியது நிறைய உள்ளது. பாண்டுவில் சரக்கு முனையமும் ரயில் கட்டமைப்பும் உருவாக்கப்பட்டிருந்தாலும் போதுமான அளவு சரக்கு போக்குவரத்து ஏற்படவில்லை. இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம் துப்ரியில் சரக்கு முணையம் ஒன்றை ஏற்படுத்தி உள்ளது. ஆனால், நதியின் எதிர்புறத்திலுள்ள ஹத்சிங்மாரியில் கரை உடைப்பு காரணமாக சரக்கு முனையம் ஏற்படுத்தப்படவில்லை. உடன்பாட்டு நீர் வழியின் மற்றொரு பகுதியின் அதாவது கரிம்கஞ்ச் மற்றும் அஷூகஞ்ச் போகும் பகுதியில் ஏதாவது ஒரு காரணத்திற்காக ஏற் படும் சச்சரவுகளினால் போக்குவரத்து தடை பட்டுள்ளது.

தற்போது கப்பல் துறை அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள வடகிழக்கு பகுதிக்கான 19 கூடுதல் நீர்வழிப்பாதைகளை சிறப்பாக பயன்படுத்தி ஒருங்கிணைந்து வடகிழக்கு பகுதியில் மக்கள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தை சிறப்பாக ஏற்படுத்த மத்திய அரசுக்கு இப்போது வாய்ப்புள்ளது. •

# வடகிழக்கு மாநிலங்களில் கல்வியும் வேலைவாய்ப்பும் அதற்கான வழிகளும்

**– டாக்டர் நடாலி வெஸ்ட் கர்ஹோங்கர்**

மார்ச் 2011 கணக்கெடுப்பின்படி பார்க்கும் போது, எட்டு மாநிலங்களை உள்ளடக்கிய வடகிழக்கு மாகாணம் 77.76 விழுக்காடு கல்வியறிவு பெற்றதாக இருந்தது. கல்வி அறிவின் தேசிய சராசரி 74.04 விழுக்காடு. வடகிழக்கு மாநிலங்களில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்த போதிலும், இங்கு கல்வி முறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. பலவிதமான சவால்கள், போதாமைகள் ஆகியவற்றால் கல்வி பாதிப்பு கண்டுள்ளது. உயர்நிலைக் கல்வியைப் பொறுத்தவரை, எண்ணற்ற இளைஞர்கள் வெளிமாநிலங்களுக்குச் சென்று தொழில்நுட்பக் கல்வியைக் கற்று வருகின்றனர். கல்வி முறை இங்கு பெரும்பகுதி மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இங்கு கற்பிக்கப்படும் கல்வி தேசிய அளவில் கற்பிக்கப்படும் கல்விக்கு இணையானதாக இல்லை. கல்வி கற்பதில் பாரம்பரியமான பழைய முறைகளையே வடகிழக்கு மாநிலங்கள் இன்னமும் கடைபிடித்து வருகின்றன. ஒரே மாதிரியான கல்வி கட்டமைப்பு நிலவுவதால் மாணவர்கள் வெளியேறுகின்றனர். கல்வி பயில்வோரின் இடை நிற்றல் விகிதம் அதிகரிப்பதற்கும் இது காரணமாகிறது. 1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் மாணவர்களில் 50.05 விழுக்காடு பேர் படிப்பை பாதியில் நிறுத்தி விடுகின்றனர். 2011–12ஆம் ஆண்டில் தேசிய அளவில் இடைநிற்றல் விகிதம் 40.8 விழுக்காடு.

தொழில்நுட்பப் பயிற்சிகளே இல்லாத வெறும் ஏட்டுக்கல்வியினால் மாணவர்களுக்கு வேலைக்குரிய திறன்கள் இல்லாத நிலையும், வேலை வாய்ப்பு இன்மையும் இங்கே நிலவுகின்றன. உயர்நிலைப்பள்ளிப் படிப்பு / பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு / முதுநிலைப்படிப்பு படித்தவர்களின் எண்ணிக்கை ஏராளமாக இருக்கிறது. ஆனால் இவர்கள் வேலை இல்லாமலும், பொருத்தமில்லாத வேலைகளைச் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். தேசத்தின் மற்ற பகுதிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தரமான கல்வி வாய்ப்புகளும், தொழில்கல்வி நிறுவனங்களும் வடகிழக்கில் குறைவாகவே இருக்கின்றன. இத்தகைய எதிர்மறை அம்சங்களால் மட்டுமின்றி வடகிழக்கில் நிலவிவரும் பந்த்,போராட்டங்கள் போன்ற புறநிலைக் காரணங்களாலும் கல்வி இங்கு பாதிப்புக்கு உள்ளாகிறது. ஒரு ஆண்டில் 100 நாள்களுக்கு கூட வகுப்புகள் நடைபெறாமல் போவதும் உண்டு. இதன் காரணமாக பெற்றோர் தங்கள் குழந்தைகளை வேறு மாநிலங்களுக்கு கல்வி பயில அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இவ்வாறு அனுப்புவதால் குழந்தை கடத்தல் போன்ற ஆபத்துக்களையும் பெற்றோர் சந்திக்க நேரிடுகிறது. 12 வயதுக்கும் குறைவான குழந்தைகள் மணிப்பூர் மாநிலத்திலிருந்து வெளியில் செல்லக் கூடாது என்று உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்ததற்கான காரணங்களுள் இதுவும் ஒன்று.

திருப்திகரமில்லாத கல்வி முறையைத் தவிர, ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிகளும் கூட வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களின் இடப்பெயர்வுக்கு வழிவகுக்கும் ஒரு காரணியாகும். அசாமில் ULFA, கர்பி – அங்லாங்க் பிரச்னை, நாகாலாந்தில் நாகலிம் பிரச்னை, நாகா–குகி மோதல், அருணாசல பிரதேசத்தில் சக்மா ஹஜாங் – அருணாசலீஸ் மோதல் மற்ற வடகிழக்கு மாநிலங்களில் உள்ளூர் மக்களுக்கும், வெளியில் இருந்து வந்து குடியேறியிருப்பவர்களுக்கும் இடையே நடக்கும் மோதல், தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான மோதல் போன்றவை வடகிழக்கில் சில மாநிலங்களில் வாழ்க்கையை கடினமானதாகவும் வலி தருவதாகவும் மாற்றியுள்ளன. வடகிழக்கில் நிலவும் சமூக அரசியல் அமைதியின்மை, தீவிரவாத

---

**டாக்டர் நடாலி வெஸ்ட் கர்ஹோங்கர்**, இணைப்பேராசிரியர், IIM ஷில்லாங்கில் உள்ள CEDNER அமைப்பின் தலைவர்.

குழுக்களின் பெருக்கம், இரத்தக்களரி, அடுத் தடுத்து நடக்கும் வேலை நிறுத்தங்கள், ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம், அரசு இயந்திரங்களின் இயல்பு போன்ற பிரச்னைகள் சில பத்தாண்டுகளாக இந்தப்பகுதியில் மிகுதி யாக காணப்படுகின்றன. இந்தப் பிராந் தியத்தின் பல பகுதிகளில் வாழ்க்கை அச்சுறுத் தலைத் தருவதாக இருக்கிறது. வருடத்திற்கு 100 நாள்களுக்கும் மேல் நடக்கும் போராட் டங்கள், கடை அடைப்பு, பள்ளி கல்லூரிகள் மூடப்படுவது, பொதுப் போக்குவரத்து நிறுத்தம் போன்றவற்றால் இயல்பு வாழ்க்கை முடக்கப்படுகிறது. பல பகுதிகளில் இரண்டு மணி நேரத்திற்கு மட்டுமே மின்சாரம் கிடைக்கிறது. வாரத்திற்கு ஓரிரு முறைகளே தண்ணீர் வழங்கப்படுகிறது. சந்தைகளும் கடைகளும் மாலை 4 மணிக்குப் பிறகு மூடப் பட்டுவிடும். 8 மணிக்குப் பிறகு தெருக்கள் வெறிச்சோடி கிடக்கும். இரவு ரோந்து வரும் காவலர்களாலோ அல்லது தீவிரவாதிகளாலோ யார் வேண்டுமானாலும் கடத்தப்படலாம், தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்படுவதுடன் கொல்லவும் படலாம்.

இத்தனை அமளிகளுக்கு மத்தியிலும் வட கிழக்கு மாநில மக்கள் பல ஆண்டுகளாக தத்தமது கிராமங்களிலும், நகரங்களிலும், பெரு நகரங்களிலுமே வாழ்ந்து வந்தனர். உலக மயமாதல் கொள்கை இந்தியப் பெரு நகரங் களை எட்டும் வரை தங்கள் மாநிலங்களை விட்டுச் செல்ல அவர்கள் விரும்பவில்லை. உலகமயமாதல் காரணமாக பல ஆதாயங்கள் கிடைக்கப்போகிறது என்ற ஈர்ப்பின் காரண மாக BPO கம்பெனிகள், வணிக வளாகங்கள் போன்றவற்றில் வேலை தேடி இளைஞர் கள் இடம்பெயர ஆரம்பித்தனர். அரசாங்க வேலைகளும், தனியார் வேலைகளும் வட கிழக்கு மாநிலங்களில் குறைவாக இருந்தும் இதற்கு ஒரு காரணம். வெவ்வேறுபட்ட இனத் தவர்கள் வாழும் சமூகங்களில் உருவான முரண் பாடுகளும், ஆட்சிக்கு எதிராக கலகங்களும் கிராமங்களை நசிவடையச் செய்தன. பலர் கொல்லப்பட்டனர். பலர் வீடிழந்து அனாதை களாயினர். மாநிலத்திற்குள்ளேயும், நண்பர்கள் உறவினர்களுடன் வெளி மாநிலங்களை நோக்கியும் பலர் இடம் பெயர்ந்தனர். தில்லி, மும்பை, பங்களூரு போன்ற பெரு நகரங் களுக்கு இவர்கள் வந்து சேர்ந்தனர்.

வடகிழக்கு மாநிலங்களில் சிறிய, பெரிய ஆறுகள் பல ஓடுகின்றன. இவற்றில் ஏற்படும் வெள்ளப்பெருக்கின் காரணமாக அடிக்கடி நீர் தேங்கி நிற்றல், பெருமளவு நிலப்பரப்பு நீரில் மூழ்குதல் ஆகிய பிரச்னைகள் உருவா கின்றன. இதனால் போக்குவரத்து, தகவல் தொடர்பு ஆகியவற்றில் ஏராளமான பிரச் னைகள் உருவாகி வருவாய் இழப்பு ஏற்படு கிறது. இதனால், தகுதிபெற்ற மாணவர்கள் ஊர்களை விட்டு வெளியேறி வேலை தேடிப் புறப்படுகின்றனர். மின்சார வசதி, இணையதள வசதி போன்ற நவீன வசதிகளுக்கு இங்கு பற்றாக்குறை நிலவுகிறது. உள்ளடங்கி இருக்கும் பகுதிகளுக்கு உள்ளூர் பத்திரிகைகள் கூட வந்து சேர முடியாத நிலைமையும் இருந்தது. அச்சு ஊடகங்களிலும், மின்னணு ஊடகங்களிலும் வடகிழக்கு மாநிலங்கள் பற்றிய செய்திகள் இடம் பெறாமல் போனதும் பிரச்னையானது. தில்லி நகரம் வடகிழக்கு மாநிலத்தவருக்கு வசிப்பிடமும் வாழ்வும் தரக்கூடிய பொருத்த மான இடமாகி வருகிறது.

வடகிழக்கில் இருந்து நாட்டின் பிற பகுதிகளுக்கு மக்கள் இடம் பெயர்வதைக் குறைப்பதற்கு கல்வி முறையில் முழுமை யான மாற்றம் தேவைப்படுகிறது. எண்ணிக் கையைக் காட்டிலும் தரத்தில் கவனம் செலுத்துவது, தொழில் பயிற்சிகள் தருவது, ஆராய்ச்சி, தொழில் முனைவுச் சிந்தனை களை உருவாக்குவது ஆகியவற்றில் கவனம் செலுத்துவது ஆகியவை கட்டாயம் தேவைப் படுகின்றன. தொழில்நுட்பம் சார்ந்த, தொழில் நுட்பமல்லாத நிறுவனங்களில் CSR முன் முயற்சியினால் வேலைபெறும் தகுதியை உருவாக்குவதற்கான திறன் பயிற்சிகளைத் தருவதற்கு கம்பெனிகள் முன்வந்தன.

இந்தியாவில் உற்பத்தி, தொழில்முனைவு, *Start-up* ஆகிய திட்டங்களின் ஆதாயங்களைப் பெற்றுக்கொண்டு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு ஏற்ற சந்தர்ப்பங்கள் பற்றி ஆராயும்போது, வடகிழக்கு மாநிலங்களில் வேலைகளுக்கான எதிர்காலத் தேவைகள் (ஆரம்பநிலை, இரண்டாம் நிலை, சேவைத்

துறை ஆகியவற்றில்) பற்றிய தரவுகள் தேவைப் படுகின்றன. தாதுப்பொருள்கள், வனங்கள், பெட்ரோலிய எரிவாயு, நீர், மீன் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, சுற்றுலா ஆகிய வளங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் உருவாக இருக்கும் வேலை வாய்ப்புகள் பற்றிய தரவுகள் தேவைப்படு கின்றன. இதுதவிர, பாடத்திட்டங்களிலும் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆசிரியர்களின் செயல்பாடு, விடுமுறைக் காலங்களில் ஆசிரியருக்கும், மாணவருக்கும் பயிற்சிகள், பயிற்றுவிப்பதில் புதுமையான கருவிகளின் அறிமுகம், திறன் வளர்ப்பை மையமாகக் கொண்ட கல்வி போன்றவையும் தேவைப்படுகின்றன.

வடகிழக்கில் வாழும் பெரும்பாலான மக்கள் ஆங்கிலம் பேசுபவர்கள். பல்வேறு பண்பாட்டுக் கலவைகள் இங்கு உள்ளன. அதிகப் படியாக இருக்கும் கல்வியறிவு முழுமையாகப் பயன் கொள்ளப்பட வேண்டும். எண்ணற்ற ஆய்வுகள்,கருத்தரங்குகள்,பயிற்சிப்பட்டறைகள், மாநாடுகள், சிந்தனை அரங்கங்கள், கலந் துரையாடல்கள் போன்றவை பல்வேறு அமைப்புகளின் சார்பாக இங்கு நடத்தப் பட்டுவருகின்றன. இவற்றில் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. எனவே, இப்போதைய தேவை என்பது உடனடி நடவடிக்கைதான். சரியான அணுகுமுறையும், செயல் திறனுமே இப்போது வேண்டப்படுகிறது. வடகிழக்கு மாநிலங்களை சிறந்த கல்வி மையமாகவும், சுற்றுலா மையமாகவும் மாற்றியமைப்பது குறித்து அரசுத்துறைகளும், *ICC, FICCI, FINER* மக்கள் குழுக்கள் போன்றவை பல்வேறு நிலைகளில் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும். வடகிழக்கில் சுற்றுலாவிற்கு இருக்கக்கூடிய அதீதமான வாய்ப்புகள் பற்றி மிக அதிகமாகவே பேசப்பட்டிருக்கிறது. திட்டமிடலும், செயல் படுத்தலுமே இப்போதைய தேவை. இங்குள்ள முக்கியமான சுற்றுலா மையங்களை இணைக் கக்கூடிய உள்கட்டமைப்புகளை விரைவாக அமைப்பதற்கு பல நோக்கு அணுகுமுறை இருக்க வேண்டும். *YHA* போன்ற மலை ஏற்ற முகமைகளுக்கு ஊக்கம் தரப்பட வேண்டும். சுற்றுலாப் பயணிகள் மலை ஏற்றம் செய்யவும், சூழல் சுற்றுலாவை வளர்க்கவும் இது உதவும். அது போலவே, சாகச விளையாட்டுகளுக்கென ஒரு மையத்தை உருவாக்கி திறமையான பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சிகளை வழங்கவேண்டும். வடகிழக்கின் சுற்றுலாக் கொள்கை மிக முக்கியமானது. கோவா, கேரளா ஆகியவற்றிற்கு இணையாக வடகிழக்கையும் சுற்றுலா மையமாக மாற்றும் வகையில் இந்த முயற்சி அமைய வேண்டும்.

நிறுவனங்களில் பிரச்னைகள் நிலவு கின்றன. இதனைத் தவிர்ப்பதற்கு மக்கள் சமூகங்களை அடிப்படையாகக் கொண்ட துணை அமைப்புகள் உருவாக்கப்பட்டு கடன் வழங்கும் முறைகள் சீரமைக்கப்பட வேண்டும். வடகிழக்கின் பாரம்பரியமான உள்நாட்டுச் சந்தை மிக முக்கியமான ஒன்று. வடகிழக்கின் அருகில் வங்கதேசமும், மியான்மரும் அமைந் துள்ளன. வடகிழக்கு ஆசிய தேசங்களின் முக்கியமான நுழைவாயிலாக இந்தப் பிராந் தியம் திகழ்கிறது. இங்கிருக்கும் வாய்ப்புகளை நிதி நிறுவனங்கள் ஆராய்ந்து அறிந்து வங்கிப் பரிவர்த்தனைகளின் மூலம் வேலை வாய்ப்பு களை உருவாக்குவதற்கு உதவிட வேண்டும்.

வடகிழக்கு மாநிலங்களுக்குள்ளாகவே பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்பட்டு தேயிலை, காபி, வாசனைப் பொருட்கள் போன்றவற்றின் பொருளாதாரப் பயன்களைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். தேவைக்கு ஏற்ற தொழில்நுட்பங்களை சாதாரண மக்களும் பயன்படுத்தும் வகையில் உருவாக்குவதற்கு ஆராய்ச்சி, வளர்ச்சி மையங்களின் ஆதரவு தேவைப்படுகிறது. திறமையான சந்தை முறை களுக்கு சிறப்பானதொரு வழங்கல் தொடர் மாதிரி தேவைப்படுகிறது. இதற்கு *IIM* ஷில்லாங் போன்ற நிறுவனங்கள் உதவலாம்.

இவை அனைத்திற்கும் மேலாக அரசியல் மனத்திட்பம், அதிகாரிகளின் ஆதரவு, அக்கறை, சிறந்த நிர்வாகம், தொழில் செய் வதற்கு உகந்த சூழல், தனியார் – அரசு பங்கேற்பு மாதிரிகள் ஆகியவை முக்கியமானவை. தற்போதைய கல்வி முறையை சரி செய்யவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், மக்கள் இடம் பெயர்வதைக் குறைக்கவும், அரசிற்கு எதிரான கலகங்கள் பற்றி ஆராய்ந்து தீர்வு காணவும் அத்துணை முயற்சிகளும் ஒன் றிணைக்கப்பட வேண்டும். •

# அரசியல் சட்டத்தின் ஆறாவது அட்டவணை: மலைவாழ் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் தானியங்கி மாவட்ட கவுன்சில்களின் பங்கும் பணிகளும் மேகாலய மாநில நிலைமை

– டாக்டர் சிந்தாமணி ரௌத்

மேகாலயா, ஒருங்கிணைந்த காசி ஜெயிந்தியா மலைகள் மாவட்டம் மற்றும் காரோ மலைகள் மாவட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய சுய அந்தஸ்து பெற்ற மாநிலமாக ஏப்ரல் 2, 1970ல் உருவாக்கப்பட்டது. ஜனவரி 21, 1972ல் முழு மாநில அந்தஸ்து பெற்ற மாநிலமானது. தன்னாட்சி மிக்க உள்ளூர் அரசாட்சி ஜனநாயகத்தின் அடிப்படையாகும். காசி பழங்குடி மக்களுக்கு அவர்களுக்கே உரித்தான சமூக அரசியல் அமைப்புகள் தங்களுடைய பாரம்பரியத்தில் ஊன்றி இருந்தன. அவற்றை பாரம்பரிய சுய ஆட்சி அமைப்புகளாக கருதலாம். இந்த அமைப்புகள் இன்றும் கூட அன்றாட நிர்வாகத்துக்கு பொறுப்பேற்கின்றன. காசி மலைப்பகுதிகளில் சுய அரசாட்சி கொள்கை என்பது பல நூற்றாண்டுகளாக இருந்துவரும் ஒன்று. இந்த மலைவாழ் மக்கள் தங்களின் அடிப்படை சமுதாய நிலைமைகளை பல யுகங்களாக பயமின்றி வெளிப்படுத்தப்பட்ட பொது கருத்துக்கள் மற்றும் ஒப்புதல்களின் அடிப்படையில் மேற்கொண்டு வந்தனர்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு, நமது அரசியல் அமைப்பு சட்டத்தை இயற்றியவர்கள் வடகிழக்கு இந்திய பகுதியில் உள்ள மலைவாழ் மக்களின் நிலம் மற்றும் கடல்சார் வளங்கள் உள்ளிட்ட தேவைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதை ஏற்றுக்கொண்டனர். இதன் அடிப்படையில் தானியங்கி மாவட்ட கவுன்சில்கள் அரசியமைப்பு சட்டத்தின் ஆறாவது அட்டவணையில் இடம் பெற்றன.

ஆகவே, இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் ஆறாவது அட்டவணையின் கீழ் ஒருங்கிணைந்த காசி மற்றும் ஜெயந்தியா மலைப்பகுதி மாவட்டங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த காசிஜெயந்தியா தானியங்கி மாவட்டக் கவுன்சில் முதலில் அமைக்கப்பட்டு பிறகு அது காசி மலைப்பகுதி தானியங்கி மாவட்டக் கவுன்சில் மற்றும் ஜெயந்தியா மலைப்பகுதி தானியங்கி மாவட்ட கவுன்சில் என்று இரண்டாக பிரிக்கப்பட்டது. காசி மலைவாழ் தானியங்கி மாவட்டக் கவுன்சில், கிழக்கு காசி மலைப்பகுதி, மேற்கு காசி மலைப்பகுதி மற்றும் ரி பாய் மாவட்டங்களில் செயல்பட்டது. மேகாலய மாநிலத்தின் காரோ பகுதியின் பொறுப்புக்கு காரோ மலைப்பகுதி கவுன்சில் இருக்கும்.

ஆறாவது அட்டவணையில் முதல் பத்தியின்படி (‘ரத்து 244 மற்றும் 275) மாநில ஆளுநர் ஒரு அறிவிப்பின் மூலம் புதிய தானியங்கி மாவட்டத்தை உருவாக்கலாம்; எந்த ஒரு தானியங்கி மாவட்டத்தின் எல்லையையும் குறைக்கலாம்; இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது சில பகுதிகளை இணைத்து ஒரு புதிய தானியங்கி மாவட்டத்தை உருவாக்கலாம்; ஒரு தானியங்கி மாவட்டத்தின் எல்லைகளை நிர்ணயிக்கலாம்; எந்த ஒரு தானியங்கி மாவட்டத்தின் பெயரையும் மாற்றலாம். இவைகள் அனைத்தையும் இதற்காக தனியாக நியமிக்கப்பட்ட ஒரு குழுவின் பரிந்துரையைப் பெற்றுச் செய்ய வேண்டும். இம்மாதிரியான செயல்களுக்கு மாநில ஆளுநரே இறுதி பொறுப்பு ஏற்பார்.

**மாவட்ட கவுன்சில்கள் மற்றும் வட்டார கவுன்சில்கள் உருவாக்கம்**

**டாக்டர் சிந்தாமணி ரௌத்,** கூடுதல் பேராசிரியர் மற்றும் தலைவர், சட்டத்துறை, வடகிழக்கு மலைசார் பல்கலைக்கழகம், ஷில்லாங்.

ஒவ்வொரு தானியங்கி மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட கவுன்சில் இருக்க வேண்டும். அதில் 30க்கும் மேற்படாத உறுப்பினர்கள் இருப்பார்கள். ஆளுநர் அதிகபட்சமாக நான்கு பேரை நியமிக்கலாம். மற்றவர்கள் மக்களின் வாக்குகள் பெற்று தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த அட்டவணையின்கீழ் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியே வட்டாரக் கவுன்சில்கள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டக் கவுன்சிலும், வட்டார கவுன்சிலும் அந்த மாவட்டத்தின் பெயரிலும், வட்டாரத்தின் பெயரிலும், ஒரு நிறுவனம் போன்று செயல்பட்டு அது வழிவழியாக தொடர்ந்து நிலைத்து அதன் பெயரிலும் பொதுவான அடையாள முத்திரையும் கொண்டு அந்த அடிப்படையில் அந்த அமைப்பு மற்றவர்கள் மீது வழக்குத் தொடரமுடியும், மற்றவர்களும் அவைகளின் மீது வழக்குத் தொடர முடியும். தற்போது உள்ள பழங்குடி மக்கள் கவுன்சில் அல்லது மற்ற பிற பழங்குடி மக்களின் அமைப்புகள் ஒரு தானியங்கி மாவட்டத்திலோ, வட்டாரத்திலோ செயல்படுபவர்களோடு கலந்தாலோசித்து மாவட்டக் கவுன்சில் மற்றும் வட்டார கவுன்சில்களின் செயலாக்கத்திற்கான விதிகளை முதன்முதலில் ஆளுநர் உருவாக்குவார். அந்த விதிகளின்படி, மாவட்ட கவுன்சில் மற்றும் வட்டார கவுன்சில்களின் அமைப்பு, அவைகளின் உறுப்பினர்களின் அமைப்பு மற்றும் பொறுப்பு, அவைகள் செயல்படுவதற்கான முறைகள் மற்றும் அவைகளுக்கான அலுவலர்களை நியமிக்கும் முறைகள் ஆகியவைகள் அடங்கும். மாவட்டக் கவுன்சில்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் பதவியில் இருப்பார்கள். ஐந்து ஆண்டிற்கு முன் வட்டாரக் கவுன்சில் கலைக்கப்படும் நாள் வரை பதவியில் இருப்பார்கள். ஆளுநரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், ஆளுநர் விருப்பப்படும் வரை பதவியில் இருப்பார்கள்.

## சட்டங்களை இயற்ற மாவட்ட மற்றும் வட்டார கவுன்சில்களுக்கு அதிகாரங்கள்

தானியங்கி பகுதிக்கான வட்டாரக் கவுன்சில் மற்றும் தானியங்கி மாவட்டத்திற்கான மாவட்டக் கவுன்சில் அவரவர்களுக்குண்டான பகுதிகளில் உள்ள ஒதுக்கப்பட்ட வனப் பகுதிகளை பயன்படுத்துவது பற்றியும் அதை விவசாயம், மேய்ச்சல், தங்குமிடம், மற்றும் பிற விவசாயம் அல்லாத தேவைகளுக்காகவும் இந்த கிராம, நகர பகுதிகளில் வசிக்கும் மக்களின் மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்துவதற்கான சட்டங்களை இயற்ற அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இது அல்லாமல், ஒதுக்கப்படாத பிற காடுகள், வாய்க்கால் அல்லது மற்ற நீர்வழிகளை விவசாயத்திற்காகப் பயன்படுத்துதல், பழங்குடி மக்களின் பழக்கப்படி விவசாய முறைகளை மேற்கொள்ளுதல், கிராம, நகர கவுன்சில்களை அமைத்து அவைகளுக்கு அதிகாரங்களை வழங்குதல்,கிராம மற்றும் நகர நிர்வாகத்திற்காக காவல், பொதுச் சுகாதாரம், கழிவுநீர் வடிகால் உள்ளிட்டவைகளுக்கும், துறைத் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியவர்களை நியமிக்கவும் அவர்கள் பதவிக் காலத்திற்குப் பிறகு மற்றவர்கள் பொறுப்பேற்கவும் அந்த பகுதிகளிலுள்ள சொத்துக்களை வழிவழியாகப் பெறுதல், திருமணம், விவாகரத்து மற்றும் சமுதாய சடங்குகள் ஆகியவற்றிற்கான சட்டங்களை இயற்றவும் அதிகாரங்கள் உண்டு.

## தானியங்கி மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களில் நீதி வழங்குதல்

வட்டாரக் கவுன்சிலும், மாவட்ட கவுன்சில்களும் அவரவர்களுக்குட்பட்ட பகுதிகளில் கிராம கவுன்சில்கள் அல்லது நீதி மன்றங்களை அமைத்து பழங்குடி மக்களுக்கு இடையே நிகழும் வழக்குகளை பரிசீலித்து நீதி வழங்கவும் இந்த அமைப்புகள் செயல்படுவதற்கு தேவையானவர்களை நியமிக்கவும், அவைகள் செயல்படவும் இந்த அட்டவணையின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டங்களை செயல்படுத்தவும் அதிகாரம் உள்ளது. மாநில ஆளுநர் அவ்வப்போது வெளியிடும் உத்தரவுகளுக்கு ஏற்ப இந்த அட்டவணையின் கீழ் வரும் வழக்குகளை உயர்நீதி மன்றம் பரிசீலிக்கும்.

வட்டாரக் கவுன்சிலும், மாவட்ட கவுன் சிலும் ஆளுநரின் முன் அனுமதி பெற்று கிராம கவுன்சில்களையும் நீதி மன்றங்களை அமைப் பது, அவர்களின் அதிகாரங்கள், அவை செயல்படும் முறைகள், வழக்குகள் நடத்தும் முறைகள், மேல்முறையீடு, தீர்ப்புகளை செயல்படுத்துதல் மற்றும் ஆறாவது அட்ட வணையில் குறிப்பிட்டுள்ளவைகளை செயல் படுத்த விதிகளை உருவாக்கமுடியும்.

**ஆரம்பப் பள்ளிகள் ஆகியவற்றை அமைக்க மாவட்ட கவுன்சில்களின் அதிகாரங்கள்**

மாநில ஆளுநரின் முன் அனுமதியுடன் தானியங்கி மாவட்ட கவுன்சில் தன்னுடைய பகுதியில் ஆரம்பப் பள்ளிகள், மருத்துவ மனைகள், சந்தைகள், படகு போக்குவரத்து, மீன்பிடி செயல்கள், சாலைகள், சாலை போக்கு வரத்து, நீர்வழி போக்குவரத்து ஆகியவற்றை உருவாக்கி நிர்வகிக்கவும் அவைகளை செயல் படுத்துவதற்கான விதிகளை உருவாக்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப பள்ளிகளில் எந்த முறையில் கல்வி கற்பிக்கப் பட வேண்டும் என்பதை உறுதி செய்யும் அதி காரமும் மாவட்டக் கவுன்சிலுக்கு வழங்கப் பட்டுள்ளது. மாவட்ட கவுன்சிலின் அனுமதி யுடன் மாவட்ட ஆளுநர் இந்த கவுன்சிலுக்கு பொதுவாக மாநில அரசுகள் மேற்கொள்ளும் பணிகளான விவசாயம், கால்நடை பரா மரிப்பு, சமுதாய திட்டங்கள், கூட்டுறவு சங்கங்கள், சமூக நலம், கிராம மேம்பாட்டு திட்டங்கள் அமைப்பு மற்றும் பிற பணிகளை சில சட்டதிட்டங்களுக்கு உட்பட்டும் சில உட்படாமலும் செயல்படுத்த பொறுப்புக் களை வழங்க முடியும்.

**மாவட்ட மற்றும் வட்டார நிதியங்கள்**

ஒவ்வொரு தானியங்கி மாவட்டக் கவுன் சிலும், ஒவ்வொரு தானியங்கி வட்டாரத்திற்கும் ஒரு நிதியத்தை அமைக்க வேண்டும். இந்த நிதியத்திற்கு அரசியல் அமைப்பு சட்டத்தின் ‘ரத்துக்களின்படி அந்த மாவட்ட கவுன்சில் மற்றும் வட்டார கவுன்சில்கள் அந்த பகுதி களில் நிர்வகித்தலிலிருந்து பெற்ற பணத்தை செலுத்த வேண்டும். இந்த மாவட்ட நிதியம் அல்லது வட்டார நிதியத்தை நிர்வகிக்கவும் அதில் பணம் செலுத்தவும், எடுக்கவும், பாது காக்கவும் இது சம்மந்தமான பிற செயல் களைச் செய்யவும் ஏதுவான விதிகளை ஆளுநர் செய்வார். குடியரசுத் தலைவரின் அனுமதியுடன் இந்திய தணிக்கைத் துறை தலைவர் மாவட்டக் கவுன்சில் மற்றும் வட் டாரக் கவுன்சில்களில் கணக்குகள் எப்படி வைக்கப்பட வேண்டும் என்பதை நிர்ணயிப் பார். அதை அவர் எந்த முறையில் தணிக்கை செய்ய வேண்டும் என்பதை நிர்ணயித்து தணிக்கை செய்து அவரின் அறிக்கை ஆளு நருக்கு சமர்ப்பிக்கப்பட்டு கவுன்சிலின் முன் வைக்கப்படும்.

மலைவாழ் மக்களின் அனைத்து வகை யான மேம்பாட்டையும், நல்வாழ்வையும் வழங்குவதற்கான கருவிதான் இந்த மாவட்ட கவுன்சில். மேகாலயா மாவட்டத்தில் இந்த மாவட்ட கவுன்சில்களும், வட்டார கவுன்சில் களும் சிறப்பாக செயலாற்றி தங்களுடைய அரசியலமைப்புப் பொறுப்புகளை நிறைவு செய்துள்ளன. அதே சமயம் இவைகள் செயல்படும் சூழ்நிலையை வளமாக்கி திறமை பெற்றவர்களை கவுன்சில் தேர்ந்தெடுத்து மலைவாழ் மக்களுக்கு உண்மையாக உழைப் பவர்களை சேர்க்க வேண்டும். ஆறாவது அட்டவணையின்படி இந்த மாவட்டக் கவுன்சில் பழங்குடி மக்களின் வாழ்வு வளம் பெற நிலம், காடு, சந்தை, வியாபாரம், நடை முறைகள் போன்றவற்றிற்கு எப்போதுமே சட்டம் இயற்ற முடியும். நில வருவாய், ஆரம்பக் கல்வி மற்றும் அவசியமான சட்டங் களை இயற்ற இந்த கவுன்சிலுக்கு முழு சுயாட்சி உரிமை உண்டு. இந்த மாவட்டக் கவுன்சில் உறுப்பினர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்க வேண்டும். பொது மக்களை இந்த கவுன்சிலின் செயல்களில் ஈடுபடுத்த வேண்டிய தருணம் இது. இந்த இயக்கத்தை முழுமையாக ஆராய்ந்து மலைவாழ் மக்களின் நலனுக்காக அமைக்கப்பட்டுள்ள தானியங்கி மாவட்டக் கவுன்சில்கள் சிறப்பாக செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். •

# வடகிழக்கின் குவி மையம்: நலவால்வு மற்றும் இளையோர் நலத்திட்டங்கள் வழி வளர்ச்சி

– டாக்டர் அருணா பட்டாச்சார்யா சக்ரவர்த்தி

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவாதிக்கும்போது, அந்தப் பிர தேசத்தின் பல்வேறு பரிமாணங்களைப் பூரண மாகப் புரிந்துகொள்வது அவசியம். மேலும் செயல்படுத்த உள்ள திட்டங்களால் குறுகிய காலத்திலும் – நீண்ட காலத்திலும் ஏற்படக் கூடிய மாற்றங்களையும் விளைவுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மக்கள் தொகையில் பெரும்பான்மையோர் இளையோராக இருக்கக்கூடிய நம் நாட்டில் கல்வியும் சுகாதாரமும் வளர்ச்சியைக் காட்டும் இரு முக்கியக் குறியீடுகளாகத் திகழ்கின்றன. நோபல் பரிசு பெற்ற அறிஞர் அமர்த்தியா சென், “நீடித்து நிலைபெறும் பொருளாதார வளர்ச்சிக்கு கல்வியறிவு பெற்ற, ஆரோக் கியமான உழைப்பாளர்கள் தேவை” என்று கூறியுள்ளார். எவை நீண்டகால பொருளாதார வளர்ச்சி இலக்குகளை எட்ட வேண்டுமானால், தரமான கல்வியும், மேலான சுகாதார வசதியும் தரக்கூடிய வளங்களில் புத்திசாலித்தனமாக முதலீடு செய்தாக வேண்டும்.

## வடகிழக்கில் கவனம்

அருணாசலப்பிரதேசம், அசாம், மணிப்பூர், மேகாலயா, மிஸோரம், நாகலாந்து, திரிபுரா, சிக்கிம் ஆகிய எட்டு மாநிலங்களைக் கொண்ட பகுதியே வடகிழக்குப் பிராந்தியமாகும். இந்த மாநிலங்களின் எல்லைப் பகுதிகள் சுமார் 2000 கி.மீட்டர் தூரத்திற்கு பூடான், சீனா, மியான்மார் ஆகியன நாடுகளின் எல்லைப் பகுதிகளாக உள்ளன. நம் தேசத்தின் பிரதான நிலப்பகுதிக்கு வரும் வழியாக சுமார் 20 கி.மீ. மட்டுமே அகலம் கொண்ட மிகக் குறுகலான வழி ஒன்றே ஒன்றுதான் உள்ளது.

மானுட இன ரீதியாகவும், மக்கள் பேசுகின்ற மொழி ரீதியாகவும் பல்வேறு வேறுபடுகின்ற சிறப்புக்குரியது வடகிழக்குப் பிராந்தியம். இந்த ஏழு மாநிலங்களில் மட்டும் 166 வகையான மானுட இனக்குழுவினர் வசிக்கின்றனர். அவர்கள் பேசுகின்ற வட்டார வழக்குகளுக்குக் கணக்கில்லை. இயற்கை எழிலும், எண்ணற்ற மானுட இனக்குழுக்களும், புவியியல் ரீதியான பன்முகத் தன்மையும் இந்தியாவில் ஏனைய பகுதிகளில் இருந்து வடகிழக்குப் பகுதியை வேறுபடுத்திக் காட்டுகின்றன. அதனாலேயே இப்பகுதியின் வளர்ச்சியும் உரிய கவனம் பெறவில்லை.

## வடகிழக்கில் என்ன சிக்கல்?

புவியியல் ரீதியான சிரமங்களும், எளி தில் அணுக முடியாத தொலைதூரமும் வடகிழக்கின் பின்தங்கிய நிலைக்குக் காரண மாகச் சொல்லப்படுகின்றன. இவற்றைத் தவிர வேறு பல காரணிகளும், வடகிழக்கின் உரிய வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளா ததற்குப் பின்புலமாக உள்ளன. சமூக – அரசியல் காரணங்களுக்காக தொழில் துறை யினர் இப்பகுதியில் முதலீடுகளை மேற் கொள்ள முன்வரவில்லை. அதனாலேயே கட் டமைப்பு வசதிகள் ஏற்படவில்லை. கட்டமைப்பு வசதிகள் இல்லை எனில் வளர்ச்சி ஏது?

வடகிழக்குப் பகுதியின் வளர்ச்சிக்காக திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு அரசியல் அக்கறையின்மை காரணமானதால், திறமையாளர்கள் பின் னுக்குத் தள்ளப்பட்டு சுமாரானவர்கள் முன்னிலைக்கு வந்துவிட்டனர். சட்டம் – ஒழுங்கு முறையாகப் பேணப்படாமல், ஊழல் தலை எடுத்து, சமூக நீதி திரிபுக்குள்ளாகியது. இந்த நிலைமை மக்களிடையே – அதிலும் குறிப்பாக இளையோரிடையே எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவிட்டது. இலக்கியத் திற்காக நோபல் பரிசு பெற்ற மேதை பேர்ல் எஸ்.பக் என்பவர் இளையோரைப் பற்றிக் குறிப்பிடும்போது, “உசிதமான வகையில்

---

**டாக்டர் அருணா பட்டாச்சார்யா சக்ரவர்த்தி**, புதுதில்லியில் உள்ள இந்தியப் பொது சுகாதார நிறுவனத்தின் இணைப் பேராசிரியர்.

செயல்படப் போதிய விவரம் இல்லாததால், இளைஞர்கள் தலைமுறை தலை முறையாக, இயலாதவற்றைச் செயலாற்ற முனைந்து அதிலே வெற்றியும் பெற்றுவிடுகிறார்கள்'' என்று கூறியுள்ளார்.

**வடகிழக்கில் போதை மருந்துகள்:**

சர்வதேச எல்லையோடு ஒட்டியிருப் பதாலும், போதை வாணிகத்தின் 'தங்க முக் கோணம்' என்று சொல்லப்படுகின்ற பகுதிக்கு அண்மையில் இருப்பதாலும் வடகிழக்கு மாநிலங்களில் போதை மருந்துகள் பரவலாகப் புழக்கத்தில் உள்ளன. அண்மைக்காலமாக ஊசி மூலம் போதை மருந்துகளை ஏற்றிக் கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. அவர்களிடையே எச்.ஐ.வி. தொற் றும் பரவலாகக் காணப்படுகிறது.

போதைப் பொருளைப் பயன்படுத்து வோரிடையே முறையற்ற பாலியல் உறவுப் பழக்கமும் அதிகமாகக் காணப்படுகின்றது. போதை ஏற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் பொருள் முதற்கொண்டு, அவற்றைப் பெறும் வழிகள் வரை அறிந்துகொண்டு, போதைப் பழக்கத்தின் தீமைகளை குறைக்கும் ஆலோ சனைகளையும், அத்தகைய ஆலோசனை களைப் பெறும் வழிகளை எளிதாக அடை யவும் வழிகாட்ட வேண்டும். இந்தியாவில் ஊசி மூலம் போதை மருந்துகளை ஏற்றிக் கொள்வோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து எண் பதினாயிரத்திற்கும் மேலானது என்று ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது. இவர்களின் பெரும்பாலோர் மற்றவர் பயன்படுத்திய ஊசிகளையும் சிரிஞ்சுகளையும் பயன்படுத்து கின்றனர். மேலும் பாதுகாப்பற்ற உடலுறவுப் பழக்கங்களும் இவர்களிடையே இருப்பதால், மிக வேகமாக இப்பகுதியில் எச்.ஐ.வி. தொற்று பரவுகிறது.

போதைப் பழக்கத்தால் பாதிக்கப்படும் பெண்களின் நிலைமை மோசமானது. ஆணா திக்கச் சமூக அமைப்பில், போதை பழக்கத் தால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்வது அவர்களுக்குப் பெரும் சவாலாக இருக்கிறது. தமக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளும் மாற்று வழிகளைப் பின்பற்றும் வாய்ப்புகள் பெண்களுக்குக் கிடைப்பதில்லை. நடத்தை மாற்றும் தகவல் தொடர்புகளின் மூலம் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தும் வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும்.

ஊசிமூலம் போதை மருந்து ஏற்றிக் கொள் ளும் பெண்களுக்கும், பாலியல் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்களுக்கும் சமூகத்தில் பெருத்த புறக்கணிப்பு நிலவுகிறது. போதைப் பழக்கத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப் பது பற்றிய விழிப்புணர்வு செயல்திட்டங்களில் இத்தகைய பெண்களைக் குறிவைத்து மேற் கொள்ளப்படுபவை மிகச் சொற்பமே. இவ் விஷயத்தில் ஆண்–பெண் பாரபட்சமின்றி அனைவருக்குமான விழிப்புணர்வு இயக்கங் களை வலுப்படுத்த வேண்டும்.

**நிலைமையை மாற்ற என்ன செய்யலாம்?**

போதை பழக்கத்தின் பாதிப்புகள் பற்றித் தொடர் விழிப்புணர்வு இயக்கம், பொது வெளியில் போதைப் பழக்கம் பற்றிய கருத் தாடல்கள், சுகாதார வசதிகளை எளிதாக அணுகுமாறு அமைத்தல் போன்றவற்றை மேற்கொள்ளலாம்.

போதைப் பழக்கத்தை ஒழிக்க வேண்டு மானால் அப்பிரச்சினை எவ்வாறு முளை விடுகிறது என்று பூரணமாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு இளையோரிடமும் அவர்கள் ஏன் அப்பழக்கத்தை மேற் கொண்டார்கள், அதற்கு தூண்டுதலாக இருந்த காரணங்கள் யாவை என தீர விசாரித்து அறிந்து, அவர்களைப் பற்றிய எவ்விதமான முன்முடிவுக்கும் வராமல், குடும்ப நிலையிலும், சமூக நிலையிலும் அவர்களுக்கு மீட்பு உதவிகளை வழங்க வேண்டும்.

பொதுவாகவே தற்போது போதைப் பழக் கத்தின் தீங்கான விளைவுகளில் இருந்து பாதுகாக்கும் முயற்சிகள் எதிர்வினை ஆற்றும் செயல்பாடுகளாகவே உள்ளன. இப்பிரச் சினையின் குழப்பமான பரிமாணங்களைக் கருத்தில் கொண்டு, முன் தடுப்பு முறைகளையே முன்னெடுக்க வேண்டும். அதாவது வருமுன் காத்தல் என்பது போல், போதைப் பழக்கமே ஏற்படாதவாறு, அனைத்து வாயில்களையும் அடைத்துவிடுவதே உத்தமமான வழியாகும். •

# வடகிழக்கு மாநிலங்களில் விவசாயத்தின் எதிர்காலம்

– வீ.பா. கணேசன்

இந்தியாவின் ஏழு சகோதரிகள் என்றழைக் கப்படும் அசாம், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மிசோரம், மேகாலயா, நாகா லாந்து, திரிபுரா ஆகிய மாநிலங்களுடன் இமயமலையின் அடிவாரப்பகுதியில் அமைந் திருக்கும் சிக்கிம் மாநிலத்துடன் சேர்ந்து மொத்தம் எட்டு மாநிலங்கள் நமது நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள மாநிலங்கள் ஆகும்.

நாட்டின் மொத்த பரப்பளவில் 8 சத வீதமும், 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள் தொகையில் 3.1 சதவீதமும் கொண்ட இந்த மாநிலங்கள் இந்திய நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள, பெருமளவிற்கு மலைப்பகுதிகளையே கொண்ட பகுதிகள் ஆகும். இவற்றின் 95 சதவீத எல்லைகள் நமது அண்டை நாடுகளான திபெத்(சீனா), பூட்டான், பர்மா, பங்களாதேஷ் ஆகியவற்றை தொட்டுக் கொண்டிருப்பவை என்பதே இந்தப் பகுதியின் முக்கியத்துவத்தை உணர்த்து வதாகும்.

எளிதில் கடக்கவியலாத பெரும் மலைப் பகுதிகளை கொண்ட இப்பகுதியானது அசாமின் ஒரு சிறு பகுதியான கோலாப்பூர் தவிர்த்து 19ஆம் நூற்றாண்டு வரை பிரிட்டிஷ் ஆளுகையின்கீழ் வராத பகுதி என்பதோடு, இவற்றில் வசிக்கும் பழங்குடி இன மக்களின் தனித்தன்மையான வாழ்க்கையை சுட்டிக் காட்டுவதாகவும் அமைகிறது. இந்தப் பகுதியின் இயற்கையான நில அமைப்பின் காரணமாக, விவசாயம் என்பதும் அங்கு முற்றிலும் மாறுபட்டதாக அமைகிறது.



வடகிழக்குப் பகுதியில் பெரிதும் மலைகளே சூழ்ந்து நிற்கும் நிலையில் வழக்கமான பயிரிடும் முறைக்குத் தேவையான பரந்த நிலம் என்பதோ, விவசாய முறை என்பதோ இங்கு நிலவியதில்லை. இதன் காரணமாக, நாட்டின் மற்ற பகுதிகளில் ஏற்பட்ட சமூக மாற்றங்களும் அதிக அளவில் இப்பகுதியில் ஏற்படவில்லை. நாட்டின் மற்ற பகுதிகளில் இன்றளவும் நிலவும் தனிநிலவுடமை, நிலப்பிரபுத்துவ முறைகள் போன்ற ஏதுமற்றதொரு வாழ்க்கையையே இப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பழங்குடி இனங்களைச் சேர்ந்த இவர்கள் பல்வேறு இனக்குழுக்களாக, ஒவ்வொரு இனக் குழுவிற்கும் குறிப்பிட்ட பகுதி, குறிப்பிட்ட வாழ்க்கை முறை, அதனோடு கூடிய பொருள் உற்பத்தி என்பதாகவே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். கூட்டு வாழ்க்கை என்பது மட்டுமின்றி அனைத்து வேலைகளிலும், உற்பத்திக்கான முயற்சிகளிலும் இந்த கூட்டுறவு என்பது ஆண்பெண் வேறுபாடு அற்றது என்பதும் தேவையான பொருட்களை பண்டமாற்று முறையில் பெற்றுக் கொள்வது என்பதும் இன்றளவில் நீடித்திருக்கும் பகுதி யாக வடகிழக்கு மாநிலங்கள் உள்ளன.

**வீ.பா. கணேசன்**, எழுத்தாளர் மற்றும் உதவி இயக்குநர் (ஓய்வு), மேற்கு வங்க அரசின் செய்தித் துறை.

விவசாயத்திற்கு ஏற்ற பரந்த நிலப்பரப்பு என்பதோ, நிலவுடமை என்பதோ இல்லாத நிலையில், இப்பகுதி மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளுக்கு பெரிதும் மலைகளையே நம்பி யிருக்கின்றனர். இப்பகுதியில் வழக்கமான விவசாயம் என்பதாக இல்லாமல் அந்தப் பகுதிக்கே உரிய வகையில் பயிரிடும் பணிகள் நடைபெறுகின்றன. இதை ஜூம் என்று கூறுவார்கள். இம்முறையில் ஒரு குறிப்பிட்ட இனப்பிரிவினர் கூட்டாக சேர்ந்து ஒரு மலைப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள புதர்களை வெட்டி விடுவார்கள். கூடவே அப்பகுதியில் இருக்கும் மரங்களை அடிப்பாகத்தை மட்டும் விட்டுவிட்டு, மற்ற பகுதிகளை தங்கள் பயன்பாட்டிற்காக வெட்டி எடுத்துக் கொள்வார்கள். இந்தப் புதர் செடிகளும் அதனோடு இருக்கும் தாவர உயிர்களும், நுண்ணுயிர்களும் மாதக் கணக்கில் காய வைத்து, பின்னர் அந்தப் பகுதிக்கு தீமூட்டி, காய்ந்த புதர்களை கருக வைத்து அவற்றின் சாம்பல் அந்தப் பகுதியில் படியும்படி அப்படியே விட்டு விடுவார்கள். புதர்கள், இதர தாவரங்களில் இயற்கையாகவே அடங்கியிருக்கும், நிலத்திற்குத் தேவையான ஊட்டச் சத்து முழுவதும் இவ்வாறு அந்த நிலத்தில் தேங்குமாறு செய்த பிறகு சில காலம் கழித்து அங்கு தங்களுக்குத் தேவையான அரிசி, காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை விதைப்பார்கள்.

மேற்கூறிய இந்த வேலைகள் அனைத்துமே கூட்டாக செய்யப்படுபவை ஆகும். ஆண் பெண் என்ற வேறுபாடின்றி நடக்கும் இந்தப் பயிரிடும் வேலையானது வழக்கமாக டிசம்பர் மாதத்தில் துவங்கி மழைக்காலத்திற்கு சரியாக இரண்டு மாதங்களுக்கு முன்பு (ஏப்ரல்–மே) முடிவடையும். மழைக்காலம் முடிந்து, ஒரு குறிப்பிட்ட கால அளவில் அறுவடை நடக்கும் போது, பல்வேறு இனக்குழுக்கள் இவ்வாறு உற்பத்தி செய்த பொருட்களை பண்டமாற்று செய்யும் வேலை பெண்களின் கைகளில்தான் இருக்கும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவை யான பொருட்களை சேமிப்பதே இதன் முக்கிய நோக்கமாக இருக்கும்.

முந்தைய காலங்களில் இத்தகைய முறை யில் தயாரான (ஜூம்) ஒரு நிலத்தைக் கொண்டு 10 முதல் 20 வருடங்கள் வரை தொடர்ச்சியாக பலவிதமான பயிர்களை வளர்த்து வந்த போதிலும், தற்போதைய மக்கள்தொகை அதிகரிப்பின் விளைவாக, ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியானது 3 முதல் 5 வருடங்களுக்குள்ளேயே தனது ஊட்டச் சத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, ஒரு புதிய மலைப்பகுதியை தேடி, அதை மீண்டும் தங்களது பயிருக்கான விளை நிலமாக மாற்ற வேண்டிய நிலையை இப்பகுதி மக்கள் சந்திக்கின்றனர்.

இந்த விஷயத்தில் வடகிழக்கு மாநில மக்கள் வேறுவகையான நெருக்கடிகளையும் சந்தித்து வருகிறார்கள். முதலாவதாக, சுற்றுச் சூழல் பற்றிய ஆர்வம் இன்று அதிகமாகியுள்ள நிலையில் இவ்வாறு மலைப் பகுதிகளில் உள்ள இயற்கைத் தாவரங்களை அழித்து, மரங்களை வெட்டி பயிரிடுவதற்கு எதிர்ப்பு எழுந்து வருகிறது. எனினும் இந்த ஆர்வலர்கள் அதற்கான மாற்று ஏற்பாடுகள் குறித்து சிந்திப் பதில்லை. அடுத்ததாக, வடகிழக்கு பகுதி யானது நமது நாட்டின் எல்லைப்பகுதி என்ற வகையில் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகள் சமீப காலத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளன. மேலும், இப்பகுதியில் கடந்த பல ஆண்டுகளாக இருந்து வரும் தீவிரவாத குழுக்களை அடக்கு வதற்காக ராணுவ, துணை ராணுவ அமைப்பு கள் இங்கே நிரந்தர முகாம்களை அமைத் துள்ளன. இந்த ராணுவப் படை முகாம்கள் பெரும்பாலும் இப்பகுதி மக்கள் ஜூம் முறை யில் பயிர் செய்து வந்த மலைப்பகுதிகளே ஆகும். இதனால் தங்கள் வாழ்வாதாரமான நிலத்தை இப்பகுதி மக்கள் இழந்துள்ளனர்.

இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கு இம்முறையே காலம்காலமாக அடித்தளமாக இருந்து வந்தது என்பதோடு, இம்முறை யிலான விவசாயத்தில் மக்களுக்குத் தேவை யான அடிப்படை பொருட்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறதே தவிர, தேயிலை, காபி போன்ற பணப்பயிர்கள் உருவாக்கப்



படுவதில்லை என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கதாகும். சுயச்சார்புக்கு வழிவகுக்கும் இந்த பயிர்முறையை உரிய வகையில் பாதுகாக்க வடகிழக்கு மாநில அரசுகளும் தீவிரம் காட்டி வருகின்றன.

இன்று 'கிழக்கை நோக்கிய பார்வை' என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஆசிய நாடுகளில் நமது வர்த்தகத்தை பெருக்குவதற்கு இந்தப் பகுதியானது முக்கிய வழியாக அமைந்துள்ள நிலையில் இப்பகுதி யில் வர்த்தக பாதைகளுக்கும், புதிய பயிர் களை அறிமுகப்படுத்தவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இவை பழங்குடி இன மக்களின் இதுவரையிலான சுயச் சார்பை கேள்விக்குறியாக மாற்றுவதற்கான வாய்ப்புகளும் அதிகம் என்றே மானிடவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறு தாங்கள் வசித்து வரும் மலைப் பகுதியை தங்கள் வாழ்வாதாரத்திற்காக மக்கள் பயன்படுத்திக் கொண்டு வந்த போதி லும், தனிநபர் அளவில் உலகத்திலேயே மிக அதிகமான காடுகள் நிறைந்த பகுதியாக இந்த வடகிழக்குப் பகுதி இன்றளவும் நீடித்து வருகிறது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இந்த ஜூம் முறையிலான உற்பத்தியின் மூலமே இப்பகுதி மக்கள் சுயச்சார்புடைய வர்களாக, தங்கள் உணவு, உடை, கலாச் சாரம் என்று அனைத்திலும் தன்னிறைவு பெற்றவர்களாக உள்ளனர் என்பதையும், வட கிழக்குப் பகுதியின் கிராமப்புற சமூகத்தோடு இந்த முறை பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதையும், இந்தப் பயிரிடும் முறையின் நிலைத்தன்மை நிரூபிக்கப்பட்ட ஒன்று என்ப தோடு, பெண்களுக்கு இதன் பொருளாதாரத் தலைமைப் பொறுப்பை வழங்கி பகுதி மக்கள் அனைவரின் நலனையும் காப்பதாக, பல்வேறு கிராமங்களையும், அவற்றில் வசிக்கும் இனக் குழுக்களை ஒன்றிணைப்பதாகவும் விளங்கு கிறது என்பதும் இதன் தனித்துவத்தை, இத்தகைய முறை நீடிக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டுகிறது. •

# வடகிழக்கு இந்தியா:
# உலகச் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமி

– டாக்டர் சௌரப் குமார் தீட்சித்

இயற்கையின் ஆசீர்வாதம் பெற்ற வட கிழக்கு இந்தியா, உலகின் வளமான உயிரின – புவியமைப்புப் பரப்பின் மையமாக விளங்குகிறது. வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் பெருக்கும் வழியாக சுற்றுலாவை வளர்த்தெடுக்கப் பல வாய்ப்புகள் இப்பகுதியில் உள்ளன. உயிரின பல்வகைமைப் பெருக்கத்தின் உச்ச நிலையை இங்கே காணலாம். செழிப்பான பொருளாதார வளங்களோடு, வளமான பண்பாட்டு மற்றும் இன வரைவுச் செல்வமும் கொண்டதாக இப்பூமி திகழ்கிறது. வடகிழக்கு மாநிலங்களில் உள்ள தேசியப் பூங்காக்களையும், வனவிலங்கு புகலரண்களையும் காண உலகின் பல நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். மேலும் தேயிலைச் சுற்றுலா, கிராமியச் சுற்றுலா, கோல்ப் சுற்றுலா என பிற வகைகளிலும் வளர்ச்சிக்கு இங்கு பல வாய்ப்புகள் உள்ளன.

அசாம், அருணாசலப்பிரதேசம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம், திரிபுரா, சிக்கிம் என்று எட்டு மாநிலங்களாக இப்பகுதி பிரிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தப் பகுதியில் எண்ணற்ற பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். நூற்றுக்கணக்கான வட்டார வழக்குகளில் அவர்கள் கருத்துப் பரிமாற்றம் நடக்கிறது. அருணாசலப் பிரதேசத்தில் மட்டுமே ஐம்பதிற்கும் மேற்பட்ட மொழிகளை மக்கள் பேசுகின்றனர். வடகிழக்கு மாநிலங்களில் வசிக்கும் பழங்குடி மக்களுக்கும், மியான்மார், தாய்லாந்து, லாவோஸ் ஆகிய நாடுகளின் மக்களுக்கும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. வசீகரமான புவியமைப்பு, எண்ணற்ற தாவர இனங்கள், விலங்கினங்கள், அரிதான வண்ணத்துப்பூச்சி வகைகள், வண்ணமயமான பௌத்தத் துறவியர் மடங்கள், சீறிட்டுப் பாயும் நதிகள், வித்தியாசமான திருவிழாக்கள், நயமிக கைவினைப் பொருட்கள் என்று நம்மை ஈர்க்கும் விஷயங்கள் பலப் பல.

### கடந்த காலச் சுற்றுலா நிலவரம்

2011ஆம் ஆண்டில் இருந்தே வடகிழக்கு மாநிலங்களுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பதாக மத்திய சுற்றுலா அமைச்சகம் கூறுகிறது. வெளி நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 2011ல் இருந்ததை விட 2012ல் 12.5 சதவீதம் அதிகரித்தது. அதற்கடுத்த ஆண்டு அது முந்தைய ஆண்டைவிட சுமார் 28 சதவீதம் உயர்ந்தது. 2012ஆம் ஆண்டில் 66,302 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் வடகிழக்கு மாநிலங்களைச் சுற்றிப் பார்த்துள்ளனர். 2013ல் அந்த எண்ணிக்கை 84,820ஆக உயர்ந்து 2014ல் ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 552 என அதிகரித்தது.

வடகிழக்கு மாநிலங்களின் எல்லைப் பகுதிகள் சர்வதேச எல்லைகளோடு ஒட்டியிருப்பது சுற்றுலாவுக்கு மிகவும் அனுகூலமான விஷயமாகும். வடக்கில் சீனாவும், கிழக்கில் மியான்மாரும், தென்மேற்கில் வங்கதேசமும், வடமேற்கில் பூடானும் இருப்பதால், இந்த நாடுகள் உடனான வாணிகத்தைப் பெருக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

### எழிலான மலை வாசஸ்தலங்கள்:

நம் நாட்டின் முக்கியமான மலை வாழிடங்கள் வடகிழக்கு மாநிலங்களில் தான் உள்ளன எனலாம். சிக்கிம் மாநிலத்தின் தலைநகரமான காங்டாக், அம்மாநிலத்தின் பெரிய நகராகும். இங்கே எண்ணற்ற பௌத்த மடாலயங்கள் உள்ளன. வடகிழக்கு இந்தியாவில் மக்களைப் பெரிதும் ஈர்க்கின்ற நகராக காங்டாக் திகழ்கிறது.

---

**டாக்டர் சௌரப்குமார் தீட்சித்**, இணைப்பேராசிரியர், ஷில்லாங்கின் வடகிழக்கு மலைப்பல்கலைக் கழகத்தின் சுற்றுலாத்துறை.

இதேபோல, அருணாசலப் பிரதேசத்தின் தலைநகராக விளங்கும் இடா நகரும் சிறப்புடையது. 1974 ஏப்ரல் 20ஆம் தேதி முதல் இடாயநகர் இப்பெருமையைப் பெற்றது. இமல மலைத் தொடரின் அடிவாரத்தில் இருக்கும் இந்நகர், மாசுபடாத இயற்கையை விரும்புவோருக்கு உகந்த ஊர்.

அருணாசலப் பிரதேசத்தின் வடமேற்குப் பகுதியில் நிலமட்டத்தில் இருந்து 3048 மீட்டர் (சுமார் பத்தாயிரம் அடி) உயரத்தில் உள்ளது தவாங் என்னும் நகர். இதன் விளிம்பில் வடகிழக்கில் திபெத்தும், தென்மேற்கில் பூடானும் உள்ளன. சுமார் 2085 கி.மீ பரப்பு கொண்ட தவாங்நகரை, மேற்கு காமெங் மாவட்டத்தில் இருந்து சேலா மலைத் தொடர் பிரிக்கிறது.

மெகாலயாவின் தலைநகரான ஷில்லாங், உலகின் மிகவும் ஈரமான பகுதியான மாவ்சின்ராம் *(Mawsynram)* என்ற இடத்தில் 55 கி.மீ தொலைவில் உள்ளது. ஷில்லாங் நகரை, ஸ்காட்லாண்ட் ஆப் ஈஸ்ட் என்று கூறுவர். பிரிட்டனின் ஸ்காட்லாந்து மலைப்பகுதியைப் போலவே இருப்பதால் ஷில்லாங்கை இவ்வாறு அழைக்கின்றனர். இங்குள்ள டான் பாஸ்கோ அருங்காட்சியகம், வண்ணத்துப்பூச்சி அருங் காட்சிக்கூடம், தாவரவியல் பூங்கா, ஷில்லாங் சிகரம், உமியம் ஏரி, வார்ட்ஸ் ஏரி ஆகியவை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன.

**அரியவகை உயிரினங்கள்:**

இந்தோ-மலேய உயிரின வகைமை மற்றும் இந்தோ-சீன உயிரின வகைமைக்கு மாறிச் செல்லும் கேந்திரமாக இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களின் உயிரின வனம் திகழ்கிறது. இதன் காரணமாகவே, தற்போது உலகின் மற்ற பகுதிகளில் அழிந்து வரும் பல உயிரினங்கள் இப்பகுதியில் மட்டுமே காணப்படுகின்றன. இந்தியாவில் வெப்பமண்டலக் காடுகள் அதிகம் காணப்படுவதும் இங்கேதான். அதிலும் குறிப்பாக, அரிய வகை உயிரினங்கள் மிகுந்துள்ள வெப்ப மண்டல மழைக்காடுகள் இங்கு மிகுந்துள்ளன. இது சூழலியல் சுற்றுலாவை வளர்த்தெடுக்க உகந்ததாக இருக்கிறது. கஞ்சன் ஜங்கா உயிரினப்பாதுகாப்பு மண்டலம் (சிக்கிம்), நம்தபா தேசியப் பூங்கா அருணாசலப் பிரதேசம், காஸிரங்கா மற்றும் மானஸ் தேசியப் பூங்கா (அசாம்), கெய்புல் லம்ஜாவோ தேசியப்பூங்கா (மணிப்பூர்), முர்லேன் தேசியப் பூங்கா (மிஸோரம்), நீடாங்கி தேசியப்பூங்கா (நாகலாந்து), நோக்ரெக் தேசியப்பூங்கா (மேகாலயா) உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட வனவிலங்குப் புகலரண்கள் இந்தப் பகுதியில் உள்ளன. தற்காலத்தில் இம்மாநில அரசுகளும் இயற்கை விவசாய நடைமுறைகளை ஊக்குவித்து வருகின்றன.

**பண்பாட்டு ஈர்ப்புகள்:**

வடகிழக்கு மாநிலங்களின் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் மிக்கத் தனித்தன்மை கொண்டவை. இந்து, கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம் ஆகிய நான்கு சமயங்களின் கலப்புப் பண்பாட்டுத் தளமாக வடகிழக்குத் திகழ்கிறது. ஏனைய சமய நெறிகளோடு ஒப்பிட்டால் பௌத்த நெறியைப் பின்பற்றுவோரே இங்கு பெரும்பான்மையினராக உள்ளனர். இங்குள்ள ஒவ்வொரு பழங்குடி இனத்திற்கும் பிரத்யேக பண்பாடு, நடனம், உணவு, திருவிழா, இசை, வழிபாடு, கைவினைப் பொருட்கள் உண்டு.

இம்மக்களின் வாழ்க்கையோடு இசையும் நடனமும் இரண்டாக கலந்து விட்டன. ஒவ்வொரு இனக்குழுவும் ஆண்டின் வெவ்வேறு காலகட்டத்தில் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றன. இந்தத் திருவிழாக்களின் போதுதான் இந்தப் பழங்குடி மக்களின் பண்பாட்டுச் செழுமையை நாம் புரிந்துகொள்ள முடியும்.

அசாம் மாநிலத்தின் பிகு, பிரம்மபுத்ரா திருவிழாக்கள், நாகலாந்தின் ஹார்ன் பில் மற்றும் ஷெக்ரேன்யி திருவிழாக்கள், அருணாச்சல பிரதேசத்தின் டோர்கியா மடாலய விழா, மேகாலயாவின் மோனோலித் மற்றும் பெஹ்டின்காலம் திருவிழா, மணிப்பூரின் சாப்சர்குட் மற்றும் நிங்கோல் சக்குபா விழாக்கள், திரிபுரா மாநிலத்தின் கார்சி பூஜா ஆகியவை வடகிழக்கு மாநிலங்களின் முக்கியத் திருவிழாக்களில் சிலவாகும்.

ஹார்ன்பில் தேசிய ராக் இசைப் போட்டி போன்ற சில இசை – நடனப் போட்டிகள் வடகிழக்கு மாநிலங்கள் முழுவதும் நடத்தப் படுகின்றன. இந்த மாநிலத்தின் பழங்குடி மக்கள் மூங்கிலால் செய்யப்படும் தமக் மேளம், புல்லாங்குழல், காம்ப், லம்பாங் போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். டான் பாஸ்கோ பண்பாட்டு மையம் (ஷில் லாங்), காமாக்யா கோயில் (குவகாத்தி), திரிபுரா சுந்தரி கோயில் (தென் திரிபுரா மாவட்டம்), சிக்கிம் மாநிலத்தின் பௌத்த மடாலயங்கள், கிருஷ்ணன் கோயில் (இம்பால்), கத்தோலிக்கப் பேராலயம் (கொஹிமா) போன்றவை இந்த மாநிலங்களின் பண்பாட்டுக் கேந்திரங்களாகத் திகழ்கின்றன.

## உணவுப் பதார்த்தங்கள்

வடகிழக்கின் உணவுப் பதார்த்தங்கள் இம்மக்களின் வாழ்க்கை முறையைப் பிரதி பலிப்பதாகவே உள்ளன். எண்ணெயும் நறுமணப் பொருள்களும் சேர்க்காத சுவை யான உணவு அவர்களுடையது. உள்ளூரில் விளையும் மணமிக்க மூலிகைகள் உணவில் முக்கிய இடம் பெறுகின்றன. இவை எளி தாகத் தயாரிக்கக் கூடியவை என்ற சிறப்பும் கொண்டவை. அரிசிச்சோறு, கருவாடு, மாமிசம், பசுங்காய்கறிகள் போன்றவையே பிரதான உணவுகள். கோழி, ஆடு, வாத்து, புறா, நாய் ஆகியவற்றின் இறைச்சியையும் உண்பார்கள். அரிசியில் இருந்து தயாரிக் கப்படும் பீர் குடிக்கிறார்கள். மேலும் மூங்கில் குருத்துக்களைக் கொண்டு தயாரிக்கப்படும் ஒருவிதமான ஊறுகாய் இப்பகுதியின் சிறப்புடையது. ஜாடோ *(Jadoh)*, மோமோஸ் *(Momos)*, கிக் பு *(Ki kpu)*, ஆகோல் கோர் *(Aakhol Ghor)*, சாசேர் *(Sawchair)*, துக்பா துங் ரைம்பாய் *(Thukpa Tung - rymbai)* போன்றவை வடகிழக்கு மாநிலங்களின் பிரத்யேக உணவுகளாகும்.

## மத்திய அரசின் ஆதரவுத் திட்டங்கள்

உலகச் சுற்றுலா வரைபடத்தில் இந்தியா வின் வடகிழக்கு மாநிலங்களை இடம்பெறச் செய்ய மத்திய அரசு தொடர்ந்து முயன்று வருகிறது. 2014–15ல் “ஸ்வதேஷ் தர்ஷன்” என்ற பெயரில் குறிப்பிட்ட சில பொருண் மைகளில் சுற்றுலா மேற்கொள்ளும் திட்டம் அறிவிக்கப்பட்டது. அவை கடற்கரை ஓர நகரங்கள், பௌத்த சமயத் தொடர்புள்ள இடங்கள், வடகிழக்கு மாநிலங்கள், இமாலயச் சுற்றுலா, கிருஷ்ணபகவான் தொடர்புடைய இடங்கள் மற்றும் ஏழு வகையான சுற்றுலா அத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன. அந்தப் பட்டியலில், பாலைவனச் சுற்றுலா, ஆன்மீகச் சுற்றுலா, ராமாயணச் சுற்றுலா, பழங் குடியினச் சுற்றுலா, சூழலியல் சுற்றுலா, வனவிலங்குச் சுற்றுலா மற்றும் கிராமச் சுற்றுலா போன்றவை சேர்க்கப்பட்டுள்ளன. புண்ணியத்தலப் புத்துயிர்ப்பு மற்றும் ஆன் மீகச் செழுமைக்கான தேசிய இயக்கம் *(PRASAD)* என்ற சுற்றுலாத் திட்டத்தில் அசாமின் காமகாயம் சேர்க்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு சுற்றுலாத் துறைக்கு ஒதுக் கீடு செய்யும் தொகையில் பத்து சதவீதம் வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலா வளர்ச் சிக்காகச் செலவிடப்படுகிறது. கடந்த மூன் றாண்டுகளில் இவ்வாறு செலவிடப்பட்ட விவரம் வருமாறு:

| ஆண்டு | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|
| திட்ட ஒதுக்கீடு | 1050 | 950 | 980 |
| வடகிழக்குக்குப் பத்து சதவீதம் | 105 | 95 | 98 |
| வழங்கிய தொகை | 145.93 | 113.72 | 146.16 |
| விகிதாச்சாரம் | 13.89 | 11.97 | 15.22 |

அறிவிக்கப்பட்டதை விட அதிகமாகவே வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலா வளர்ச் சிக்கு மத்திய அரசு செலவிட்டுள்ளது. இந்தியாவின் வளர்ச்சிக்குப் பங்களிப்பதாக, வடகிழக்கின் சுற்றுலா வளர்ச்சி அமைய வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். •

# வடகிழக்கு மாநிலங்களில் வேளாண்மை: இயற்கை வேளாண்மையின் வழியாகநீடித்த வேளாண்மையும் வளமையும்

– நிரேந்திர தேவ்

**"காலையில் உனது நிழல் உன்னை பின் தொடர்கிறது
மாலையிலோ உனதுநிழல் என்னைச் சந்திக்க எழுகிறது
இவை இரண்டிலும் மாறுபட்ட ஒன்றை உனக்கு நான் காட்டுவேன்"**

கவிஞர் டி.எஸ்.எலியட்டின் இந்தக் கவிதை வரிகள் வேறு ஒரு கருத்தை நிலைநிறுத்துவதற்கு வேறொரு கண்ணோட்டத்தில் எழுதப் பட்டவை. ஆயினும் வடகிழக்கு மாநிலங்களின் மெய்யான முகத்தை ஒன்றுகூட்டி இந்த வரிகள் நமக்குக் காட்டுகின்றன. இந்தியாவின் தொலைதூரத்து மூலையில் இருக்கும் வட கிழக்கு மாநிலங்களும் அங்கு வாழும் மகக்ளும் மரபு விழா வேளாண்மையைச் சார்ந்து வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் கால ஓட்டத்தில் நிலைமைகள் எப்படியெல்லாம் மாறி வந்திருக்கின்றன என்பதையும் இந்த கவிதை வரிகள் நமக்கு சூசகமாக உணர்த்துகின்றன.

கிழக்கு இந்தியாவில் மக்களின் மிக முக்கிய மான துணையாக இருப்பது வேளாண்மையே. ஆக, வேளாண்மை எப்படி ஒரு உந்துசக்தியாக இருந்து இயற்கை இடர்கள், மனிதர்கள் உருவாக்கும் வன்முறை போன்ற தடங்கல்கள் ஆகியவற்றை நீக்குவதற்கான ஒரு பாதையை அமைத்து அளித்திருக்கின்றது என்பதைக் காணவேண்டியது மிகவும் முக்கியமானது. அருணாச்சலப் பிரதேசம், அஸ்ஸாம், சிக்கிம், மணிப்பூர், மிசோரம், மேகாலயா, நாகலாந்து, திரிபுரா ஆகிய எட்டு மாநிலங்களின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் வேளாண்மை மிக முக்கியமான பங்கினை ஆற்றியுள்ளது.

வடகிழக்கு மாநிலங்கள் அமைந்துள்ள பகுதி பலவேறுபட்ட இனத்தினரும் வசிக்கும் பகுதி. சிக்கிம் உள்பட எட்டு மாநிலங்களில் ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநிலங் களுக்கே உரித்தான தனிப்பட்ட பண்பாடும், வேளாண் முறைகளும் இருக்கின்றன. இந்தியர் களாகிய நாம் பல வகையான பண்பாடுகள், நாகரிகங்கள் பற்றி எப்போதும் பெருமிதம் கொண்டவர்களாக இருக்கிறோம். இந்த விதமான தனித்தன்மை தான் இந்தியாவின் பலம்.

இந்த மாநிலங்கள் அனைத்திலும் ஒரே விதமான வேளாண்முறைகளே கைக் கொள்ளப்படுகின்றன என்று காட்சிப்படுத்திக் கொள்வது தவறானது. உள்ளூர் மக்களின் வேளாண்மைத் திறமைகள் உள்ளூரில் கிடைக்கும் இயற்கை வளங்களைத் திறமையாக பயன்கொள்வது, நீர்ப்பாசனம், தண்ணீர் பற்றாக்குறை போன்றவற்றில் நிலவக்கூடிய சங்கடங்களைத்தாண்டி மேல் எழுவதற்கு இங்குள்ள ஒவ்வொரு மக்கள் குழுவும் திறன் பெற்றிருக்கிறது.

இங்கு வாழும் பழங்குடி இனத்தவர் ஒவ்வொருவரும், மற்ற இனங்களைச் சேர்ந்தவர்களும் நீர்சேமிப்பு, வேளாண்மை ஆகியன பற்றிய தனித்துவமான பாரம்பரிய வழிமுறைகளை அறிந்து வைத்துள்ளனர். பாரம்பரிய நீர் சேமிப்பு வழிமுறைகளின் இருப்பிடமாக இந்தப் பகுதி இருக்கிறது.

வழக்கத்திலுள்ள ஒருசில நீர்சேமிப்பு வழி முறைகளில் அசாமின் டாங்ஸ் வழிமுறையும் அடங்கும். மேகாலயாவில் மூங்கில் சொட்டு நீர்ப் பாசனமுறை இருக்கிறது. அருணாசலப் பிரதேச ஸிரோ பள்ளத்தாக்கில் ஈரநெல்–மீன் வளர்ப்பு முறைகள் உள்ளன. சக்கிசாங் நாகா பழங்குடியினர் நாகாலாந்தின் பெக் மாவட் டத்தில் 'ஸாபோ' என்ற முறையைக் கையாண்டு வருகின்றனர். மிசோரத்தில் மொட்டை மாடியில் மழைநீர் சேமிப்பு முறை உள்ளது. சிக்கிமின் வெற்றிகரமான இயற்கை வேளாண்மை முறை மிகவும் தகுதி வாய்ந்த ஒன்று.

வடகிழக்குப் பகுதியின் வேளாண்மையில் மிகவும் முக்கியமான, மிகப் பிரபலமான தனித் துவம் ஒன்று உள்ளது. ஜூம் பயிரிடுதல் அல் லது மாற்றுப் பயிரிடுதல் என்பதே அந்த முறை வேளாண் சுழற்சியின் போது அடித்தட்டை களை மடித்து உழுவது, எரித்துவிடுவது ஆகிய

**நிரேந்திர தேவ்,** சிறப்புப் பிரதிநிதி, ஸ்டேட்ஸ்மென் இதழ், புதுதில்லி

முறைகளை அவர்கள் பின்பற்றுகின்றனர். வடகிழக்கு இந்தியாவின் வேணான்மையில் 85 விழுக்காடு மாற்றுப் பயிர் முறையின் படித்தான் நடக்கிறது. அதிகமான வேளாண் உற்பத்திக்கு அதிக அளவிலான நிலம் தேவைப்படுவதால் சூழல் முறைமைகளில் நிலவக்கூடிய மீண்டெழும் தன்மை பரவலான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

சுற்றுச்சூழல் பார்வையில், ஒட்டுமொத்த வடகிழுக்கு பகுதியும் வெப்பமான கோடைக் காலத்தையும், பருவமழையையும் கொண்ட பிரதேசமாகும். உள்ளூர் நீர் சேமிப்பு முறை கள் பயிர் உற்பத்திக்கு மட்டுமின்றி மண அரிமானத்தைத் தடுக்கவும், மண் வளத்தைப் பெருக்கவும் உதவுகின்றன.

நீர் சேமிப்பில் அளவற்ற திறமையும், புதுமையும் கொண்டவர்களாக இருந்த போதிலும் வேளாண் பொருளாதாரம் எதிர் பார்த்த அளவிற்கு இங்கு சிறப்புறவில்லை. வரலாற்றுக் காரணங்களினாலும், புவியியல் காரணங்களினாலும் வடகிழக்கில் வேளாண்மை மூலதனப் பற்றாக்குறை உடையதாக இருக்கிறது. குளிர்பதன சேமிப்பு கிடங்கு வசதிகள், சந்தைப்படுத்தும் வாய்ப்புகள், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது ஆகியவற்றை அமைத்துத் தருவதில் இங்கு போதிய கவனம் தேவைப்படுகிறது. நரேந்திர மோடி அவர்களின் தலைமையில் புதிய அரசாங்கம் அமைந்த பிறகு சமீப ஆண்டுகளில் இந்தப்பகுதியில் வேளாண் வளர்ச்சியின் மீது கவனம் எழுந்துள்ளது. புதுமையான பல நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.சில ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டாவது பசுமைப்புரட்சி இந்த திசையில் செல்வதற்கு உதவியது.

ஆயினும் கூட, நடைமுறையில் உள்ள சில குறிப்பிட்ட தடைகளையும், போதிய கவனம் தேவைப்படும் பகுதிகளையும் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. வடகிழக்குப் மாநில பகுதிகளில் வேளாண்மை வலிமைமிக்க பொருளாதார செயல்பாடாக இருந்த போதிலும் இங்கு நிறைய தேவைகளும், தூண்டுதல்களும் வேண்டியிருக்கின்றன. இது தானாகவே நடக்கும் என்று நம்மால் சொல்ல முடியாது. இந்த மாநிலங்களில் 75 விழுக்காடு மக்கள் கிராமங்களில் வாழுகின்றனர். வேளாண் மையை வாழ்வாதாரமாகக் கொண்டிருப்பவர்கள் இவர்கள். இந்தியாவின் பிற பகுதிகளில் மொத்த நிலப்பரப்பில் 45 விழுக்காடு பயிர் செய்யப்படும் பகுதியாக இருக்கும்போது வடகிழக்கு மாநிலங்களில் பயிர் செய்யப்படும் பரப்பு 20 விழுக்காடாக இருக்கிறது.

பல்வேறு விதமான வேளாண் விளைப் பொருட்களின் விளைச்சலிலும், உற்பத்தி யிலும் வடகிழக்கு மாநிலம் இந்தியாவின் பிற பகுதிகளை விடவும் பின்தங்கியே இருக்கிறது. ஆகவே, இந்தப் பகுதி உணவு தானியத் தேவைகளுக்காக இந்தியாவின் பல பகுதி களைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.பழங்கள் உட்பட பிறவகை வேளாண் பொருள்களுக்கும் இந்த சார்பு நிலை இருந்து வருகிறது.

அதே சமயம், தோட்டப் பயிர்களின் சாகுபடி, பண்ணை உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றிற்கான சாத்தியங்கள் இந்தப் பகுதியில் ஏராளம் இருக்கின்றன என்பதை கோடிட்டு காட்ட வேண்டியிருக்கிறது. இந்தியாவின், தேயிலை, அரிசி, சணல், உருளைக்கிழங்கு, வாழை, பப்பாளி, கடுகு, சர்க்கரைவள்ளி, நாரத்தை, எலுமிச்சை போன்ற சிட்ரஸ் பழவகைகள், முட்டைகோஸ் போன்ற இலைக் காய்கறிகள், மூலிகைகள், வாசனைப் பொருட்கள், எண்ணெய் வித்துக்கள் போன்ற வற்றின் உற்பத்தியில் வடகிழக்கு மாநிலங்கள் நல்லதொரு பங்கினை வகிக்கின்றன.

மேகாலயாவில் முந்திரி, பிளம் வகைப் பழங்கள் ஆகியவையும், திரிபுராவில் இஞ்சி, மிளகாய், மூங்கில் போன்றவையும் மிசோரம், மணிப்பூர், நாகாலாந்து பகுதிகளில் அன்னா சிப்பழமும் அதிகமாக விளையும் வாய்ப்புகள் உள்ளன.

தடைகள், சூழ்நிலைக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றைத் தவிர்த்துவிட்டு வேளாண்மை– தோட்டக்கலை இரண்டும் இணைந்த ஒட்டு மொத்தக் காட்சியை நாம் காணும்போது அது ஒரு வெற்றிக் கதையை கூறுகிறது. பெரிய வெற்றிகளை நோக்கி நகர்வதற்கான உத்தரவாதங்களையும் தருகிறது.

வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் கிராமங்களை அடித்தளமாக கொண்டு வாழ் பவர்கள். ஆகையால், உழவு என்பது மக்களின் மனஉணர்வோடு பின்னிப்பிணைந்து ஒன்று கலந்திருப்பதில் வியப்பேதும் இல்லை.

அலுவலகங்கள், தொழிற்சாலைகள், அரசாங்கப் பணிகள் ஆகியவற்றில் இருப்பவர்களும்கூட வேளாண்மையில் ஆர்வம் காட்டுபவர்களாக உள்ளனர். இந்த விருப்பம் நிலைத்த சொத்துக்களையும் அதனோடு தொடர்புடைய உழவியல் தேவைகளையும் உருவாக்குவதற்கு உதவுகிறது. இதன்மூலம் நிச்சயமான வேலைவாய்ப்பும் கிடைக்கிறது. எனவே, நாம் பாரம்பரிய நீர்சேமிப்பு முறையான அருணாசலப் பிரதேசத்து ஈரநெல்–மீன் வளர்ப்பு முறையைப் பயன்படுத்தி அளவான வளங்களைக் கொண்டு, சுற்றுசூழல் பாதிப்போ வீணடிப்போ இல்லாமல் நெல்லையும் மீனையும் உற்பத்தி செய்யமுடியும்.

இப்படிப் பார்க்கும் போது, இது இயற்கை வேளாண்மை என்று ஆகிறது. 2016 ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் தேதியன்று பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் சிக்கிம் மாநிலத்தை முதல் இயற்கை வேளாண்மை மாநிலமாக அறிவித்துள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளாக மேற்கொள்ளப் பட்ட சிக்கிமின் கடின உழைப்பு, 75 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்களை நீடித்த இயற்கை வேளாண்மைக்கு மாற்றியுள்ளது. இந்த முயற்சி மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க உதவியுள்ளது. இது சுற்றுலாப் பெருக்கத்திற்கும் உதவும் என்பது புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

நாகாலாந்தின் பெக் மாவட்டத்தில் ஸாபோ முறை செயல்படுகிறது. இந்தமுறை குன்றுகளின் மேலிருக்கும் வன நிலங்களைப் பாதுகாக்கிறது. குன்றுகளின் கீழ்ப்பகுதியில் வளர்ப்பு, நெல் வயல்கள் ஆகியவை அமைகின்றன. இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நடுப்பகுதியில் நீர் சேமிப்பு ஆதாரங்கள் அமைந்துள்ளன. நீராதாரங்களில் இருந்து வெளிவரும் நீர் கால்நடைகள் வசிக்கும் பகுதிகளின் வழியாகச் சென்று வயல்களைச் சேர்கிறது. கால் நடைகளின் சாணம், சிறுநீர் ஆகியவற்றை இந்த நீர் வயல்களுக்கு கொண்டு சேர்கிறது. இந்த நீர் ஓடுவதற்கென பிளக்கப்பட்ட மூங்கில்களைக் கொண்டு தாரைகள் அமைக்கப்படுகின்றன. வளமான இயற்கை உரம் பயிர்களுக்கு இதன் மூலமாகக் கிடைக்கிறது.

இத்தகைய பின்புலத்தில், வேளாண்மை எப்படி பன்முகப்பட்ட மாற்றங்களை இந்தப் பகுதிகளில் கொணர்ந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்வது பொருத்தமானது.

**வேளாண்மையின் மூலம்:**

1. வேலையின்மை பிரச்சனை நீங்குகிறது. தகுதிக்கும் குறைவான வேலை என்பதும் இல்லாமல் ஒழிகிறது.
2. குடிநீர், ஊரகச்சாலைகள், ஆரம்பக் கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, பயிர்களுக்கு இயற்கை உரம் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதுமான பொருளாதார ஆதரவு கிடைக்கிறது.
3. வருவாயிலும், சொத்துரிமையிலும் சமத்துவமின்மையைக் கணிசமாக குறைக்கும் வழியில் பயணிக்க முடிகிறது.
4. வளர்ச்சி விகித அதிகரிப்பையும், தொடர்ச்சியான முன்னேற்றத்தையும் இது உறுதிப்படுத்துகிறது.

இறுதியான பகுப்பாய்வில் நமக்குத் தெரியவருவது இதுதான்: வாழ்க்கை பற்றிய பழங்கால மனிதர்களின் புரிதல் அசாமிய இலக்கியங்களில் பதிவாகி இருக்கிறது. எந்த இடத்தில் வாழ்ந்தாலும் மனிதகுலத்தின் எதிர்காலம் அந்தந்தப் பகுதிகளின் மண்ணில் தான் வேரூன்றி இருக்கிறது என்பதே அவர்களின் புரிதல். இத்தகைய வளத்தினை வெளிக்கொணரும் வாய்ப்பை வேளாண்மை தான் வழங்குகிறது. பூமியைத் தாயாகவும், மண்ணை தாயின் மடியாகவும் கருதும்போது உற்பத்தி சிறக்கும் என்று வடகிழக்கு மாநில மக்கள் நம்புகின்றனர். இந்த மாநிலங்களில் வாழும் மக்கள் வேளாண்மையில் கரை கண்டவர்கள். தாயைப் போற்றுவது எப்படி? அவளுடைய ஆசிர்வாதங்களைப் பெறுவது எப்படி? என்பது பற்றி எல்லாம் தெரிந்து வைத்திருபவர்கள் இவர்கள். எல்லோருக்கும் பொருந்தி வரக்கூடிய, நீடித்து நிலவக்கூடிய, சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண்மை முறைகளை வளர்த்தெடுத்துத் தருவது எப்படி என்பதை இவர்கள் அறிந்து வைத்திருக்கின்றனர்.

நீடித்து வரக்கூடிய விதத்தில் இயற்கை வளங்களை முறையாகப் பயன்படுத்துவதும், மக்களின் ஈடுபாடும் அவசியமானவை. நீடித்து நிலவக்கூடிய வளத்தினால் தான் முன்னேற்றம் சாத்தியப்படும்.

•

# வடகிழக்கு மின்மயமாக்கல்: சவால்களும் வாய்ப்புகளும்

**– கே. இராமநாதன்**

**உ**லகின் எந்த ஒரு பகுதியானாலும் அதன் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு துடிப்பான மின்சக்தித் துறை மிகவும் அவசியமானது. இந்தியாவின் வடகிழக்குப் பிராந்தியத்திற்கும் இது பொருந்தும். நம்நாட்டின் பல்வேறு பொரு ளாதார சமூக அளவீடுகளின் சராசரியை விட வடகிழக்குப் பகுதியின் அளவிகள் குறைவாகவே உள்ளன. சராசரி வருவாய், மின்சக்தி நுகர்வு, தொழில்மயம் போன்ற வற்றில் வடகிழக்கு மாநிலங்கள் மிகவும் பின் தங்கியுள்ளன. சிக்கிம் மாநிலத்தைத் தவிர பிற வடகிழக்கு மாநிலங்கள், தேசிய சராசரியை விடப் பெருமளவு மின் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளன. இந்தப் பிராந்தியத்தில் அபரிமிதமான நீர்மின்சக்தி வளங்களும், வேறு பல புதுப்பிக்கத்தக்க மின் சக்தித் திறனும் உள்ளன. மக்களின் எழுத்தறிவு தேசியச் சராசரியை விட அதிகம். நிதி ஆதாரங்களுக்குத் தடையில்லாத வகையில் சிறப்பு அந்தஸ்து பெற்றவையாகவும்.இந்த மாநிலங்கள் உள்ளன, எனவே வடகிழக்கு மாநிலங்களின் மின்சக்தித்துறையில் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்வது முக்கியமான தாகும். இதனால் ஒட்டுமொத்த தேசத்திற்கும் பலன் கிடைக்கும்.

எனினும் நீடித்த மின்சக்தி வளத்தை உறுதி செய்வது எளிதான பணி அன்று. இத்துறையில் நிலவும் சவால்களையும், இருக்கின்ற வாய்ப்பு களையும் கருத்தில் கொண்டு, பல்முனை உத்தியைப் பின்பற்றினால் இலக்கு சாத்திய மாகும். இதுவரை பயன்படுத்தபடாத மின் சக்தி வளங்களை துரிதகதியில் பயன் பாட்டுக்கு கொண்டு வருதல், இந்தப் பிராந்தி யத்தின் மின்சாரத் தேவை வளர்ச்சி பற்றி மதிப்பிடுதல், மின்சாரம் கொண்டு செல்லு தல் மற்றும் விநியோகக் கட்டமைப்பை விரிவாக்குதல், மின் கொள்கை ஒழுங்குமுறைக் கட்டுக்கோப்பையும் மேலாண்மையையும் மேம்படுத்துதல், தேவையான மனித ஆற்றலை அளித்தல் போன்றவற்றில் தக்க நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும்.

### துரிதகதியில் நீர்மின் சக்தியைப் பெறுதல்:

ஆண்டொன்றுக்கு வடகிழக்கு மாநிலங் களில் சுமார் 56000 மெகாவாட் நீர்மின் சக்தியைப் பெற வாய்ப்புள்ளது என்று கணித் துள்ளனர். இதில் சுமார் 10 சதவீதம் மட்டுமே தற்போது பெறப்படுகிறது. எஞ்சியுள்ள வாய்ப்பு களைத் தொடர்ந்து பயன்படுத்துவது மூலம், வடகிழக்கு பிராந்தியத்தின் ஒட்டுமொத்த மின் தேவையையும் நிறைவு செய்து விடலாம். மேலும் நாட்டின் பிறபகுதிகளின் பசுமைமின் தேவையையும் நாம் வழங்க முடியும். இப் பகுதிகளில் நீர்மின் திட்டங்களை சரியான முறையில் அமைக்கும் போது வெள்ளச் சீற்றங்களைக் கட்டுபடுத்துவதுடன், பாசனத் தேவைகளையும் நிறைவேற்றமுடியும்.

அதிகப்படியான மூலதனச் செலவு, திட்டம் நிறைவேற அதிகக்காலம் ஆகுதல், பிரதேச நீர் ஆதாரக்கட்டமைப்பில் மாறுதல், நிலநடுக்க பாதிப்பு, மக்கள் இடம் பெயர்தலும் மறுவாழ்வு ஏற்பாடுகளும் மேற்கொள்ளுதல் போன்ற பலச் சவால்களை, நீர்மின் திட்டங்களை நிறைவேற்றும் போது நாம் எதிர் கொள்ள வேண்டும். சில சமயங்களில் சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள், கீழ்நிலை பாசன உரிமைகள், முறையான நில உரிமை ஆவணங்கள் இல்லாத நிலையில் இழப்பீடு பெறும் பயனாளிகளைக் கண்டறிதல் சிரமம். பசுமைத் தீர்ப்பாயம்

**கே. இராமநாதன்,** ஆய்வறிஞர், ஆற்றல் மற்றும் வளங்கள் நிறுவனம், புதுதில்லி.

போன்றவற்றில் வழக்குகளை எதிர்கொள்ளல், தடையின்மைச்சான்று பெறுவதில் கால விரயம், மோசமான சாலை தொடர்புவிதிகள் போன்ற இன்னபிற சவால்களையும் தாண்டியே நீர்மின்திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியுள்ளது. எனவே இத்திட்டங்களில் முதலீடு செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்களும் தயங்குகின்றனர். புதுதில்லியில் உள்ள ஆற்றல் வள ஆய்வு நிறுவனம் மேற்கொணட ஒரு ஆய்வின் போது உள்ளூர் மக்கள் தமது பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் இழந்துவிடக் கூடிய அபாயமும் இத்தகைய திட்டங்களில் ஏற்படலாம் என்பதும் தெரிய வந்தது. மேலும் பருவநிலை மாற்றங்கள் பெரிதாக நிகழ்ந்து வருகிற சூழலில், நீர்வழிகள், நீர் ஆதாரங்கள் பற்றிய தற்போதைய தரவுகளின் அடிப்படையில் நீர்மின்திட்டங்களை செயல்படுத்துவதால் எதிர்பார்க்கின்ற பயன் கிட்டுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இந்தச்சவால்கள் மிகவும் சிக்கலானவையாக இருப்பதுடன், சமூக அரசியல் தளங்களில் மிகவும் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தக் கூடியவை. எனவே கீழ்காணும் விஷயங்களில் ஒருமித்த கவனம் தேவை 1) ஒவ்வொரு வடிநிலத்திற்கும் ஏற்றவாறு தனித்தனி திட்டங்களைத் தீட்டி, ஒருங்கிணைந்த முறையில் அவற்றைச் செயல்படுத்த வேண்டும். 2) பாதிப்புக்குள்ளாகும் நீர்வளங்கள் அனைத்தையும் பற்றிய வரைபடத்தை தவிர்த்தல். 3) சர்வதேச நீர்மின் சங்க உடன்படிக்கையின் படி, உள்ளூர் மக்களின் தேவைகள், திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பாதிக்கபடாமல் உறுதிசெய்தல் 4) சுற்றுச்சூழல் பாதிப்பு பற்றி வெளிப்படையான தொழில் முறை மதிப்பீடுகள் மேற்கொள்ளுதல், 5) தடையின்மை அல்லது ஒப்புதல் சான்றுகளைத் துரிதமாகப் பெறுதல் 6) பொதுமக்களையும் உள்ளூர் பிரதிநிதிக் குழுக்களையும் திட்டப்பணிகளில் கருத்து சொல்லுதல் முதலானவற்றில் ஈடுபடுத்துதல். 7) நீர்வழிகளில் அணைகள் கட்டுவதால் கீழ்நிலையில் பாசனம், குடிநீர் போன்ற தேவைகள் பாதிக்கப்படுவதாக எழும் முறையீடுகளுக்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வுகளுக்கு முன்னுரிமை அளித்தல்.

## ஏனைய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களை மேம்படுத்துதல்

உயிரிக்கழிவு மின் திட்டம், சூரியசக்தி மின்திட்டம், சிறியநீர்மின் திட்டங்கள் போன்றவை மூலம், தொலைதூர பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு மின்வசதியை அளிக்க முடியும். வடகிழக்கு பிராந்தியத்தில் சுமார் 2200 மெகாவாட் மின்னுற்பத்தித் திறன் கொண்ட சுமார் ஆயிரம் நீர்மின் திட்டங்களை அமைக்க வாய்ப்புகள் உள்ளதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கதக்க எரிசக்தி அமைச்சகத்தின் ‘சூரியமின் சக்தி நகரம்’ என்ற திட்டத்தின் கீழ் வடகிழக்கு பிராந்தியத்தின் எட்டு நகரங்களுக்கான பெருந்திட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அய்ஸ்வால் மற்றும் அகர்தலா நகரங்கள் முன்னோடி சூரியமின்சக்தி நகரங்களாக மாறுகின்றன.

இத்திட்டங்கள் செயல்படுத்த வேண்டிய பகுதிகள் மிகவும் ஒடுங்கிய ஒரு மூலையில் இருப்பதும், திட்டங்களால் மக்கள் இடம்பெயர வேண்டியிருப்பதும், முதலீடு செய்பவர்களின் ஆர்வமின்மையும், சரியான வாணிக ரீதியான திட்ட வரைவுகள் இன்மையும் வடகிழக்குப் பகுதிகளில் புதிய மின்திட்டங்கள் விரைந்து செயல்படுத்தப் பெரும்தடைக் கற்களாக உள்ளன. மின்தொகுப்பு இணைப்போடு சேர்க்கக் கூடிய திட்டங்கள் எனவும், மின்தொகுப்பு இணைப்போடு சேராமல் தனித்துச் செயல்படக் கூடிய திட்டங்கள் எனவும் தனித்தனியே செயல்படுத்துவதன் மூலம் சில தடைகளை களையமுடியும்.மக்கள் நெருக்கம், மாறுபடும் மின்நுகர்வு தேவை போன்றவற்றை மதிப்பிட்டு, முன்னுரிமை வரிசையிலும் திட்டங்களைச் செயல்படுத்தலாம்.

## மின்சாரத்தைக் கொண்டு செல்லவும் விநியோகிக்கவுமான ஏற்பாடுகள்

ஆதாரநிலையில் இருந்து மின்சக்தியைத் தேவைப்படும் இடங்களுக்குக் கொண்டு

செல்லவும் விநியோகிக்கவும் தரமான பகிர் மானக் கட்டமைப்பு தேவை. புதிய திட்டங் களைச் செயல்படுத்தும் ஆரம்ப காலங்களில் மின்நுகர்வுத் தேவை குறைவாக இருப்பதாலும், விநியோகக் கட்டமைப்புக்கு பெரும் செலவு ஆவதாலும், மின்கட்டணங்கள் அதிகமாகக் இருக்ககூடும். உற்பத்திதிறனைக் கூடுதலாக்கு தலில், நிச்சயமற்ற தன்மை, இலகுவற்ற நிலப் பரப்பு, தொடர்ந்த மின்உற்பத்தியில் உத்தர வாதமற்ற நிலை போன்றவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே மின்பங்கீட்டு பாதைகளைக் கட்டமைக்கும் முன்பாக கீழ்காணும் விவரங் களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

1. நீண்டகாலத்திய மின்னுற்பத்தி விரி வாக்கத் திட்டங்கள்
2. மின்நுகர்வுத் தேவை வளர்ச்சி மதிப் பீடுகள்
3. ஒவ்வொரு வடிமுனைக்கும் உரிய வளர்ச்சி திட்டங்கள்
4. மின் பகிர்மானப் பாதைகளுக்கு உரிமம் பெறுவதில் உள்ள தடைகள்.
5. மின் விநியோகத்தின் போது இழப்பைக் குறைத்தல்.
6. புதிய தொழில் நுட்பங்களைப் பின் பற்றுதல், நவீன மின்தொகுப்புக் கட்ட மைப்பு நுட்பங்கள்.
7. மின்தொகுப்புக் கட்டமைப்புகளின் விரிவாக்கமும் ஒருங்கிணைப்பும்

### செயல்திறன் மேம்பாடுகள்

தேவை அளிப்புத் தொடர் சங்கிலியில் திறன் மேம்பாட்டுப் பணிகளே மின்சக்தித் திட்டங்களின் வெற்றிக்கு அடிப்படையாகும். மின்சக்திசட்டம், எரிபொருள் சிக்கனச் சட்டம், மேம்பட்ட எரியாற்றல் திறனுக்கான தேசிய இயக்கம் போன்றவை இதற்கு ஆதார சுருதியாகவும் வழிகோலுவதாகவும் அமைந்துள்ளன. இந்த விஷயத்தில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அவசியமானதாகும்.

நிலைபெற்று நீடிக்கும் மின்சக்தித்திட்டங் களுக்கு அரசின் ஆதரவான கொள்கைகளும் ஒழுங்கற்ற நடவடிக்கைகளும் தேவை. எனவே அவசியமான இடங்களில் தனியார் அரசு கூட்டச் செயல்பாடுகளுக்கு உதவுவதாக அரசின் கொள்கைகள் அமையவேண்டும். இதனால் நிதி ஆதாரங்களும், மேலாண்மைச் சேவையும் கிடைப்பதில் தடைகள் இருக்காது. மேலும் இத்தகைய அரசின் கொள்கைகள் அவ்வப்போது உரிய காலஇடைவெளியில் சீராய்வு செய்யப்பட்டு, திட்டத்தின் நோக்கம் சரியாக நிறைவேறியுள்ளதா என்று கண்டறிந்து, தேவையெனில் அந்தக் கொள்கைகளில் உரிய மாற்றங்களையும் செய்திடவேண்டும்.

புதிய தொழில்நுட்பங்களுடன் செயல் படுத்தப்படும் திட்டங்களைக் கட்டமைக்கவும், பராமரிக்கவும் நுட்பஅறிவு கொண்ட மனித ஆற்றல் தேவை. அதேபோல நிருவாகம், நிதி மேலாண்மை போன்றவற்றுக்கான திறன்மிக்கப் பணியாளர்களை உருவாக்கிக் கொண்டிருப் பதும் அவசியம்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் மின்சக்தித் துறை வளர்ச்சியை நீடித்து நிலை பெறச் செய்வதில் பல சவால்கள் இருந்தாலும், அதிக அளவில் வாய்ப்புகளும் உள்ளன. இப்பகுதியில் மின் சக்தித்துறையை வளர்த் தெடுக்க முக்கியத்துவம் அளிப்பதால் நாட்டின் ஒட்டு மொத்த மின்கட்டமைப்புத்துறையும், தடையற்ற மின்சார விநியோகமுறையும் மேம்படும். மேலும் பசுங்குடில் வாயு வெளி யேற்றத்தைக் குறைக்க வேண்டும் என்ற இலக்கினை எட்டவும், சூரிய சக்தி, காற்றாலை மின்சக்தி போன்றவற்றை உள்ளடக்கிய மாபெரும் மின் தொகுப்புக் கட்டமைப்பு உருவாகவும் அது வழிவகுக்கும். •

# பழங்குடி இனத்தவர் பகுதிகளில் உடல்நலம் பற்றிய அக்கறை: தற்போதைய நிலையும் எதிர்காலமும்

– டாக்டர் அபய் பங்

### மறு பார்வைக்கான தேவை:

2011இல் இந்திய மக்கள் தொகையில் 8.6 விழுக்காடு பேர் பழங்குடியினர். இவர்களின் மொத்த எண்ணிக்கை 10 கோடி இருக்கும். பாதிப்புகளுக்கு உள்ளாகி விளிம்பு நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த 10 கோடி மக்களின் உடல் நலம் தேசத்தின் முக்கியமான அக்கறையாக இருக்கவேண்டும். இவர்களின் மோசமான சமூக, பொருளாதார, கல்வி நிலைமைகள் அனைவருக்கும் தெரிந்ததுதான். அவர்களின் உடல்நலம் பற்றிய நிலவரம் என்ன?

1. கடந்த 10 ஆண்டுகளில் பழங்குடி மக்கள் இனத்தில் வாழ்நாள் அதிகரித்திருப்பதாக **இறப்பு விகிதக் குறிகாட்டிகள்** தெரிவிக்கின்றன. ஆயினும் பொதுவான மக்கள் தொகையில் இருப்பதைக் காட்டிலும் குறிப்பிடத்தகுந்த வகையில் இது மோசமானதாகவே இருக்கிறது. குழந்தை இறப்பு விகிதங்களின் ஓர் ஒப்பீடு வருமாறு:

பழங்குடி இனத்தவர்களில் சிசு மரண விகிதங்கள், பொதுவான மக்கள் தொகையினரில் இருப்பதை விடவும் மூன்றில் ஒரு பங்கு அதிகமாக இருக்கிறது. மேலும் இந்த விகிதம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடவும் செய்கிறது. ஏழு மாநிலங்களில் சிசு மரண விகிதம் அதிகமானதாக இருக்கிறது.

2. பழங்குடி இனமக்களின் **ஊட்டச்சத்து** நிலவரமும், வயதுவந்தோர் ஊட்டச்சத்து நிலவரமும் கவலையளிப்பதாகவே இருக்கிறது.

(1) பள்ளிக்குச் சேரும் வயதிற்கு முந்தைய வயதுடைய குழந்தைகளில் 53 விழுக்காடு சிறுவர்களும் 50 விழுக்காடு பெண் குழந்தைகளும் எடைகுறைவானவர்களாக உள்ளனர். 57 விழுக்காடு சிறுவர்களும் 52 விழுக்காடு சிறுமிகளும் உயரத்தில் வளர்ச்சி தடைபட்டவர்களாக உள்ளனர்.

(2) 49 விழுக்காடு பழங்குடி இனப்பெண்களின் உடல்திரள் குறியீடு 18.5க்கும் கீழ் உள்ளது. நாள்பட்ட ஊட்டச்சத்துப் பற்றாக் குறையை இது காட்டுகிறது.

(3) பழங்குடி இனத்தவரின் வீடுகளில் உணவுமுறையில் புரதம், கொழுப்புச்சத்து, இரும்புச்சத்து, விட்டமின் ஏ, ரிபோபிளோவின் சத்து ஆகியவற்றின் பற்றாக்குறை அதிக அளவில் நிலவுகிறது.

ஊட்டச்சத்துக் குறைபாடு பழங்குடியின பெரியவர்கள், குழந்தைகள் ஆகியோரிடம் கடந்த சில ஆண்டுகளில் குறைந்தே வந்துள்ளது. இருந்தபோதிலும், இப்போது காணப்படும் அளவில் உள்ள உணவுப் பற்றாக்குறையும் ஊட்டச்சத்துக் குறைபாடும் ஏற்றுக் கொள்ள முடியாதவை.

| | பழங்குடி இனத்தினர் | பிற இனத்தவர் | வேறுபாடு | சதவீதத்தில் |
|---|---|---|---|---|
| 1. | சிசு மரண விகிதம் | 62 | 49 | 27% |
| 2. | 5 வயதுக்குக்குறைவான | 96 | 59 | 39% |
| குழந்தைகளின் மரணம் | | | | |

**டாக்டர் அபய் பங்,** இயக்குநர், SEARCH (அரசுசாரா அமைப்பு) மற்றும் இந்திய அரசின் வல்லுனர் குழுவின் தலைவர்.

(3) பழங்குடி இனத்தவர்களிடையே அதிகம் காணப்படும் நோய்களை பின் வருமாறு வகைப்படுத்தலாம்:

(அ) வளர்ச்சிக் குறைபாட்டிற்கு காரண மான நோய்கள் (ஊட்டச்சத்துப் பற்றாக்குறை, தொற்றுநோய்கள், தாய்சேய்நலப்பிரச்சனைகள்)

(ஆ) இவர்களிடையே பொதுவாகக் காணப்படும் இரத்த சோகை நோய் *(sickle Cell disease)*, விலங்குக்கடிகள், விபத்துக்கள் போன்றவை.

(இ) நவீனத்துவ நோய்கள் (மிகை ரத்த அழுத்தம், குடிப்பழக்கம், மனஅழுத்தம் போன்றவை)

பழங்குடி இனத்தவருக்கான **பொது சுகாதாரச்சேவை** மிகவும் பலவீனமானதாக இருக்கிறது. பற்பல இடர்ப்பாடுகளின் காரண மாக பாதிக்கப்பட்டுள்ளது.

(1) பழங்குடியினர் அல்லாத பிறருக்கென வடிவமைக்கப்பட்டுள்ள தேசிய மாதிரிகள் பழங்குடியின் மக்களுக்குப் பொருந்தாது. பலவகைப்பட்ட நம்பிக்கை முறைமைகள், பலவகையான நோய்ச்சுமை, உடல்நலம் பராமரிப்புத் தேவைகள், நிலவமைப்பில் அங்குமிங்குமாக பரவிக்கிடக்கும் குடியிருப்புப் பகுதிகள் போன்ற தனித்த பல அடை யாளங்களையும் சிக்கல்களையும் உள்ளடக்கிய தாக பழங்குடி மக்களுக்கான உடல்நலப் பராமரிப்புச் சேவை அமைந்துள்ளது. காடுகளாலும், இயற்கை சக்திகளாலும் சூழப் பட்டநிலையில் வெவ்வேறு விதமான பண் பாடுகளைக் கொண்டவர்களாக வாழும் பழங் குடியினருக்கென தனிப்பட்ட ஒரு சுகாதார மாதிரியை வடிவமைப்பது பற்றி தீவிரமாக யோசிப்பதற்கு நாம் தவறி இருக்கிறோம் என்பது ஆச்சரியமளிக்கிறது.

(2) பொது சுகாதார சேவையை வழங்குவதில் இருக்கக்கூடிய மிகப்பெரிய சங்கடம் ஒன்று உண்டு. பழங்குடி இன மக்கள் வசிக்கும் பகுதிகளில் பணிபுரிய விரும்பக்கூடிய பயிற்சிபெற்ற திறமையான பணியாளர்கள் இல்லை. **ஆள் பற்றாக்குறை, பணி இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது,** பணியாளர்கள் வேலைக்கு வராமல் போவது, அரைமனதுடன் வேலை பார்ப்பது ஆகிய பிரச்சனைகள் இங்கு உள்ளன. மருத்துவர், செவிலியர், தொழில் நுட்பப் பணியாளர் போன்ற பலரையும் உள்ளடக்கிய பிரச்சனை இது.

(3) கட்டடங்கள் கட்டப்பட்டு உடல் நலபராமரிப்புக்கான அமைப்புகள், துணை சுகாதார நிலயங்கள், பொது சுகாதார மையங் கள், CHCக்கள் என்ற பெயரில் உருவாக்கப் பட்டிருந்த போதிலும் அவை அடிக்கடி செயல் படாமல் போகின்றன. இதனால் சேவை களை **திறம்பட வழங்க இயலாமல்** போகிறது. மேற்பார்வையில் உள்ள குறைபாடு, வேலைக்கு வராமை, பதில் சொல்லவேண்டிய பொறுப் பின்மை ஆகியவற்றால் இது இன்னமும் சிக்கலாகிவிடுகிறது.

(4) ஊழியர்கள் நட்புணர்வுடன் பழகாதது, மொழி புரியாமை, நீண்ட தொலைவுக்கு பயணிக்க வேண்டியிருப்பது, போக்குவரத்து வசதிக் குறைபாடு, கல்வி அறிவின்மை, நலச் சேவைகளை பெறுவதில் நாட்டமின்மை ஆகி யவை பழங்குடி இனமக்கள் வசிக்கும் பகுதி களில் சேவைகள் **குறைவாக பயன்படுத்திக்** கொள்ளப்படுவதற்கான காரணங்களாகும்.

(5) ஆபத்தான நேரங்களிலும் கூட, **மருத்துவ வசதிதேடி** மருத்துவமனைகளைச் சென்றடைவதும் குறைவாகவே உள்ளது. பழங்குடி மக்கள்வசிக்கும் பகுதிகளில் பொது சுகாதாரத்திட்டம் தரம்குன்றி, பயன்குன்றி, தேவை இல்லாதவற்றிற்கு முன்னுரிமை தரப் பட்டு செயல்பட்டுவருகிறது. இதனை மறு சீரமைப்பதும், வலுவூட்டுவதும் மத்திய, மாநில அரசு சுகாதாரத்துறைகளின் முன்னுரிமை களாகின்றன.

பொருத்தமில்லாமல் வடிவமைக்கப்பட்டு மோசமாக நிர்வகிக்கப்பட்டு வரும் பழங்குடி இன சுகாதாரத்திட்டத்தில் பழங்குடியின் மக்கள் ஒருவர் கூட பங்கேற்காமல் விட்டு விடுகின்றனர். கொள்கைகளை வகுப்பது, திட்டங்களையும் செயல்படுத்துவது, சேவை களை வழங்குவது ஆகியவற்றில் பழங்குடி மக்களுக்கோ அவர்களின் பிரதிநிதிகளுக்கோ பங்கேற்பு இல்லாமலேயே இருக்கிறது. கிராம அளவில் இருந்து தேசிய அளவு வரை இது தான் உண்மை நிலவரம்.

இதுவரை குறிப்பிடப்பட்ட இடையூறு களோடுகூடவே பொதுவான ஒரு பார்வையும், புகாரும் இருக்கிறது. பழங்குடி இன மக்களின் சுகாதாரத்திற்காக ஒதுக்கப்படும் நிதிமுழு வதுமாகப் பயன்படுத்தப் படுவதில்லை. வேறு காரியங்களுக்கு மடைமாற்றி விடப்படுகின்றன. ஊழல்களினால் பணம் சுரண்டப்படுவதும் நடக்கிறது.

## எப்படி மாற்றியமைப்பது?

*1.* பழங்குடி மக்களுக்கான எந்தத்திட்டமும் கொள்கையும் அந்த மக்களின் பங்கேற்புடன் தான் அமலாக்கப்படவேண்டும். பழங்குடி மக்கள் மற்ற மக்களைப் போல அரசியல் ரீதியாக குரல் எழுப்பும் சக்தி உடையவர்கள் அல்லர். வெவ்வேறு நிலப்பகுதிகளில் வாழ்வது, சமுக பொருளாதார, பண்பாட்டுச் சூழல்கள், வித்தியாசமான சுகாதாரப் பண்பாடுகள், உடல் தேவைகளை வித்தியாசமான வகை களில் நிறைவேற்றிக் கொள்வது என்ற நிலைமைகள் இவர்களுக்கு உள்ளன. எனவே இவர்களுக்கான பார்வைகளுக்கும், தேவை களுக்கும் இவர்களின் திட்டங்களில் முன் னுரிமை தரப்படவேண்டும்.

*2.* இந்தியாவில் உள்ள *700* பழங்குடி இன மக்களிடையே நிலவும் ஏராளமான வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு அந்தந்தப் பகுதிக்கேற்ற உள்ளூர் திட்டமிடல் தேவைப்படுகிறது. இதற்கான ஒரு நிறுவன அடிப்படையை *PESA* வழங்குகிறது. சிற்றூர் களிலுள்ள பழங்குடி இன சுகாதாரக் குழுக்கள், மாவட்ட அளவிலான குழுக்கள், மாநிலக் குழுக்கள், பழங்குடி இன ஆலோசனைக் குழுக்கள் போன்றவை உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டால் உள்ளூர் அளவிலான திட்டமிடல்கள் நிறைவேறுவதோடு ஒரு இயக்க முறையும் உருவாகும்.

*3.* சுகாதாரத்தை வரையறை செய்யக்கூடிய சமூகக்காரணிகள்–கல்வியறிவு, வருமானம், நீர், தூய்மை, எரிபொருள், உணவுப்பாதுகாப்பு, உணவுப் பன்மை, பாலின கூருணர்வு, போக்கு வரத்து, எளிதாக சென்றடையக் கூடிய நிலை ஆகியவை சுகாதார வெளிப்பாடுகளை கொண்டுவருவதற்கு துணை புரியக்கூடியவை. எனவே ஒரு பிரிவுடன் மற்றொன்று இணையக் கூடிய ஒருங்கிணைப்பும் இங்கு அவசிய மானது.

## உடல்நலத்தை மேம்படுத்துவதற்கான குறிப்பிடத்தக்க சில யோசனைகள்:

- கழிவுநீர் ஓடக்கூடிய அமைப்புகளை உருவாக்குதல், கிராமப்புறத்தூய்மை, தனிநபர் சுகாதாரம், கழிப்பிடங்கள், கொசுக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக் கைகள் போன்றவை தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தில்சேர்க்கப்பட்டுமுன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்படலாம்.

- வீடுகளில் தூய்மையற்ற எரிப்பொருள்கள், சாணம், விறகு ஆகியவற்றை எரிப்பதைக் குறைத்துக் கொண்டு சூரிய ஆற்றல், சூரிய சக்தி அடுப்பு, நீரைச்சூடாக்கும் கருவிகள், விளக்குகள் போன்றவற்றை பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில் மேம்படுத்தி அமைக் கலாம், மரங்களைப் பாதுகாப்பதற்கும் இது உதவிடும்.

- குழந்தைகள்; வளரிளம் பருவத்தினர், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் ஊட்டச்சத்தை அதிகரிப்பது

மிக முக்கியமான செயலாகும். ஊட்டச்சத்து பற்றிய விழிப்புணர்வும், உணவு ஊட்ட முறைகளும் தேசிய ஊரக வாழ்வாதார அமைப்பு, பெண்கள் குழுக்கள் ஆகியோருடன் இணைந்து கிராமங்களில் அதிகரிக்கப்பட வேண்டும்.

- மது பானங்கள், புகையிலைப் பழக்கம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் குடும்பங்களின் வருமானமும் உடல்நலமும் அதிகரிக்கும்.

*(4)* பழங்குடி மக்களுக்கு **அதிகாரம்** அளிப்பது இன்னொரு மிக மையமான கொள்கைத் திட்டமாகும். அவர்களின் உடல் நலத்தில் அவர்களே அக்கறைகாட்டும் விதத்தில் திறன்களை வலுப்படுத்த வேண்டும். எப்போதும் பிறரையே சார்ந்திருக்க வேண்டிய அவர்களின் நிலையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். அரசாங்கமும் மற்ற சமூகத்தினரும் தங்களின் பொறுப்பை கைகழுவுவதாக இதற்குப் பொருள் கொள்ளக்கூடாது. ஆனால், இந்தப்பொறுப்பை உள்ளூர் திறமைகளைப் போற்றி வளர்ப்பதன் மூலம் கால ஓட்டத்தில் சிறப்பாக நிறைவேற்றப்படலாம். வேறுவார்த்தைகளில் சொல்வதானால், உடல்நல பராமரிப்புச் சேவையை வழங்குவதற்குப் பதிலாக உடல் நலத்தைப் பேணும்திறனை மேம்படுத்திக் கொள்ளும் விதத்திற்கான கொள்கைத்திட்டம் அமைய வேண்டும். உடல்நலம் பராமரிப்பை மேற்கொள்வதற்கு இந்தத்திட்டம் வழிகாட்ட வேண்டும்.

*(5)* பலநூற்றாண்டுகளாக **அறிவியல் புரிதல்** இல்லாதிருக்கும் இடைவெளியை இட்டு நிரப்பும் விதமாக பழங்குடி மக்களிடையே சுகாதார அறிவைப் பரப்பவேண்டும். மக்களைத்திரட்டி அறிவு புகட்டுதல், நாட்டுப்புற இசை, நவீன ஊடகங்கள், பள்ளிப்பாடத்திட்டம் இவைகளின் மூலம் இதனைச் செய்யலாம். உள்ளூர் மொழியில் சொல்வதற்கு பற்பல வசதிகள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன.

*(6)* ஏராளமான எண்ணிக்கையிலான பழங்குடி குழந்தைகளும், இளையோரும்–ஒரு கோடிக்கும் மேலான எண்ணிக்கையில் தற்போது பள்ளிகளில் பயின்று வருகின்றனர். இந்தக்கல்வி அவர்களின் உடல்நலத்தை மேம்படுத்தவும், உடல் நலத்தோடு தொடர்புடைய அறிவை வழங்கவும், அதனைக் கடைப்பிடிக்கச் செய்யவும் உதவிடும். தொடக்கப் பள்ளிகள், இடைநிலை உயர்நிலைப் பள்ளிகள், ஆசிரமப் பள்ளிகள், அங்கன் வாடிகள் போன்றவை அனைத்தும் **அடிப்படை சுகாதார அறிவை** வழங்கக் கூடிய மையங்களாக மாற வேண்டும்.

*(7)* **பாரம்பரிய வைத்தியர்களும் உள்ளூர்** மருத்துவ உதவியில் மிகமுக்கியமான பங்கினை விகிக்கின்றனர். அவர்களை அந்நியப்படுத்துவது, புறக்கணிப்பது, என்று இல்லாமல் அவர்களையும் சேர்த்துக் கொண்டு உடல்நல பராமரிப்பில் அவர்களது ஒத்துழைப்பையும் கொணர்வது பற்றி முயற்சிக்கவேண்டும்.

*(8)* ஊர்களுக்கு இடையே உள்ள தூரத்தை விடவும் ஒரு மிகப்பெரிய **பண்பாட்டு இடைவெளி** பழங்குடி மக்களை மற்றவர்களிடமிருந்து பிரிக்கிறது. பழங்குடி இனத்தவருக்கு சுகாதார சேவை வழங்கும் திட்டம் அவர்களின் பண்பாட்டை அங்கீகரிப்பதாக, அவர்களின் மொழியை ஏற்பதாக அமைய வேண்டும்.

*(9)* **நலச்சேவை வழங்கும் முறை** தனது வழிகாட்டு நெறியாக இந்த சீனப்பழமொழியைக் கொண்டிருக்கவேண்டும். உடல்நலமில்லாத குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஒரு தாயினால் எவ்வளவு தொலைவு நடக்க முடியும்? என்பது. அந்த மொழி இந்த தூரத்திற்குள் சுகாதாரச் சேவை கிடைத்திட வேண்டும். 60 வருடகால தோல்வி, வெளியில் இருந்து திணிக்கப்படும் நலச்சேவை உகந்த தீர்வல்ல என்பதை நமக்கு போதிக்க வேண்டும். பழங்குடி இன மக்கள் வசிக்கும் பகுதியில் சுகாதாரச் சேவை மாதிரி

என்பது உடல்நலத்தை மேம்படுத்துவதிலும், நோய் தடுப்பிலும் பெரும்பாலான நிவாரணம் அந்த கிராமம் அல்லது குடியிருப்புப் பகுதி யிலேயே உருவாக்கப்பட்டு வழங்கப்படுவதாக இருக்கவேண்டும்.

*(10)* பழங்குடி மக்களினத்தில் குடிப்பழக் கத்திற்கு **அடிமைப்படுவது** என்பது மிகப்பெரிய பிரச்சனை. இது உடல் நலத்தை மட்டுமின்றி குடும்பப் பொருளாதாரம், சமூக ஒத்திசைவு, உற்பத்தி ஆகியவற்றையும் பாதித்து இறுதி யில் வளர்ச்சியை முடக்கிவிடுகிறது. ஆகவே *(1)* மத்திய அரசின் உள்நாட்டு விவகாரத் துறையினால் ஏற்பளிக்கப்பட்டுள்ள தாழ்த்தப் பட்டோருக்கான *1975*ஆம் ஆண்டின் **ஆயத் தீர்வை கொள்கைகளை** மாநிலங்கள் திறம்பட செயல்படுத்த வேண்டும். *(2)* அதற்கும் மேலாக புகையிலை, போதைப்பொருள்கள் போன்றவை கிடைப்பதைக் கடுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும். இத்தகைய முயற்சிகள் பழங்குடி இன மக்களின் துணைத்திட்டத்தில் ஒரு முக்கியமான அம்சமாக இடம்பெற வேண்டும். *(3)* பழங்குடி மக்களுக்கு மது, புகையிலைப் பொருள்கள் கிடைப்பதும், பயன்படுத்தப்படுவதும் மாநில அரசுகளால் கட்டுப்படுத்தப்பட்டு மேற்பார்வையிடப்படவும் வேண்டும்.

*(11)* பழங்குடியினர் உபதிட்டம் *(TSP)* நிதிநிலை அறிக்கை பழங்குடி இன மக்கள் தொகைக்கு உகந்தவிதத்தில் சரியான அள வில் இருக்க வேண்டும். பழங்குடி மக்கள் பகுதியில் வழக்கமான சுகாதார செலவினங் களுக்கான ஒரு உள்ளீட்டை *TSP* தரவேண்டு மேதவிர பதிலீடாக அமைந்துவிடக்கூடாது. சுகாதாரத்திற்கு அதிகநிதியை ஒதுக்க வேண்டும். பழங்குடி மக்கள் நலத்திட்டம், வழக்கமான சுகாதார பட்ஜெட் ஒதுக்கீட்டுடன் கூடுதலாக தனியாக வழங்கப் படவேண்டும்.

*(12)* பழங்குடி இன மக்களைப் பற்றிய தரவுகள் திட்டமிடல், மேற்பார்வை, மதிப் பிடுதல் போன்றவற்றிற்கு அடிப்படையாக அமையக்கூடியவை. மக்கள் தொகை கணக் கெடுப்பு, *SRS, NFHS, NSSO, DLHS,* மக்கள் உள்ளிட்ட தேசியதரவுகள் அனைத்துமே பெறப்பட்டு மாவட்ட அளவிலும் அதற்கு மேலும் சுகாதார குறிகாட்டிகளை மதிப் பிட்டறிய பயன்படுத்தப்பட வேண்டும். நம்பகமான பொருத்தமான, வகைவாரியான பழங்குடி மக்கள் தரவுகளைத் திரட்டுவதற்கு மொத்த பட்ஜெட்டில் ஒரு விழுக்காடு தொகை ஒதுக்கப்படவேண்டும். இது ஒரு மிக முக்கியமான கருவியாக அமைந்து திட்ட மேலாளர்களுக்கும், கொள்கைகளை வகுப் போருக்கும் உண்மை நிலவரத்தை வழங்கி சரியான வழிகாட்டுதலைக் கொடுக்கும்.

## நம் முன் இருக்கும் வழி

**இந்திய அரசின் சுகாதார, குடும்பநல அமைச்சகமும்**, பழங்குடி இன விவகாரங்கள் அமைச்சகமும் தற்போதுள்ள பழங்குடி இனத் தவர் உடல்நலப் பராமரிப்பு நிலைமையின் மீது அதிருப்தி கொண்டுள்ளன. இவை இரண்டும் சேர்ந்து இதற்கென ஒரு குழுவை அமைத்துள்ளன. இந்தக்குழு இப்போதுள்ள நிலவரத்தை ஆராயும். தேவையான சீர்திருத்த நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கும். பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதியில் மாவட்ட அளவி லான ஒரு கட்டமைப்பை உருவாக்குவது பற்றிய சிந்தனை இதற்கு இருக்கிறது. பழங்குடி மக்களின் உடல்நலப்பராமரிப்பில் மிகச்சிறந்த நடைமுறைகள் பற்றிய தேசிய அளவிலான பயிற்சிப்பட்டறை நாட்டிலேயே முதல் முறை யாக அண்மையில் நடத்தப்பட்டது. இதில் மிகச்சிறந்த *23* நடைமுறைகள் பற்றி விவாதிக் கப்பட்டது.

அமைச்சகங்களின் வல்லுநர் குழு அறிக் கையை நாம் எதிர்பார்த்திருக்கிறோம். இது ஒரு நல்வழியைக் காட்டக்கூடும். •

# வடகிழக்கு இந்தியாவில் பழங்குடியினர் மேம்பாடு

– என்.சி. சக்சேனா

இந்தியாவில் உள்ள மொத்த பழங்குடியினர் தொகையில் வெறும் 12 சதவிகிதத்தினரே எட்டு வடகிழக்கு மாநிலங்களில் வசிக்கின்றனர். மத்திய இந்திய மாநிலங்களில் பழங்குடியினர் சிறுபான்மையினராக உள்ளனர். அவ்வாறு இல்லாமல் மிசோராம், மேகாலயா மற்றும் நாகலாந்து ஆகிய வடகிழக்கு மாநிலங்களின் மொத்த மக்கள் தொகையில் பழங்குடியினர் 80 சதவிகிதத்துக்கும் அதிகமான எண்ணிக் கையில் உள்ளனர். அதனால் இவர்கள் மீது தற்போது அரசியல் கவனம் குவிந்துள்ளது. கடந்த பல பத்தாண்டுகளாக, வழகிழக்கு பிராந்தியத்தின் சில மாநிலங்களுக்கு பக்கத்தில் உள்ள மாநிலங்கள் மற்றும் வங்கதேசத்தில் இருந்து பொருளாதார ரீதியாக மக்கள் இடம்பெயர்ந்து செல்கின்றனர். இதனால் பூர்வகுடி மக்களுக்கும் குடிபெயர்ந்து வந்தவர் களுக்குமான குடிமையியல் சமநிலையானது ஊசலாட்டமாக இருக்கிறது. உதாரணத் திற்குச் சொல்ல வேண்டுமென்றால் திரிபுரா மாநிலத்தில் 1951ல் 56%ஆக இருந்த பழங்குடி யினரின் மக்கள்தொகை 2001ல் 30%க்கும் கீழாகக் குறைந்துள்ளது. இதேபோன்று அருணாச்சலப்பிரதேச மாநிலத்தில் பழங்குடி யினரின் மக்கள்தொகை 1951ஆம் ஆண்டு 90%ஆக இருந்தது. இது 1991ல் 64%ஆக குறைந்து விட்டது. அசாமின் சமவெளிப்பகுதி பழங்குடியினமான போடோக்கள் (போடோ சுயாட்சி கவுன்சிலின் கீழ் உள்ள) பல மாவட் டங்களில் பரவி தற்போது சிறுபான்மையின மக்களாக மாறி உள்ளனர். பிற இடங்களில் இருந்து குடிபெயர்ந்து வந்த முஸ்லீம்களிடம் இவர்கள் தங்கள் நிலத்தை இழந்துள்ளனர். இதனால் பெரிய அளவிலான வன்முறைகள் அடிக்கடி நிகழ்கின்றன.



இந்த மக்கள்தொகை பிரிவினையின் ஒரு அம்சமாக பழங்குடியினருக்கும் பழங்குடியினர் அல்லாதவர்களுக்கும் இடையிலான அதிகார உறவுகள் சரிசமமாக இல்லாமல் (அசாமில் அகோம், மணிப்பூரில் மைட்டீஸ், திரிபுராவில் வங்காளிகள்) உள்ளது. பழங்குடியினர் அல்லாதவர்கள் அரசியல், பொருளாதார அதிகாரத்தை தங்கள் வசம் வைத்துள்ளனர். பழங்குடியின மக்களுக்கிடையிலும்கூட பல முரண்பாடுகள் உள்ளன. வடகிழக்கு இந்தியாவில் 220 இனக்குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு குழுவுக்கென்றும் சொந்தமான கலாச்சாரமும் பழங்குடியின பாரம்பரியமும் உள்ளன. இவர்கள் தங்களுக்கென்று உள்ள பழங்குடியின மொழியையே பேசுகின்றனர். வடகிழக்கு இந்தியாவில் உள்ள கலாச் சார பன்முகத்தன்மையே பழங்குடியினருக் குள்ளேயே முரண்பாடுகளை பல மாநிலங் களில் ஏற்படுத்தி உள்ளன. இதனால் அந்தப் பகுதிகளில் அமைதி கெடுவதோடு முன்னேற்ற மும் தடைபடுகின்றது.

## ஆறாவது அட்டவணை

இந்திய அரசியல் அமைப்பில் சேர்க்கப்

**என்.சி. சக்சேனா**, செயலாளர், ஊரக வளர்ச்சி அமைச்சகம்; செயலாளர் சிறுபான்மையினர் ஆணையம், புது தில்லி.

பட்ட ஆறாவது அட்டவணையின்படி 1960களில் இருந்த பிரிக்கப்படாத அசாம் மாநிலத்தில் சிறுபான்மையினராக இருந்த பழங்குடியின மக்கள் தங்களுக்கான வளர்ச்சி மாதிரிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டது. மேலும் தங்களது மரபான பழக்க வழங்கங்களையும் பாரம்பரியத்தையும் பாதுகாத்துக் கொள்ளவும் இந்த அட்டவணை அவர்களுக்கு உதவியது. ஏனெனில் இவைதான் பழங்குடியினருக்கு தனித்த அடையாளத்தை தரும் அம்சங்கள் ஆகும். பழங்குடியினர் பெரும்பான்மை யினராக உள்ள மாநிலங்களாக நாகலாந்து, மிசோராம் மற்றும் மேகாலயா மாநிலங்கள் உருவாக்கப்பட்ட பிறகு சூழல் மாறியது. மாநில அந்தஸ்து கிடைத்ததும் நாகர்கள் விலகிச் செல்ல ஆரம்பித்தனர். மிசோக்கள் ஆறாவது அட்டவணையை மிசோராம் மாநிலத்தில் உள்ள சிறுபான்மை பழங்குடியினருக்கு மட்டுமே பயன்படுத்தினர். ஆனால் மேகாலயா மாநிலம் மட்டும் தன்னாட்சி மாவட்ட கவுன்சில்களை (ஏடிசி) தொடர்ந்தது. இது ஒரு துணை சட்டமன்றம் போன்று இருந்தது. இந்த மாற்று அரசியல் அமைப்பை அவர்கள் தொடர்ந்தனர். மாநில சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் தற்காலிகமாகப் பதவியைப் பெற இந்தக் கவுன்சில்கள் அவர்களுக்கு மாற்று இடமாக விளங்கின. அசாமின் ஒரு பகுதியாக மேகாலயா இருந்தபோது இந்தக் கவுன்சில்கள் பொருத்தமானதாக இருந்தன. பழங்குடியினப் பகுதியில் சுயாட்சி நடப்பது போன்ற உணர்வு கிடைத்தது. பழங்குடியினர் அல்லாதவர்கள் பெரும்பான்மையாக தம்மைச் சூழ்ந்திருந்தாலும் தங்களின் தனித்தன்மையை இவர்கள் இழக்காமல் இருக்க இத்தகைய கவுன்சில்கள் உதவின. இப்போது மேகாலயா தனி மாநிலமாக உள்ளது. இதில் 85%க்கும் அதிகமாகவே பழங்குடியினர் உள்ளனர். மாநில சட்டமன்றத்திலும் அதிகார அமைப்பிலும் பழங்குடியினருக்கு போதுமான பிரதிநிதித்துவம் உள்ளது. இந்தப் பின்னணியில் தன்னாட்சி மாவட்ட கவுன்சில்களை இப்போதும் தொடர்வது என்பது குழப்பத்தை ஏற்படுத்துவதோடு நகலாகவும் உள்ளது.

ஆறாவது அட்டவணை பிராந்தியங்களில் கவுன்சில் நிலைக்கு அடுத்த கீழ்நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் ஏதும் இல்லை என்பது மற்றொரு பிரச்சனை ஆகும். கிராம அளவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் எதுவும் இல்லாமல் இருப்பது தொலைதூர கிராமங்களின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. தன்னாட்சி கவுன்சில்களுக்கு அடுத்து கீழ்நிலையில் பாரம்பரியமான அமைப்புகள் கிராம அளவில் உள்ளன. ஆனால் அவை ஜனநாயக பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. இந்த அமைப்புகளுக்குத் தலைவர் இனக்குழு அடிப்படையில் அமைந்தனர். உதாரணமாக மேகாலயாவில் காஸி இனக்குழுவின் பாரம்பரியமான தலைமைப் பொறுப்பில் உள்ள “சையம்” என்ற தலைமைப்பொறுப்பைக் குறிப்பிடலாம். பிற மாநிலங்களில் உள்ள ஊராட்சி மன்றங்கள் போன்று கிராம அளவில் அமைப்புகளை தேர்ந்தெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஆனால் இது குறித்த ஒத்த கருத்துக்கள் இனிமேல்தான் ஏற்பட வேண்டும்.

## பொருளாதார ஏற்றத்தாழ்வு

பழங்குடியின மக்கள் பெரும்பாலும் மலைப்பகுதிகள் மற்றும் வனப் பகுதிகளில் தான் வசிக்கின்றனர். இங்குதான் தங்களுக்குத் தேவையான தொழிலைச் செய்து அவர்கள் சம்பாதிக்கின்றனர். விவசாயத்தை மேற்கொள்வதோடு அவர்கள் நெசவுத் தொழில் மற்றும் கம்பளி ஆடைகளுக்காக விலக்குகளை மேய்ப்பதையும் செய்கின்றனர். வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள பெரும்பான்மையான மலைப்பகுதி சமுதாயத்தினர் குறிப்பிட்ட காலம் ஒரு இடத்தில் விவசாயம் செய்து விட்டு பிறகு வேறொரு இடத்திற்கு சென்று விவசாயம் *(shifting cultivation)* செய்கின்றனர். அவர்களது சமூகஅரசியல் வாழ்க்கை பாரம்பரிய சட்டங்கள் மற்றும் நடைமுறைகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கடந்த பல பத்தாண்டுகளில் சந்தை முறை ஊடுருவிய பிறகு இவர்கள் வாழ்க்கை முறை மாறி உள்ளது. இப்போது பல மலைப்பகுதி

சமுதாயத்தினர் ஓரிடத்தில் இருந்து நிலையான விவசாயம் செய்கின்றனர். முன்பு உற்பத்தி முறைகளின் மீது சமுதாய உரிமைதான் இருந்தது. இப்போது சிறிது சிறிதாக தனிநபர் உரிமையானது ஏற்பட்டு வருகின்றது. இதனால் அவர்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு உருவாகி உள்ளது. வெளி யாட்களிடம் இருந்து உள்ளூர் மக்களைக் காப்பாற்ற சட்டங்கள் உள்ளன. ஆனால் அவர்களுக்கிடையே வர்க்க வேறுபாடுகள் வளர்ந்து வருவதை இச்சட்டங்களால் தடுக்க முடிவதில்லை. இக்காலகட்டத்தில் மலைப் பகுதி சமுதாயங்களில் சிலர் லட்சாதிபதிகளாக உள்ளனர். அதேசமயம் விவசாயம் செய்ய ஒரு ஏக்கர் நிலம்கூட இல்லாமல் பலர் ஏழ்மை நிலையிலும் உள்ளனர். நவீனபணக்கார பழங்குடியின மேல்மட்டத்தினர் தங்களது பழங்குடியின உரிமைகளை உறுதி செய்ய குரல் எழுப்பியபடி உள்ளனர். தங்களது சமுதாயத்துக்குள் உள்ள பரம ஏழைகளுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதற்காக அவர்கள் குரல் எழுப்பவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் குரல் எழுப்புவது எதற் காக என்றால் தங்களது சொந்த நலனைக் காப்பாற்றிக் கொள்ளவும் ஏழைகளைத் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவுமே ஆகும். வர்த்தகரீதியான தோட்டப்பயிர்கள் மற்றும் இதரப் பணப்பயிர்களை தொடர்ந்து மேம்படுத்துவதன் விளைவாக சமுதாய நிலங்கள் தனியார்வசமாகி வருகின்றன. நகரங் கள் மற்றும் நெடுஞ்சாலைகளுக்கு அருகில் உள்ள நிலத்தின் மதிப்பு உயர்ந்து வருவதும் தனியார்மயமாவதற்குக் காரணமாகும். எது எப்படி இருந்தாலும் புதிதாக தோன்றி வரும் பழங்குடியின பணக்காரப் பிரிவினர் தொழிற் சாலை தொடங்கும் அளவிற்கு தொழில் முனைவு திறன் இல்லாதவர்களாக ரியல் எஸ்டேட்டிலேயே முதலீடு செய்கின்றனர்.

## பெண்கள் மீது அவர்களுக்கு எதிரான தாக்கம்

தனியார்மயமாதல் இப்போது பெண்கள் மீது அவர்களுக்கு எதிரான தாக்கத்தை அதிகப்படுத்தி வருகின்றது. நாகா இனக் குழுவின் பாரம்பரிய சட்டப்படி பெண்களுக்கு நில உரிமை, சொத்துரிமை அல்லது வாரிசு உரிமை போன்றவை இல்லை. பெண்கள் தங்களுக்கென்று நிலத்தை உரிமையாக்கிக் கொள்ள முயற்சிக்கும் போது அப்பெண்களை "பேய்கள்" என முத்திரை குத்திவிடுகின்றனர். சமுதாயத்திற்கு தீங்கு இழைப்பதாக அப் பெண்கள் குற்றம் சாட்டப்படுகின்றனர். அதுமட்டுமல்லாமல் இப்பெண்களை உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் துன்புறுத்துகின் றனர். நில உரிமைக்கு முயன்ற சில பெண்கள் புதைக்கப்பட்ட அல்லது உயிருடன் எரிக்கப் பட்ட சம்பவங்களுக்கான சான்றுகளும் உள் ளன. கோல்பரா, பொங்கைகுவான், கோக் ராஜ்கர், நல்பாரி மற்றும் தூப்ரி மாவட்டங்களில் "பேய்களை வேட்டை ஆடுதல்" நிகழ்வு பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்டுப்பாடுகளை மீறி நிலஉரிமை கேட்கும் பெண்களை "பேய் வேட்டையாடி" கொல்லும் இத்தகைய செயல் களுக்கு காரணமாக சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு, தனிநபர் விரோதம் மற்றும் மூட நம்பிக்கைகள் ஆகியவற்றைக் கூறலாம்.

## நில ஆவணங்கள் இல்லாத நிலைமை

நாகலாந்து, அருணாச்சலபிரதேசம், மிசோ ராம்,மேகாலயா,மணிப்பூரின் மலைப்பகுதிகள், அசாமின் சில பழங்குடியினப் பகுதிகள் ஆகியவற்றில் நிலஆவணப் பதிவு முறை இல்லை. நிலவருவாய் செலுத்தும் முறையும் இல்லை. நில ஆவணங்கள் இல்லாத நிலைமை ஏழைகளின் பாதுகாப்பின்மையை அதிகரிப்பதாக உள்ளது. ஒரு சில நபர்களின் கைகளில் மட்டுமே நிலஉரிமை இருப்பதான நிலைமையை இது ஏற்படுத்துகின்றது. இடம் மாறி இடம்மாறி விவசாயம் செய்யும் முறை யில் கிடைக்கும் வருவாய் குறைவதற்கும் இது காரணமாகின்றது. நிலத்தில் விவசாயம் செய்வது குறித்த அமைப்பாக்க நிபந்தனைகள் (வெளிப்படையான உரிமை கொண்டாடுதல் அல்லது "அனைவருக்கும் இலவசம்" என்ற முறை) பணக்கார பிரிவினர் மட்டுமே அரசு மானியங்களை அனுபவிக்க வேண்டும் என்ற அம்சத்தோடு சேரும்போது இந்த நிலைமை இத்தகைய மாநிலங்களில் வறுமையையும்



ஏற்றத்தாழ்வையும் தீவிரப்படுத்துகின்றது. வேற்று நபர் நுழைய முடியாதபடி வேலி எழுப்பி நிலத்திற்கு தனியார் உரிமை பெறுவது என்பது சாதகமான நடவடிக்கையாக எடுத்துக் கொள்ளப்பட முடியாதது ஆகும். ஏனெனில் இத்தகைய நடவடிக்கையின் தாக்கம் பிற் போக்குத்தனமானது ஆகும். பொருளாதார ஏற்றத்தாழ்வு அதிகரிக்க அதிகரிக்க சமூக உறவுகளின் சங்கமும் அதிகரிக்கின்றது.

### நிதியை முறையாக செலவழிக்க முடியாத நிலைமை

தன்னாட்சி மாவட்ட கவுன்சில்கள், அரசியல் அமைப்பு அந்தஸ்து பெற்றிருந்தாலும் கூட, அதாவது சில விஷயங்களில் அவற் றுக்கு சுயமாக செயல்படக்கூடிய சுதந்திரம் இருந்தாலும், செலவழிப்பதற்கு போதுமான நிதியுதவி கிடைக்கும் வழிமுறை ஏதும் இல்லை. தமக்கு ஒதுக்கப்பட்ட விஷயங் களைக் கையாள்வதற்கு முடியாத நிலை யிலேயே கவுன்சில்கள் உள்ளன. இந்தப் பிரச் சனைகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு மத்தியஅரசு கவுன்சில்களுக்கு தற்காலிக மானியங்கள் வழங்கி வருகின்றது. அல்லது மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் பட்ஜெட்டில் கவுன்சில்களுக்கான நிதி குறிப்பிடப்பட்டு ஒதுக்கப்படுகின்றது. இருந்தாலும், நிதியை கவுன்சில்கள் முறையாக முழுமையாக செல வழிக்க முடியாத நிலையில், அதேபோன்று மாநில அரசுகளும் செலவழிக்க முடியாத நிலையில், ஒட்டுமொத்த செலவினம் என்பது குறைவானதாகவே இருக்கிறது. உதாரண மாக, வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச் சிக்காக, மத்திய அமைச்சகங்களின் பட் ஜெட்டில் குறைந்தபட்சம் 10 சதவிகிதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. செலவிடாத தொகை காலாவதி ஆகாத தொகுப்புக்கு மாற்றப்படுகின்றது. எனினும் உண்மையில், இத்தொகுப்பில் இருப்பில் உள்ள தொகை களுக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு செய்வது திருப்தி கரமானதாக இல்லை. மாநிலங்கள் அமைச் சகங்களுக்கு சிறப்பான முன்மொழிவுகளை அனுப்ப முடிவதில்லை. அல்லது சரியான முறையில் நிதியைச் செலவழிக்க முடிவ தில்லை. இதன் பயனாக ஏற்படும் முடிவுகள் திருப்திகரமாக இல்லை.

இதேபோன்று, வெளியில் இருந்து நிதி உதவி செய்யும் திட்டங்கள் பல பல்வேறு நடைமுறைகளை நிறைவு செய்ய வேண்டியிருப் பதால் அனுமதிக்கப்படாமல் இருக்கின்றன (நில கையகப்படுத்துதல், சுற்றுச்சூழல் அனுமதி முதலானவை). இதன் காரணமாக இத்தகைய செயல்திட்டங்களில் முழுமையாக செலவு செய்யப்படாமல் உள்ளது. முழுமையாக

நிதியை பயன்படுத்திக் கொண்டதற்கான சான்றிதழை சமர்ப்பிக்காமல் இருத்தல், செய்ய வேண்டிய திட்ட விவரங்கள்/ செய்து முடித் தவை பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்காமல் இருத்தல், மாநில அளவிலான அனுமதி அளிக்கும் குழுகூட்டம் நடத்துவதில் தாமதம் முதலானவற்றை நிதியைத் தராமல் இருப்பதற் கான பொதுவான காரணங்களில் முக்கிய மானதாகச் சொல்லலாம். நிதியை முழுமை யாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் என்பது சரியான நேரத்தில் கள அதிகாரிகளுக்கு நிதி கிடைக்கச் செய்தல் என்பதோடு மேலும் பல நடவடிக்கைகளை அதே சமயத்தில் எடுக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. பணி யிடங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்; தேவை யான பொருட்கள் பெறப்பட்டு அனுப்பப்பட வேண்டும். இதற்கு டெண்டர் நடவடிக்கைகள் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். மணிப்பூர் மற்றும் நாகலாந்து போன்ற மாநிலங்களில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் நிதிகள் குறைவாகத் தரப்படுவதற்கு முக்கிய காரணம் எதுவெனில் மாவட்ட அளவிலான தரவுகளை ஆன்லைனில் சமர்ப்பிப்பதில் உள்ள சிரமமே ஆகும். ஏனெனில் இங்கு நெட்வொர்க் வசதி அவ்வளவு சிறப்பாக இல்லை.

## திட்டமிடல் துறைகளை ஊக்குவித்தல்

மாநில அரசுகள் தங்களது திட்டமிடல் துறைகளை முழுவீச்சில் ஊக்குவித்தால் இத் தகைய தாமதங்களைத் தவிர்க்க முடியும். நடைமுறைகளை விரைவுபடுத்த முடியும். கசப்பான உண்மை எதுவென்றால் வெளி அமைப்புகளிடம் இருந்து, நிதி உதவி பெறு வதற்கான திட்ட முன்மொழிவுகளை சிறப்பான முறையில் தயாரித்து சமர்ப்பிப்பதற்கான திறன் மாநில திட்டமிடல் துறைகளில் இல்லை. இந்திய அரசிடம் இருந்து நிதி ஒதுக்கீடு பெறக்கூட இத்துறைகளால் முடிவதில்லை. இதனால் வெளி அமைப்பிடம் இருந்து நிதி அல்லது மத்திய அரசிடம் இருந்து நிதி கிடைக்காமல் போகின்றது.

ஆக்கபூர்வமாகச் செயல்படும் திட்டமிடல் துறையானது பழங்குடியினர் நிதிக்கான



தேவைகளையும் அவர்களது ஆசைகளையும் கவனத்தில் கொள்ளும். மாநிலத்துக்கான முன்னுரிமைகள் மற்றும் நீண்டகால வளர்ச்சி உத்திகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சட்டத் துக்குள் இத்தேவைகளைப் பொருத்திப் பார்த்து திட்டங்களை உருவாக்கும். இவ்வாறாக திட்டமிடல் துறை மாநிலத்துக்கான ஆண்டுத் திட்டம், ஐந்தாண்டுத் திட்டம் போன்ற திட்டங்களை உருவாக்கும். இந்தத் திட்டங்கள் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதும் மீளாய்வு செய் வதும் இத்துறையின் தொடர் பணியாகும். திட்டத்தின் குறிக்கோள்களை முழுமையாக அடைவதற்காக நிதி ஒதுக்கீடு மற்றும் பொருள் ஒதுக்கீடு என இரண்டிலும் தேவைப்படும் சீரமைவுகளை அனுமதிக்க வேண்டும்.

## இதர அமைப்பு ரீதியான பிரச்சனைகள்

பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகள் என்று மட்டும் இல்லாமல் ஒட்டுமொத்த வட கிழக்கு பிராந்தியத்திலும் தனிநபர் வருமானம் என்பது குறைவாகவே உள்ளது. இதில் சிக்கிம் பகுதி மக்கள் மட்டுமே விதிவிலக்காக உள்ளனர். இந்தப் பகுதிகளில் தனியார் முதலீடு இல்லாதது, குறைவான மூலதன உருவாக்கம், உள்கட்டமைப்பு வசதிகளின் போதாமை, புவியியல் ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பது, தொடர்பியல் பிரச்சனைகள் ஆகியன நிலவுகின்றன. சாலை, ரெயில் மற்றும் விமானப் போக்குவரத்துகளின் இணைப்பு சரியாக இல்லாததே இந்தப் பிராந்தியங்களின் முதன்மை பாதகமான அம்சமாகும். மின்சார

வசதியும் மிகப்பெரிய தடையாக உள்ளது. இந்தப் பிராந்தியத்தில் சிறிய அளவிலான புனல் மின்சாரம் தயாரிப்பதற்கும் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்திக்கும் உள்ள வாய்ப்புகள் கண்டறியப்பட வேண்டும். இந்தப் பிராந்திய மாநிலங்களில் சொந்தமாக அவர்கள் வசூலிக்கும் வரிகள் மற்றும் மாநிலத்துக்குள்ளேயே கிடைக்கும் வருமானம் ஆகியவை மிகக் குறைவான அளவே ஆகும். இதனால் இந்த மாநிலங்கள் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டையே முழுமையாகச் சார்ந்து இருக்க வேண்டிய தேவை உள்ளது.

இந்திய அரசின் ஒட்டுமொத்த முதலீட்டை அதிகரிக்க முயலும் அதே வேளையில் இந்த மாநிலங்கள் அரசாட்சியையும் சேவைகள் வழங்குவதையும் மேம்படுத்த முயல வேண்டும். அதிக அளவில் குரூப்.சி மற்றும் குரூப்.டி ஊழியர்கள் அரசாங்கத்தில் இருப்பதால், வடகிழக்கு மாநிலங்களின் திட்டம் சாராத செலவினம் மிக அதிகமாக உள்ளது. மாநிலத்துக்குள்ளேயே கிடைக்கும் வருவாயும் குறைவாகவே உள்ளது. இவற்றின் காரணமாக இந்த மாநிலங்களில் திட்ட செலவினத்துக்கான நிதி போதுமானதாக இருப்பதில்லை. மத்திய அரசின் ஒதுக்கீடு இருந்தபோதிலும் திட்ட செலவினங்களை நிறைவு செய்ய முடிவதில்லை. உதாரணமாக, 2014–15ல் அசாம் மாநிலத்தின் தனிநபர் திட்ட ஒதுக்கீடு ரூ.5,775 ஆகும். அசாமின் ஏழைகள் எண்ணிக்கையை ஒத்த சட்டிஸ்கரின் தனிநபர் திட்ட ஒதுக்கீடு ரூ.12,807 ஆக இருக்கிறது.

எதுவாயினும்,இந்த மாநிலங்கள் திட்டத்தின் மூலம் ஏற்படும் விளைவுகளைக் கண்காணிக்க வேண்டும். குறைகளுக்கும் நிறைவு செய்ய முடியாமல் போவதற்குமான பொறுப்பினை அரசு ஊழியர்களை ஏற்கச் செய்ய வேண்டும். தங்களது குறைகளை மறைப்பதற்காக அரசு ஊழியர்கள் தவறான அறிக்கைகளைக் கொடுத்து தப்பி விடுகின்றனர். இதனை ஒரு உதாரணத்தின் மூலம் பார்ப்போம். இந்த மாநில அரசுகள் அதிதீவிரமான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை 1%க்கும் குறைவு என அறிக்கை அளிக்கின்றன. ஆனால் யுனிசெஃப் நிறுவனம் இந்த எண்ணிக்கை மிக அதிகம் எனச் சுட்டிக் காட்டுகின்றது. மணிப்பூரில் 3.5% முதல் மேகாலயா மற்றும் திரிபுராவில் 16% என ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை உள்ளது என யுனிசெஃப் தெரிவிக்கிறது. இந்த இரண்டு விதமான புள்ளிவிவர அறிக்கைகளையும் ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டியது அவசரத் தேவையாகும். களத்தில் இருந்து திரட்டப்படும் புள்ளிவிவரங்கள் நம்பகத்தன்மை உடையதாகவும் துல்லியமானதாகவும் இருக்க வேண்டும். மதிப்பீடு செய்யப்படும் புள்ளி விவரத்தோடு இது ஒத்துப்போக வேண்டும்.

நாட்டின் வளர்ச்சி விகிதத்திற்கும் வடகிழக்கு இந்திய பிராந்தியத்தின் வளர்ச்சி விகிதத்திற்கும் இடையில் உள்ள இடைவெளி விரிவடைந்து கொண்டே போகின்றது. இது குறைக்கப்பட வேண்டும். இதற்கு அரசாட்சியிலும் சேவைகளை வழங்குவதிலும் மிகப் பெரிய அளவிலான முன்னேற்றம் ஏற்பட வேண்டும். இந்தப் பிராந்தியங்களுக்கான நிதிஒதுக்கீடு அதிகரிக்கப்படுவதால் எந்த மாற்றமும் ஏற்பட்டுவிடாது. பிராந்தியத்தின் வளர்ச்சிக்கு எவ்வளவு நிதி ஆதாரம் கிடைக்கின்றது என்பதைவிட வடகிழக்கு மாநிலங்களில் உள்ள அரசு அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் எத்தகைய திறனுடன் இருக்கின்றார்கள் என்பதுதான் முக்கியம். கிடைக்கின்ற நிதி ஆதாரத்தை எந்த அளவிற்குத் திறம்பட பயன்படுத்துகிறார்கள் என்பதுவும் முக்கியம் ஆகும். அமைப்புகளை கட்டமைப்பது என்பது அரசுத் துறைகளையும் ஏஜென்சிகளையும் சீரமைப்பதுதான். சிவில் சமூகத்துக்கும் மாநில அரசுக்கும் இடையில் பயன்தரக்கூடிய உறவு ஏற்படுத்தப்பட வேண்டும். உள்ளூர் சுயாட்சி கொண்ட உள்ளூர் அமைப்புகள் வலுப்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும். •

# வடகிழக்கு பிராந்தியத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள்

**– டாக்டர் கிருஷ்ண தேவ்**

*1947*ல் ஏற்பட்ட பிரிவினையின் விளைவாகவும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து தனித்து இருப்பதாலும் அப்பிராந்தியத்துக்கே உரிய சிக்கல்களாலும் வடகிழக்கு பிராந்தியத்தில் உள்கட்டமைப்பு வசதி என்பது தொடர்ந்து வரும் பிரச்சனையாக உள்ளது. சுதந்திரம் பெறு வதற்கு முன்பு புவியியல் ரீதியில் வடகிழக்கு பிராந்தியம் (தற்போதைய) வங்கதேசத்துடன் இணைந்திருந்தது. கிழக்கு திசையில் பர்மா வுடன் (தற்போதைய மியான்மர்) இணைந் திருந்தது. எனினும் சாலை மற்றும் ரயில் போக்குவரத்து வசதிகள் குறித்த முயற்சிகள் இப்பிராந்தியத்தில் அதிக அளவில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. என்றாலும் இன்றிருப் பதைவிட அப்போது நிலைமை ஓரளவு நன்றாகவே இருந்தது. தற்போது வடகிழக்கு பிராந்தியம் ஏனைய இந்தியப் பகுதிகளோடு 27கி.மீ நீளமுள்ள "கோழிக்கழுத்து" போன்ற சிலிகுரி சாலை வழியாகவே இணைக்கப்பட்டு உள்ளது. எல்லைப் பகுதிகள் மூடப்பட்டு உள்ளன. சிட்டகாங்க் துறைமுகத்தை அணுகு வதும் சிரமமாகும். இதனால் இப்பிராந்தியம் கடல்வழிப் பாதைகளில் இருந்து முழுவதுமாகத் துண்டிக்கப்பட்டு உள்ளது. இதன் விளைவாக அரசியல் எல்லைக் கோட்டால் வடகிழக்கு இந்தியாவின் சந்தையும் உற்பத்தி மையங் களும் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளன. இந்த தனிமைப்படுத்தப்பட்டு உள்ள நிலைமையானது ஒட்டுமொத்த பிராந்திய மக்களின் வாழ் வாதாரத்தின் மீது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

தற்போது வடகிழக்கு பிராந்தியத்தின் (என்.இ.ஆர்) ஒட்டுமொத்த எல்லைகளும் (சுமார் 96 சதவிகிதம்) சர்வதேச எல்லைகளோடு இணைந்துள்ளன. வடக்குப் பகுதியில் சீனா மற்றும் பூடான், கிழக்குப் பகுதியில் மியான்மர், தெற்கு மற்றும் மேற்குப் பகுதியில் வங்கதேசம், சிக்கிமின் மேற்கில் நேபாளம் போன்ற நாடுகள் எல்லைகளாக உள்ளன. இந்தப் பிராந்தியம் புவி அரசியல் அம்சத்தின்படி முதன்மைச் சந்தைகள் மற்றும் வர்த்தகப் பெருவழிகள் ஆகியவற்றில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டு உள்ளது. இந்தநிலை வடகிழக்கு பிராந்தியம் பொருளாதார நடவடிக்கைளில் ஈடுபடுவதிலும் முடக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மேலும் இது தீவிரமான அமைப்பு சார்ந்த சேதத்தையும் இப்பிராந்தியத்திற்கு ஏற்படுத்தி உள்ளது.

பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஈர்ப்பு மையமாக உருவாகி வரும் "கிழக்கு" நாடு களோடு வர்த்தக உறவை ஏற்படுத்த இன்று உலக நாடுகள் முன்வந்து கொண்டு இருக் கின்றன. தென்கிழக்கு ஆசியா என்பது வட கிழக்கு இந்தியாவில் இருந்துதான் தொடங்கு கின்றது. போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு வசதி களை அபிவிருத்தி செய்தலுக்குத் தரப்படும் முதன்மை முன்னுரிமை எதற்காக என்றால் சமூக, பொருளாதார நடவடிக்கைகளை மேற் கொள்ளவும் சந்தைகள் ஒருங்கிணைவதற்கும் ஆகும். முதன்மைப் பகுதியான இந்தியா வோடு வடகிழக்கு பிராந்தியத்துக்கான போக்குவரத்து மேம்படுத்தப்பட வேண்டும். பிராந்தியங்களுக்கு இடையில், ஒரே பிராந் தியத்துக்குள் மற்றும் பிராந்திய இணைப்புகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். போக்கு வரத்து இணைப்பை மேம்படுத்துதல் என் பது அரசியல் கொள்கை சார்ந்ததாகும். மேலும் அண்டை நாடுகளுடன் எல்லைப்புற வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வியா பாரத்தை வளர்த்தல் ஆகிய அம்சங்களை சார்ந்ததாகவும் இணைப்பு மேம்பாடு என்பது உள்ளது.

---

**டாக்டர் கிருஷ்ண தேவ்,** போக்குவரத்துத் துறை நிபுணர் மற்றும் தனிப்பட்ட ஆலோசகராகப் பணிபுரிகின்றார்.

இந்தப் பிராந்தியத்தின் பொருளாதார வசதி என்பது இப்பொழுதும் விவசாயத்தையே முதன்மையாக சார்ந்து உள்ளது. தொழில்துறை என்பது பெரும்பாலும் தேயிலை, பெட்ரோலியம் (கச்சா நிலை), இயற்கை எரிவாயு, சுரங்கம், ஸ்டீல் ஆகியவற்றை மையமாகக் கொண்டே செயல்படுகின்றது. ஆனாலும் தொழில்துறை அதன் முழுவீச்சில் செயல்படவில்லை. போதுமான அளவிற்கு தொழில் வளர்ச்சி இல்லாததால், இங்கு கிடைக்கக் கூடிய மூலவள ஆதாரங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. வேலை வாய்ப்புக்கான தேவை சேவைப்பிரிவுகளில் தான் ஏற்படுகின்றது. மேலும் சமச்சீரான வளர்ச்சியை மேம்படுத்த விரும்பத்தகாத நெருக்கடிகளை ஏற்படுத்தும் நிலைகளை நீக்குவதற்கும் போக்குவரத்து இணைப்புகள் உதவும்.

“கிழக்கை கவனமாகப் பார்க்கும் பாலிசி” 1991 மற்றும் வடகிழக்கு தொழில் மற்றும் முதலீட்டு பாலிசி (என்.இ.ஐ.ஐ.பி.பி) 2007, மற்றும் என்.இ.ஆர் விஷன் 2020 ( 2008ல் வெளியிடப்பட்டது) ஆகிய பல்வேறு வகையான அரசாங்கங்களின் திட்டங்கள் அனைத்தும் சரியான திசையில் எடுக்கப்பட்ட முயற்சிகளே ஆகும். தீவிரமான முயற்சிகள் மூலமாக மட்டுமே இந்தத் திட்டங்கள் இலக்கை எட்ட முடியும். கடந்த காலங்களில் திட்ட முதலீடுகள் செய்யப்பட்டு இருந்தாலும், வடகிழக்குபகுதியில் உள்கட்டமைப்பு வசதி மோசமானதாகவே உள்ளது. இந்த நிலைமையானது என்.இ.ஆர் விஷன் ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. உள்கட்டமைப்பு வசதி இன்மையே விரைவான வளர்ச்சிக்கு மாபெரும் தடையாக உள்ளது என்பதும் உணரப்பட்டு உள்ளது.

‘கிழக்குப் பிராந்தியத்தைப் பாருங்கள்’ என்ற இந்தியாவின் கொள்கைக்கு தற்போதைய அரசு அதிக முன்னுரிமை அளித்துள்ளது. நவம்பர் 2014ஆம் ஆண்டு மியான்மரில் நடைபெற்ற இந்தியா–தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு (ஏசியன்) உச்சி மாநாட்டில் துவக்க உரையாற்றிய பிரதமர் பொருளாதார மேம்பாடு, வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில்மயமாதல் ஆகிய அம்சங்கள் நிறைந்த புதிய காலகட்டத்தில் 10நாடுகளைக் கொண்ட ஏசியன் கூட்டணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியானர். வணிகம், கலாச்சாரம் மற்றும் போக்குவரத்து இணைப்பு ஆகியன மேலே குறிப்பிட்ட கொள்கையின் மூன்று தூண்கள் ஆகும். இந்தியா இப்போது “கிழக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும்” நாடாக மட்டுமில்லை; அது ”கிழக்கில் செயல்படும் நாடாக” உள்ளது என்பதை பிரதமர் உலகிற்கு எடுத்துக்காட்டிப் பேசினார். மேலும் இந்தத் திட்டத்தின் பெயரை “கிழக்கில் செயல்படும்” இந்தியக் கொள்கை (ஏ.இ.பி) எனவும் பெயர் மாற்றினார். “கிழக்கில் செயல்படும் கொள்கை”யின் குறிக்கோள் என்னவென்றால், 1. பொருளாதார கூட்டுறவை மேம்படுத்துதல், 2. கலாச்சாரப் பிணைப்பு, 3. ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடனான ராஜாங்க உறவை மேம்படுத்துதல் ஆகிய மூன்றுமாகும். இருதரப்பு பிராந்திய மற்றும் பலநிலை உறவுகளின் மூலம் இந்த ராஜாங்க உறவு மேம்படுத்தப்படும். இதன்மூலம் அருணாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்கள் பொருளாதார ரீதியாகத் தனிமைப் படுத்தப்பட்டுள்ள நிலைமையானது மாறும்.

வடகிழக்கு பிராந்தியத்துக்குள்ளும் அண்டை நாடுகளுடனும் போக்குவரத்து இணைப்பை உருவாக்குதல், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியன கிழக்கில் செயல்படும் கொள்கையின் ஒருங்கிணைந்த அங்கங்கள் ஆகும். அண்டை நாடுகளுடனான போக்குவரத்து இணைப்பு உருவாக்கப்படாத வரையிலும் வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் (சாலை, ரெயில், உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து, தொலைதொடர்பு, விமானப் போக்குவரத்து, மின்சாரம் முதலான வசதிகள்) ஏற்படாத வரையிலும் இந்தக் கொள்கை உருவாக்கத்தினால் கிடைக்கும் நுண்ணளவிலான மற்றும் பேரளவிலான பயன்கள் கிடைக்காது.

“இந்தியாவில் தயாரியுங்கள்” என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட ஊக்



கத்தினால், "வடகிழக்கில் தயாரியுங்கள்" என்ற கருத்தாக்க ஆய்வறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. "வடகிழக்கில் தயாரியுங்கள்" என்ற முன்னோடி திட்ட தொடக்கமானது வடகிழக்கு பிராந்தியத்துக்கு வருவாய் ஈட்டு வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருக்க வில்லை. இந்தப் பிராந்தியத்தில் இருந்து நாட்டின் பிற பகுதிகளுக்கு குடிபெயர்ந்து செல்லும் இளைஞர்களை அவ்வாறு குடி பெயர்ந்து செல்லாமல் தடுத்து அந்தப் பிராந்தியத்திலேயே அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதும் முக்கிய குறிக்கோளாகும். இந்த முன்னோடி திட்டம் தொழில்துறையையும் வர்த்தகத்தையும் மேம் படுத்த உதவுவதோடு மக்களின் உளவியல் தடைகளைப் போக்குவதோடு வடகிழக்கு பிராந்தியம் இந்தியாவின் முதன்மைப் பகுதி யோடு நெருங்கி வரவும் உதவும். இந்தியாவின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திப் பாதையில் இப்பிராந்தியம் இணைய உதவும்.

புதியதான ஸ்டார்ட்அப் திட்டங்களுக்கான இடமாக வடகிழக்கு பிராந்தியம் உருவாகி வருகின்றது. இரண்டு ஆண்டுகாலத்திற்கு வரி இல்லை மற்றும் மூன்று மாதங்களில் வெளி யேறலாம் போன்றவை இந்தத் திட்டத்தின் விசேஷ அம்சங்கள் ஆகும். புதிதாகத் தொழில் முனைவோர்களுக்கு "தொழில் தொடங்கு வதற்கான நிதியமாக" இந்த அம்சம் கூடுதல் சலுகையாக அமையும். நிதிக் கடன்களில் இருந்து விடுபடவும் இது உதவும். இந்தப் பிராந்தியத்தில் வேலைவாய்ப்பு அதிகரிக்கவும் வருவாய் பெருகவும் இது உதவுவதோடு, ஊக்கமும் சலுகையும் வழங்குவதால், நாட்டின் இதர பகுதிகளில் இருந்து இளைஞர்களை இங்கு வருவதற்கும் உதவும். இதன் மூலம் இளை ஞர்கள் இங்கு வந்து வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சியில் பங்கேற்க வாய்ப்பு ஏற்படும்.

சாலைகள், ரெயில்வே, விமானப் போக்கு வரத்து மற்றும் நீர்வழிப் பாதைகள் ஆகிய வற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு வடகிழக்கு பிராந்தியம் முழுமைக்குமான போக்குவரத்து இணைப்புக்காக தொடங்கப் பட்டுள்ள முக்கியமான செயல்திட்டங்கள்/ வரைவு திட்டங்களின் தற்போதைய நிலைமை கீழே தரப்படுகின்றது.

### சாலை போக்குவரத்து

### அ. வடகிழக்கிற்கான விரைவுபடுத்தப்பட்ட சிறப்பு சாலை மேம்பாட்டுத் திட்டம்

வடகிழக்கு பிராந்தியத்துக்கான விரைவு படுத்தப்பட்ட சிறப்பு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம் என்பது வடகிழக்கு பிராந் தியத்தில் உள்ள மாநிலத் தலைநகரங்களையும்



மாவட்டத்தலைநகரங்களையும்தொலைதூரப் பகுதிகளோடு இணைக்கும் வகையில் சாலைப் போக்குவரத்து இணைப்புகளை மேம்படுத்துவது ஆகும். இது மூன்று நிலை களைக் கொண்ட பெருந்திட்டமாகும். வட கிழக்கு மாநிலங்களில் உள்ள 88 மாவட்ட தலைநகரங்களையும் அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளோடு இணைப்பதும் இதன் நோக்கமாகும். வடகிழக்கு பிராந்தியத்தில் பேராவலோடு எதிர்பார்க்கப்படும் ஒரு திட்ட மாக இத் திட்டம் உள்ளது. இத்திட்டத்தை இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (என்.ஹெச்.ஏ.ஐ), மாநில பொதுத்துறை அமைப்புகள் *PWDs* எல்லைப்புற சாலைகள் நிறுவனம் (பி.ஆர்.ஓ) ஆகிய மூன்றும் செயல் படுத்தும். இத்திட்டத்தின் முக்கிய குறிக் கோள்கள் வருமாறு:

- மாநிலத் தலைநகரங்களை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலைகளை இருவழி / நான்குவழிப் பாதைகளாகத் தரம் உயர்த்துதல்;
- வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள 88 மாவட்ட தலைநகரங்களையும் குறைந்த பட்சம் இருவழிப்பாதை சாலைகளால் இணைத்தல்;
- வடகிழக்கு பிராந்தியத்தின் பின்தங்கிய மற்றும் தொலைதூர பகுதிகளோடு சாலை இணைப்பு ஏற்படுத்தித் தருதல்;
- எல்லைப்பகுதிகளில் உள்ள முக்கியமான சாலைகளை மேம்படுத்துதல்;
- அண்டை நாடுகளுடனான போக்கு வரத்து இணைப்பை மேம்படுத்துதல்;

இந்தப் பெருந்திட்டமானது கீழ்வரும் மூன்று பகுதிகளாக நிறைவேற்றப்படும்:

1. எஸ்.ஏ.ஆர்.டி.பி–என்.இ. திட்டத்தின் பகுதி "அ"விற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதன்படி 4099 கி.மீ நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்படும் (2041 கி.மீ தேசிய நெடுஞ்சாலை மற்றும் 2,058 கி.மீ மாநிலச் சாலைகள்) ஆகஸ்ட் 2015வரை, 2,989 கி.மீ அளவிற்கு சாலைகள் போடுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 1,565 கி.மீ நீளமுள்ள சாலைகள் போடும் பணி நிறைவடைந்துள்ளன.எஸ்.ஏ.ஆர்.டி.பி–என்.இ திட்டத்தின் பகுதி "அ"வானது மார்ச் 2017ல் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. எஸ்.ஏ.ஆர்.டி.பி–என்.இ திட்டத்தின் பகுதி "ஆ"வின் கீழ் 3,723 கி.மீ சாலைகள்

வருகின்றன. (1,285 கி.மீ அளவிற்கு தேசிய நெடுஞ்சாலை மற்றும் 2,438 கி.மீ அளவிற்கு மாநிலச் சாலைகள்). மார்ச் 2017ல் பகுதி "அ" பணிகள் நிறைவடைந்தப் பிறகுதான் எஸ்.ஏ. ஆர்.டி.பி–என்.இ–பகுதி "ஆ" வேலைகள் செய்யப்படும்.

3. சாலை மற்றும் நெடுஞ்சாலைகளுக்கான அருணாச்சலப் பிரதேச தொகுப்பு திட்டம் 2,319 கி.மீ நீளமுள்ள சாலைகளை (1,472 கி.மீ தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் 847 கி.மீ மாநில/பொது ஊழியர்களுக்கான / ராஜாங்க உறவுகளுக்கான சாலைகள்) மேம் படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளும். இந்தத் திட்டத்துக்கும் அரசு அனுமதி அளித் துள்ளது. 776 கி.மீட்டருக்கான செயல் திட்டங்கள் பி.ஓ.டி முறையில் (ஆண்டுக்கு என்ற முறை) எடுத்துக் கொள்ளப்படும். மீதி யுள்ள சாலைகள் ஒப்பந்த அடிப்படையில் ஒவ்வொன்றுக்குமான செலவு மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்படும். ஆகஸ்ட் 2015வரை 1,552 கி.மீ நீளத்துக்கான சாலைகளுக்கு அனு மதி அளிக்கப்பட்டுள்ளது. 230 கி.மீ நீள சாலைகள் போடும் பணிகள் நிறைவடைந்து விட்டன. இந்த அருணாச்சாலப்பிரதேச சாலை தொகுப்புத் திட்டம் மார்ச் 2018க்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

## ஆ. கிழக்கு மேற்கு இடைவழி

எஸ்.ஏ.ஆர்.டி.பி–ன்.இ திட்டம் ஒருபுறம் செயல்படுத்தப்பட, இந்திய தேசிய நெடுஞ் சாலைகள் ஆணையம் ஸ்ரீராம்பூரில் (அசாம்/ மேற்குவங்க எல்லை) இருந்து அசாமில் உள்ள சில்சார் வரையிலான கிழக்கு மேற்கு இடைவழியில் 670 கி.மீ தூரத்திற்கு நான்கு வழிப்பாதை அமைக்கும் பணியைச் செயல் படுத்தி வருகின்றது. மேலும் என்.ஹெச்.டி.பி-III பெருந்திட்டத்தின் கீழ் மேகாலயாவில் ஜோவாய் முதல் ரட்டீசெர்ரா வரை (104 கி.மீ) இருவழிப் பாதை அமைக்கும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. இடைவழி சாலை அமைக்கும் பணி டிசம்பர் 2014க்குள் முடிக்கப்பட வேண்டும் எனத் திட்டமிடப்பட்டது. நிலம் கையகப் படுத்துதல், மரம் வெட்டுதல், அடிக்கடி நடைபெற்ற வேலைநிறுத்தம் / கடை அடைப்பு, மோசமான சட்டம்ஒழுங்கு நிலைமை, ஆர்.ஓ.பி அனுமதி, தேவைப்படும் அளவிற்கு ஊழியர் / ஆட்கள் மற்றும் உபகரணங்கள் வேலைக்கு இல்லாதது, வனத்துறையின் அனுமதி, கட்டுமானப் பொருட்கள் சேகரிப்பில் உள்ளூர் நிர்வாகம் அடிக்கடி சுமத்தும் கட்டுப்பாடுகள் போன்ற காரணங்களால் அசாமில் கிழக்கு மேற்கு இடைவழி சாலை அமைக்கும் பணியில் தொய்வு ஏற்பட்டது. அசாமில் கிழக்கு மேற்கு இடைவழியின் தூரம் 670 கி.மீ ஆகும். இதில் 580 கி.மீ சாலை அமைக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 90கி.மீ கிழக்கு மேற்கு இடைவழிச் சாலை டிசம்பர் 2016க்குள் அமைக்கப்பட்டு விடும்.

## ரெயில் போக்குவரத்து

வடகிழக்கு பிராந்தியத்தில் ஏப்ரல் 1, 2012 அன்றுள்ளபடி ரெயில் போக்குவரத்து 2,661 கி.மீ தூரத்திற்கு உள்ளது. இதில் 1,601 கி.மீ (60 சதவிகிதம்) ரெயில் போக்குவரத்து அகலபாதை போக்குவரத்தாக உள்ளது. (பாதை மாற்றத்தின் மூலமாக இது சாத்திய மாகி உள்ளது) ரெயில் போக்குவரத்து முழு வதையும் அகலப்பாதையாக மாற்றும் திட்டம் முழுமையாக நிறைவேறினால், வெறும் 20 கி.மீ தூரத்திற்கு மட்டுமே மீட்டர் பாதை எஞ்சி இருக்கும். கடந்த காலத்தை நினைவூட்டும் வகையில் இந்த 20 கிமீ பாதை இருக்கும்.

தற்போது ரெயில் சுற்றுலா உருவாகி வரு கின்றது. வடகிழக்கு மாநிலங்களில் சுற்றுச் சூழல் சார் சுற்றுலா மற்றும் கல்விச் சுற்றுலா போன்ற சுற்றுலாக்கள் தொடங்கப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தேவி சுற்றுப்பாதை, ஜோதிர்லிங்க சுற்றுப்பாதை, ஜெயின் சுற்றுப்பாதை, கிறித்துவ சுற்றுப் பாதை, சூஃப்பி சுற்றுப்பாதை, சீக்கிய சுற்றுப்பாதை, புத்தமதச் சுற்றுப்பாதை, கோயில்கள் சுற்றுப்பாதை போன்ற விசேஷ ஆன்மீக சுற்றுப்பாதைகள் சுற்றுலாவுக்காக அடையாளம் காணப்பட்டு வருகின்றன. இந்தச் சுற்றுப்பாதைகளில் சிறப்பு பயணத்

திட்டத்துடன் ரெயில்களை இயக்குவதற்கான திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளன. இதில் தனிநபர் பங்கேற்பும் ஊக்குவிக்கப்படு கின்றது.

வடகிழக்கு மாநிலங்களில் ரெயில்வே உள் கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய் வதற்கான மாஸ்டர் திட்டத்தில் அனைத்து மாநிலத் தலைநகரங்களுக்கும் இணைப்பு; இந்தப் பிராந்தியத்தில் ஒரே விதப் பாதையாக அகலப்பாதை அமைப்பை ஏற்படுத்துதல்; எதிர்காலத்தில் போக்குவரத்து வளர்ச்சியை சமாளிக்கும் வகையில் திறனை மேம்படுத்து தல்; இந்தப் பிராந்தியத்தில் ரெயில் இணைப்பு இல்லாத பகுதிகளில் பாதைகளை விரிவு படுத்துதல்; சர்வதேச எல்லைகளை வலுப் படுத்துதல்; அண்டை நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் இணைப்பை மேம்படுத்துதல் போன்ற அம்சங்கள் உள்ளடங்கி உள்ளன.

துப்னோய் - மென்டிபதர் ரெயில் பாதை முழுமையடைந்ததால் ஆகஸ்ட் 11, 2014 அன்று மேகாலயாவுக்கு ரெயில் போக்குவரத்து இணைப்பு கிடைத்துள்ளது. இந்த ஆண்டு மேலும் மூன்று ரெயில் பாதை இணைப்புகள் முழுமையடையும். அசாமின் தெற்குப் பகுதி விரைவில் அகலப்பாதை அமைப்பின்கீழ் வரும். 210கி.மீட்டர் நீளமுள்ள லும்டிங் மற்றும் சில்ச்சார் இடையிலான பாதை மாற்றத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதால் இது சாத்தியமாகின்றது.

வடகிழக்கு மாநிலங்களில் புதிய ரெயில் பாதை அமைதல், இரட்டைப் பாதை, அகலப் பாதை ஆக்குதல் போன்ற திட்டங்களுக்காக 12 மிகப்பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு வரு கின்றன. இதில் 10 தேசிய பெருந்திட்டங்களும் உள்ளடங்கும். இந்த மிகப்பெரிய திட்டங்கள் எல்லாம் சேர்ந்து 2,919 கிமீ நீளத்துக்கான ரெயில் பாதையை ரூ.38,310 கோடி செலவில் நிர்மாணிக்கும். மார்ச் 2020க்குள் அனைத்து வடகிழக்கு மாநிலங்களின் தலைநகரங்களை யும் ரெயில்வே தொட்டுவிடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

### விமானப் போக்குவரத்து

வடகிழக்கு பிராந்தியத்தில் தற்போது 12 விமான நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன. அதே போன்று செயல்படாத நிலையில் 12 விமான நிலையங்களும் உள்ளன. இந்தப் பிராந்தியத்தில் விமானப் போக்குவரத்தை பலநிலைகளிலும் மேம்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏர் இந்தியாவின் நிதி உதவியில் செயல்படும் அலியான்ஸ் ஏர் என்ற நிறுவனத்துக்கு ஏற்படும் வருவாய் ஈட்டு இடைவெளியை நிறைவு செய்யும் நிதியை ஷில்லாங்கில் உள்ள வடகிழக்கு கவுன்சில் வழங்கி வந்தது. வடகிழக்கு பிராந்தியத்தில் ஏடிஆர்42 விமானங்களை 2002ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை இயக்குவதற்காக இந்த நிதி வழங்கப்பட்டது. வடகிழக்கு பிராந் தியத்துக்குள்ளேயே இணைப்பையும் பயணத் தையும் அதிகப்படுத்த குறிப்பாக வர்த்தக ரீதியான விமானச்சேவை இல்லாத இடங்களை இணைப்பதற்கு இந்த சிறப்பு விமானச் சேவை பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. தற் சமயம் தேஜ்பூர், தீமாபூர் மற்றும் லீலாபரி ஆகிய இடங்களில் மட்டுமே ஏர் இந்தியா/ அலியான்ஸ் ஏர் சேவைகள் கிடைக்கின்றன. விமான நிறுவனத்துக்கு அளித்து வந்த நிதி உதவியை வடகிழக்கு கவுன்சில் நிறுத்திக் கொண்டு விட்டது. மேலே கூறிய இடங்கள் மற்றும் கூடுதலாக பரபாணிக்கு விமானச் சேவைகளைப் புதுப்பித்துக் கொள்ள வட கிழக்கு கவுன்சில் ஆகஸ்ட் 2013 முதல் வருவாய் ஈட்டு இடைவெளியை பூர்த்தி செய்யும் நிதி யுதவியை மீண்டும் வழங்கத் தொடங்கியது.

நாட்டில் சர்வதேச மற்றும் பிராந்திய விமானச்சேவை மையங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட கொள்கை வரைவுக்கு அரசு அண்மையில் அனுமதி அளித்துள்ளது. இந்தியாவில் பல்வேறு விமான நிலையங்களில் விமானச்சேவைகள் மையங்களை அமைப்பதில் உள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எந்த வகையிலான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று பரிந்துரைப்பதற்கு அமைச்சகங்களுக்கு இடையிலான கமிட்டி ஒன்றை அமைத்துக் கொள்ளவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

புதிய கொள்கையின் ஒரே நோக்கமாக இந்தியாவில் சர்வதேச மையங்களை உருவாக்கு

வது என்பது மட்டுமே இல்லை. உள்நாட்டு பிராந்திய மையங்களை உருவாக்குவதும் நோக்கமாகும். வடகிழக்கு பிராந்தியம் உள்ளிட்ட தொலைதூரங்களில் உள்ள சிறு நகரங்களில் இருந்து விமானப் பயணம் செய்ய விழையும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இவர்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் இந்த உள்நாட்டு மையங்கள் இருக்கும். நாட்டின் தொலை தூரத்தில் இருக்கின்ற சிரமமான, உட்புறத்தில் இருக்கின்ற இடங்களுக்கு விமானச் சேவை இணைப்பு தருவதற்கு அரசு அதிக முன்னுரிமை தருகின்றது. *II*ஆம் அடுக்கு மற்றும் *III*ஆம் அடுக்கு நகரங்களில் விமான நிலையங்கள் கட்டுவதற்கும் நவீனப்படுத்துவதற்கும் கவனம் செலுத்தப்படுகிறது.

### உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து

வங்கதேச எல்லையில் (தூப்ரி அருகில்) இருந்து சாடியா வரை (பிரம்மபுத்திரா ஆறு) தேசிய நீர்வழிப்பாதை–2 உள்ளிட்ட தேசிய நீர்வழிப்பாதைகளை உருவாக்குவது இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையத்தின் கட்டாய பொறுப்பாக உள்ளது. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து தேவையை நிறைவேற்றவும் லாக்கிபூர் முதல் பாங்கா வரையில் (121 கி.மீ) பாராக் நதியில் தேசிய நீர்வழிப் பாதையை உருவாக்குவதும் தேசிய நீர்வழிப் பாதை–2ன் நோக்கங்கள் ஆகும். தேசிய நீர்வழிப்பாதை–2 உடன் இணைக்கப்பட்டுள்ள உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து வலைப்பின்னலை விரிவாக்கவும் துறைமுக வசதிகளை மேம்படுத்தவும் பல உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டால், தேசிய நீர்வழிப்பாதை–2ல் சரக்கு பயணங்களும் படகு சேவைகளும் மேலும் அபிவிருத்தி அடையும்.

தேசிய நீர்வழிப்பாதை–2 மட்டுமல்லாமல் அபிவிருத்தி செய்ய வேண்டிய இதர முக்கியமான நீர்வழிப்பாதைகளும் உள்ளன. இவை வடகிழக்கு பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் இந்தோ–மியான்மர் எல்லை தாண்டிய வர்த்தகத்துக்கும் உதவியாக இருக்கும்.

### இந்திய–வங்கதேச ஒப்பந்தம்

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மற்றும் வர்த்தகத்துக்கான இந்திய–வங்கதேச ஒப்பந்தம் 1,700 கி.மீ நீள நீர்ப்பாதை தொடர்பானதாகும். இது தேசிய நீர்வழிப்பாதை–1ஐ (கங்கை) தேசிய நீர்வழிப்பாதை–2 (பிரம்மபுத்திரா) உடனும் புதிதாக உருவாக்கப்பட உள்ள தேசிய நீர்வழிப்பாதை–6 உடனும் இணைக்கின்றது. இந்தப் பாதையை உருவாக்குவது என்பது சுந்தர்பன் மற்றும் வங்கதேசம் வழியாக இந்திய தீபகற்பத்திற்கும் வடகிழக்கு பகுதிகளுக்கும் சரக்குப் பயணத்தை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக இருக்கிறது. மேலும் வடகிழக்கு பிராந்தியத்தை அணுகுவதற்கான வாய்ப்புகளையும் அதிகரிக்கும்.

### கலாதன் பல்முனைய போக்குவரத்து திட்டம்

இந்தத் திட்டத்தை வெளியுறவு அமைச்சம் திட்டமிட்டுள்ளது. மியான்மரில் உள்ள கலாதன் நதி மூலமாக கொல்கத்தா/ஹல்டியா விமான நிலையங்களை மிசோராமில் இருந்து அடைவதற்கான மாற்று இணைப்பு வழியாக இந்தத் திட்டம் இருக்கும். கடலோரக் கப்பல் / கடல்வழிக் கப்பல் ஹல்டியாவில் இருந்து சிட்வீக்குச் செல்லும். மியான்மரில் சிட்வீயில் இருந்து பலேட்வாக்குச் செல்லும். பிறகு சாலை வழியாக பலேட்வாவில் இருந்து மிசோராமுக்குச் செல்லும். இதுவே இந்தத் திட்டத்தின் உட்கூறுகள் ஆகும். வெளியுறவு அமைச்சகம் இந்த முன்னோடி திட்டத்தை ஏற்படுத்தி அதற்கான நிதியையும் அளித்துள்ளது. இந்திய நீர்வழிப் போக்குவரத்து ஆணையம் இந்தத் திட்டத்துக்கான அபிவிருத்தி ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளது. சிட்வீ துறைமுகம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

அபிவிருத்தியை மையமாகக் கொண்ட இந்த அணுகுமுறை, உள்ளூர் திறமையாளர்கள் ஆதரவு மற்றும் பங்கேற்புடன் திட்டங்களை உரிய காலக்கெடுவுக்குள் நிறைவேற்றுதல் ஆகியன வளர்ச்சிப் பற்றாக்குறை இடைவெளியை நிரப்புவதோடு தனிமைப்படுத்தப் பட்டுள்ளோம் என்று இங்கு உள்ள மக்களிடையே ஆழமாக ஊடுறுவி உள்ள உணர்வையும் இது நீக்கும். •

# வடகிழக்கில் பல்லுயிர் வாழிடங்கள்: சூழல் அமைப்பு, உயிரின வகை, மரபு வகைமை

– டாக்டர் அருப்குமார் மிஸ்ரா

உயிர்ப்பொருள்களின் உலகத்தை, வெவ்வேறு தேசங்களின் உயிர்பன்மயவளத்தின் அடிப் படையிலோ அல்லது உயிரின – பூகோள அடிப்படையைக் கொண்டோ வல்லுநர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இந்தப் பட்டியலில் பல்லுயிர் வளத்தை அதிகமாகப் பெற்றிருக்கும் 12 நாடுகள் இடம் பெறுகின்றன. அனைத்து விதமான வண்ணங்களையும் கொண்டுள்ள எண்ணற்ற தாவர, விலங்கின வகைகளை அனைத்து மட்டங்களிலும் இந்த 12 நாடுகளும் சேர்ந்து பெற்றுள்ளன. பிரேசில், கொலம்பியா, சீனா, மெக்சிகோ, தென் ஆப்ரிக்கா, ரஷ்ய கூட்டமைப்பு, இந்தோனேஷியா, வெனிசுலா, அமெரிக்க ஐக்கிய் நாடுகள், ஈக்வடார், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் சேர்த்து இந்தியாவும் இந்தக்குழுவின் பிரதான உறுப் பினர். நிலவியல் அமைப்புகள், பருவநிலை மாறுபாடுகள் போன்றவை இந்தியாவிற் குள்ளேயே மிகவும் அதிகமாக இருக்கின்றன என்பதையும்,உலகளாவிய உயிர்ப்பன்மயத்தின் பரிசீலனைக்குரிய ஒரு பெரிய இடமாக இந்தியா இருக்கிறது என்பதையும் சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம்இல்லை. பனி போர்த்திய இமயமலை முதற்கொண்டு, கடல் மட்டத்தில் காணப்படும் சமவெளிகள் வரையிலும்; தீவுகள், வெப்பமண்டல மழைக் காடுகள் முதற்கொண்டு வெப்பம் தகிக்கும் பாலைவனம் வரையிலும்; வண்டல மண் சமவெளிகள் முதற்கொண்டு அனைத்து விதமான இயல்புகளும் இந்தியத் துணைக் கண்டத்தில் இயைந்து காணப்படுகின்றன.

வண்ணமயமான இந்த இந்தியக் காட்சி வடகிழக்கு மாநிலத்தின் சூழலமைப்பு, உயிர்ப் பன்மயம் ஆகியவற்றைப் பொறுத்தவரை சிறப்பான ஒரு தகுதி நிலையைப் பெறுகிறது. அஸ்ஸாம்,அருணாசலப்பிரதேசம்,மேகாலயா, மணிப்பூர், மிசோரம், நாகாலாந்து, திரிபுரா, சிக்கிம் ஆகியவை சேர்ந்த பகுதி உண்மையில் உலகின் மூன்று மிகப்பெரிய உயிர்ப்புவியியல் ஆட்சி எல்லைகளின் சங்கமமாகத் திகழ்கிறது. இந்தோ–மலாயன், இந்தோ–சீனம், இந்தியா

**அட்டவணை**

| மாநிலம் | பாலூட்டிகள் | பறவைகள் | ஊர்வன | இருவாழ்வுகள் | மீன்கள் |
|---|---|---|---|---|---|
| அருணாசலபிரதேசம் | 241 | 738 | 78 | 39 | 143 |
| அஸ்ஸாம் | 841 | 192 | 128 | 67 | 232 |
| மணிப்பூர் | 69 | 586 | 19 | 14 | 141 |
| மேகாலயா | 139 | 540 | 94 | 33 | 152 |
| மிசோரம் | 84 | 500 | 71 | 13 | 89 |
| நாகாலாந்து | 92 | 492 | 62 | 10 | 108 |
| சிக்கிம் | 92 | 612 | 31 | 21 | 64 |
| திரிபுரா | 54 | 341 | 32 | 20 | 129 |

ஆதாரம்: அஸ்ஸாமில் முதுகெலும்புள்ள உயிரினங்கள், 2015 அஸ்ஸாம் அறிவியல் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் மன்றம் – **ENVIS** மையம், அஸ்ஸாம் வெளியீடு.

**டாக்டர் அருப்குமார் மிஸ்ரா,** இயக்குனர், அஸ்ஸாம் அறிவியல் தொழில்நுட்ப சுற்றுச்சூழல் குழுமம், விஞ்ஞான பவன், குவஹாத்தி.

ஆகியவை இந்த மூன்று ஆட்சி எல்லைகளாகும். இந்தப் பிராந்தியத்தின் தாவர, விலங்கின உயிர்ப்பன்மயம் சர்வதேச அளவில் அறிந்தேற்பு பெற்றதாக உள்ளது. தேவையான அனைத்து வகை பருவ நிலைகளும், உயர வேறுபாடுகளும் இந்தியாவில் உள்ளன. வடகிழக்கு மாநிலங்களின் 70 விழுக்காடு பகுதி குன்றுகள், மலைகளின் கீழுள்ள பகுதிகளாகும். மீதம் உள்ள 30 விழுக்காடு பகுதி பிரம்மபுத்ரா, பரக் பள்ளத்தாக்குகளைச் சேர்ந்தவை. இவை அனைத்தும் இணைந்து வியக்கத்தக்க உயிர்ப்பன்மயத்தைப் போற்றி வளர்த்து வருகின்றன. இந்தப் பகுதியில் வாழும் முதுகெலும்புள்ள உயிரினங்களின் வகைமை மட்டும் முன்பக்க அட்டவணையில் ஒரு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

### பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கில் உயிர்ப்பன்மயம்:

கீழ்த்திசை, ஆசிய விலங்கின நிலவமைப்பு கடந்து செல்லக்கூடிய பகுதியில் அமைந்துள்ள பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கு வெப்பமண்டல மழைக்காடுகள் ஊசியிலைக் காடுகள், இலையுதிர்காடுகள், ஆற்றங்கரைப் புல்வெளிகள், நீர் வழிந்தோடும் மலை இடுக்குகள், முங்கில் காடுகள், ஏராளமான சதுப்பு நிலப்பரப்பு போன்றவற்றைக் கொண்டதாக உள்ளது. புவியியல் ரீதியாக உலகின் மிக இளமையான ஆறான பிரம்மபுத்ரா மிகவும் இளமையான இமயமலைப் பகுதியில் இருந்து உருவாகி 2800 கி.மீ. தூரம் பயணித்து திபெத், இந்தியா வழியாக ஓடி இறுதியில் வங்கதேசத்தில் கடலில் கலக்கிறது. இந்த ஆறு நில பகுதிகளில் திகைப்பூட்டும் வகையில் அகன்றதாக உள்ளது. அஸ்ஸாமின் மேல்பகுதியில் திப்ருகர் அருகில் இது 16 கி.மீ. அகலத்திற்கு ஓடுகிறது. அஸ்ஸாமின் கீழ்ப்பகுதியில் குவஹாத்தியில் இதே ஆறு வெறும் 1.2 கி.மீ. அகலம் கொண்டதாக இருக்கிறது. பனி பாறைகள் உருகுவதால் உண்டாகும் இந்த நதி உலகிலேயே மிக அதிகமான வண்டல் மண் படிவினை உருவாக்கும் நதியாகவும் உள்ளது. ஒரு ஆண்டுக்கு ஒரு சதுர கி.மீ. பரப்பில் 852.4 டன் படிவை இது உருவாக்குகிறது. அமேசான் நதிக்கு அடுத்தபடியாக மிக அதிகமான நிலப்படுகைகளுக்கு நீர்தரும் நதியாக பிரம்மபுத்ரா உள்ளது.

பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கு அதிகமான அளவில் வண்டல் மண் கொண்ட சமவெளி. இங்கு மொத்தம் 56,33,900 சதுர கி.மீ. பரப்பிற்கு வண்டல் மண் படிகிறது. இதில் பெரும் பகுதி கடந்த சில ஆண்டுகளாக இழக்கப்பட்டு வருகிறது. மேற்பகுதியில் இருக்கும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஏற்படும் காடழிப்பு நடவடிக்கைகளின் காரணமாக நதியின் கரைகள் மிக மோசமாக அரிக்கப்படுவதால் இத்தகைய நிலை ஏற்படுகிறது. இருந்த போதிலும், வடக்கு மலையடிவாரம், வடக்கு தெற்கு சமவெளிகள், வெள்ளப்பெருக்குச் சமவெளி, ஆற்றங்கரை, தெற்கு மலையடிவாரம் ஆகிய பகுதிகளில் மிகவும் அரிதான உயிர்ப்பன்மயம் நிலவுகிறது. அஸ்ஸாமின் தாவர, விலங்கின உயிர்பன்மயத்தைப் பறைசாற்றும் கண்காட்சிகளாக கஸிரங்கா, மனஸ், திப்ரு–சைக்கோவா, ஒரங், நமேரி ஆகிய ஐந்து தேசிய பூங்காக்கள் இருக்கின்றன. இவற்றுள் முதல் இரண்டு இடங்களை பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கின் தேசிய பாரம்பரிய மையங்களாக UNESCO அறிவித்துள்ளது. இவைதவிர, பொபித்தோரா, கரம்பாணி, கிப்பான், புரசாவோப்ரி, சக்ரஷிலா, சொனாய் – ருபாய், போர்னோடி, லவோகோவா, ஜாய்திஹிங், பணிடிஹிங் போன்ற வனவிலங்கு சரணாலயங்கள் மிகவும் புகழ்பெற்றவை. இங்கு வசீகரம் உடைய ஏராளமான விலங்கின வகைகளும், வலசை வரும் பறவைகளும் இருக்கின்றன. அரியவகை ஒற்றைக் கொம்பு காண்டாமிருகத்தின் வசிப்பிடம் கழிரங்கா. இதைத்தவிர பெங்கால் டைகர், பல வகை மான்கள், காட்டெருமைகள், மீன்கொத்திப் பறவைகள், இன்னும் பற்பல நீர்வாழ்

உயிரினங்களும் இங்கு இருக்கின்றன. மனஸ், இந்தியாவில் தனித்துவமான ஓர் இடமாகும். இங்கு அழிந்துவரும் விலங்குகளான கோல்டன் லாங்குர், பிக்மிஹாக், ஹூலாக் கிப்பான் போன்ற குரங்கினங்களும் வகைவகையான புளோரிகான் பறவைகள், கொக்குகள், நாரைகள், பச்சைக்கிளி இனங்கள், இரையை வைத்துக்கொள்ள கழுத்தில் பையைப் போன்ற அமைப்பைக் கொண்டுள்ள கடற் பறவை, மீன்பிடிக்கும் கழுகினங்கள் போன் றவை பார்வையாளர்களின் கண்களில் அடிக்கடி தென்பட்டுச் செல்லும். மனஸ் நதி இந்தியாவையும், பூடானையும் பிரிக்கிறது. இங்கு கங்கை டால்பின்கள் இன்னமும் காணப்படுகின்றன. நமேரிக்கு சர்வதேச மதிப்பு கிடைக்கிறது. இங்கு வெண்ணிற சிறகு கொண்ட உலகின் கடைசி மரவாத்துக்கள் இருக்கின்றன. இதைப்போலவே ஒவ்வொரு காப்புப் பகுதியும், மனிதர்கள் குடிபுகாத சமவெளிகளும் இயற்கையின் அதிசயங்களைக் கொண்டிருக்கின்றன. குவஹாத்தி நகர எல்லைக்குள் இருக்கும் தீபோர்பீல் எனப்படும் ராம்சர் உடன்படிக்கையின் கீழ்வரும் ஏரி வலசை வரும் பறவைகளுக்கான சொர்க்கபுரி. இங்கு பலவிதமான பறவைகள் உலகின் பல பகுதிகளில் இருந்தும் வருகின்றன.

அஸ்ஸாமில் ஏராளமான காடுகளும், பெருத்த தேக்கு மரங்களும், மூங்கில்களும் இருக்கின்றன. திட்டமிடல் இல்லாமல் போன தாலும், சுரண்டல் அதிகரித்துப் போனதாலும், உள்நாட்டு தீவிரவாத செயல்களாலும் இங்கு சில பகுதிகளில் காடுகள் மறைந்து வருகின்றன. இதன்காரணமாக காடுகளில் மரம் வெட்ட முழுமையான தடையை உச்சநீதிமன்றம் 90களின் பிற்பகுதியில் விதித்தது. நூற்றுக் கணக்கான பிளைவுட் தொழிற்சாலைகள் கடந்த 20 ஆண்டுகளில் இங்கு திடீரென நின்றுபோய்விட்டன. பொருளாதார பாதிப்பு உருவாயிற்று. இந்தப் பள்ளத்தாக்கில் இன்ன மும்கூட சால் மரக்காடுகள், அரியவகைப் பழத்தோட்டங்கள், ஏராளமான மூங்கில் வகைகள், பழ மரங்கள், கனிகொடா மரங்கள் போன்றவை இருக்கின்றன. பசுமை மாறா தாவரங்களான மூங்கில், நஹர், பாகுல், சம், மாங்காய் போன்றவையும் அரைகுறையாகப் பசுமை மாறக்கூடிய தாவர வகைகளும் கலந்திருப்பதால் எப்போதும் பசுமையான குடைவிரிப்பை காடுகள் உருவாக்குகின்றன.

### பரக் பள்ளத்தாக்கில் பல்லுயிர்

பரக் பள்ளத்தாக்கு மூன்று நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். அஸ்ஸாமின் தெற்குப் பகுதியில் இருக்கும் இந்தப் பள்ளத்தாக்கு இந்தோ–பர்மா உயிர்த் துடிப்பு மிக்க பகுதியைச் சேர்ந்தது. இங்கு வளம் மிகுந்த உயிர்ப்பன்மயம் நிலவுகிறது. பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கைப் போலவே பரக் பகுதியும் வண்டல் மண் நிறைந்திருக்கும் பகுதி. இங்கு ஏராளமான வகைகளைச் சேர்ந்த தாவரங்களும் விலங்குகளும் வாழ் கின்றன. தேயிலைத் தோட்டங்களும், பசுந் தாவரங்களும் இங்கு இருக்கின்றன. இந்தப் பள்ளத்தாக்கின் மொத்தப் பரப்பளவு 6962 சதுர கி.மீ. இங்கே அங்குமிங்குமாக துண்டு துண்டாக உயரம் குறைந்த குன்றுகள் (அதிகபட்ச உயரம் 100 மீட்டம்) உள்ளன. இவற்றிற்கு ‘டிலா’ என்று பெயர். மறுபுறம் பள்ளத்தாக்கின் மத்திய பகுதியில் இந்தப் பகுதிக்கே சிறப்பாக உரித்தான சில வகை சதுப்பு நிலங்கள் காணப்படுகின்றன. முக்கிய மான நதியான பரக்கைப் போலவே அதன் கிளை நதிகளான ஜிரி, மதுரா, ஜடிங்கா, லரங், சோனய், ருக்னி, காக்ரா, தலேஸ்வரி, கட்டகல் ஆகியவையும் தெற்கு அஸ்ஸாமைச் செழிக்கச் செய்கின்றன. இங்கு துடிப்புமிக்க உயிர்ப் பன்மயம் நிலவுகிறது. பரக் நதியின் இரு கரைகளிலும் ஏரிகள் இருக்கின்றன.

பரக் பள்ளத்தாக்கின் நில அமைப்பும், நிலப் பயன்பாடும் இந்தப் பகுதியை பசுமை மாறாக் காடுகளும், அரை குறையான பசுமை மாறா காடுகளும், இலையுதிர்க் காடுகளும், புதர்க் காடுகள், தரம் குன்றிய காடுகள், வேளாண் நிலங்கள், தேயிலைத்

தோட்டங்கள் ஆகியவற்றின் கலவையாக உருவாக்கியுள்ளது.

இந்தப்பள்ளத்தாக்கில் 14 காப்புக்காடுகளும், ஒரு வனவிலங்கு சரணாலயமும் (பரய்ல் WS) உள்ளன. தலேஸ்வரி எனும் பெயருடைய இன்னொரு சரணாலயம் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. இந்தக் காடுகளும், குன்றுகளும் புலிகள், யானை, மலாயன் குல்லாய் லாங்கூர், ஹூலாக் கிப்பான் போன்றவற்றின் வசிப்பிடங்களாக இருக்கின்றன. அதிகரித்து வரும் மக்கள் தொகையும், மனிதர்கள் அடிக்கும் கொள்ளையும் பரக் பள்ளத்தாக்கின் தாவர விலங்கினப் பன்மயத்தைப் பெரிதும் அழித்துவருகின்றன. புகழ்மிக்க ஆசிய யானைகள் கிட்டத்தட்ட அழிந்துவிட்டன. ஒரு காலத்தில் ஏராளமாக இருந்த ஹூலாக் கிப்பான், பய்ரேஸ் லீப் குரங்குகள், பன்றிவால் மெக்காகே, குட்டையான வாலுடைய மக்காகே போன்ற உயிரினங்கள் மிகக் குறை வான எண்ணிக்கையில் இந்தக் காடுகளில் காணப்படுகின்றன. பரக் பள்ளத்தாக்கில் நிலவும் சுற்றுச்சூழல் பிரச்னைகளும், சூழல் பேரழிவுகளும் இங்கிருப்பதைப் போலவே பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கிலும் நிலவுகின்றன.

### மஜூலி தீவுகளில் உயிர்பன்மயம்

ஒரு காலத்தில் 1250 சதுர கி.மீ. பரப்பில் இருந்த உலகில் மிகப்பெரிய ஆற்றுத்தீவு மஜூலி தீவு. இங்கு 1.5 லட்சம் பேர் வாழ்கின்றனர். தெற்குக் கரையில் ஏற்பட்டுவரும் அரிமானம், வடக்குக் கரையில் கட்டப்படும் கால்வாய்த் தடுப்புகள் ஆகியவற்றினால் முழு நாசம் ஏற்பட்டு வருகின்றது. கி.மு.16ஆம் நூற்றாண் டில் இங்கு செழித்திருந்தது வைணவப் பாரம்பரியம். இப்போது 425 சதுர கி.மீ. பரப்பு மட்டுமே இந்தத் தீவில் எஞ்சியுள்ளது. கடல்நீர் மட்டத்தில் இருந்து இந்தத்தீவு 60 முதல் 85 மீட்டர் உயரத்தில் இருக்கிறது.

முக்கிய நதிகளான கெர்குடியா சுதி (நீரோடை), சுபன் சிரி ஆகியவை வடக்கிலும், தெற்கில் பிரம்மபுத்ராவும் மஜூலிக்கு ஒரு மாலையைப் போல அமைந்து 155 சிறிய, பெரிய சதுப்பு நிலங்களை ஆதரித்து வருகின்றன. பறவைகளைக் காண வருவோருக்கு மஜூலி ஒரு சொர்க்கபுரி. இங்கே பலவிதமான நாரைகள், பெலிகன் பறவைகள், கொக்குகள், விசிலடிக்கும் காட்டுவாத்துக்கள் ஆகியவை உள்ளன. இந்தத் தீவுக்கே உரித்தான சிறப்பு வகை மீன் இனங்கள் உள்ளன. இதைத்தவிர, 15 விதமான மருத்துவ மீன் இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை பலவிதமான நோய்களுக்கு மருந்தாகப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. மைசிங், நேபாளி, தியோரி, கச்சாரி, கோச் இனங்களைச் சேர்ந்த வர்கள் இத்தகைய மீன்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கில் மஜூலியின் சதுப்பு நில மண்ணில் நிலவும் நெற்பயிர்ச் சூழலும், புவியியல் சூழலும் ஒரு தனிச் சிறப்பான தோற்றத்தைத் தருகின்றன. 100க்கும் மேற்பட்ட வகை நெற்பயிர்கள் இங்கு பயிரிடப்படுகின்றன. ஏறத்தாழ இவை யாவுமே வேதி உரங்களோ, பூச்சி மருந்துகளோ இல்லாமல் தான் பயிரிடப்படுகின்றன. மஜூலி அஸ்ஸாமில் தனிச்சிறப்புடைய ஓர் இடம். ஏராளமான எண்ணிக்கையில் இந்திய, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றனர். இங்கு எஞ்சி இருக்கும் பல்லுயிர்ச் சூழல் இவர்களை ஈர்க்கின்றது. அலெங்கி, சாப்பொரி, கமலாபரி மிசிங், கமலாபரி சத்ரா, சுனியாசப்போரி துனிமுக் ஆகிய கிராமங்கள் உயிர்ப்பன்மயம் கொழிக்கும் இடங்கள். மஜூலியில் 250க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் பறவை இயலாளர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளனர். புள்ளிமூக்கு பெலிகன், சிறு நாரை, பெரு நாரை, பெங்கால் புளோரிகான், வெண்ணிற முதுகும் தட்டையான அலகும் கொண்ட கழுகுகள், மீன் – கழுகுகள் போன்றவை இங்கு அதிகமாக தென்படுகின்றன. •

## வடகிழக்கு மாநிலங்களுக்கு நிதி

காலாவதியாகாத மத்திய பொதுப் பணத்தில் உள்ள (Non-&Lapsable Central Pool of Resources) (NLCPR) நிதியில் இருந்து வடகிழக்கு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. வட கிழக்கு மாநிலங்களின் உள்கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகள், மாநில அரசுகள் தரும் முன்னுரிமைப் பட்டியலின் அடிப் படையில் இந்த நிதியைக் கொண்டு நிவர்த்தி செய்யப்படும். இந்த நிதியின் கீழ் பிப்ரவரி 2016 வரை ரூ.14309.23 கோடி செலவில் 1569 திட்டங்களுக்கு ஒப்புதல் தரப்பட்டுள்ளது. இதில், ரூ.5846.20 மதிப்பிலான 890 திட்டங் கள் நிறைவேற்றி முடிக்கப்பாடுள்ளன. ரூ.8463.01 கோடி மதிப்பிலான 679 திட் டங்கள் நிறைவடையக்கூடிய வெவ்வேறு நிலைகளில் உள்ளன. இதுதவிர ரூ.3867.90 கோடி செலவிலான 247 திட்டங்கள் கடந்த முன்று ஆண்டுகளாக தொடர்ந்து வைத்திருக்கப்பட்டிருக்கின்றன. நடைமுறை யில் உள்ள திட்டங்களுக்காகவும், 17 புதிய திட்டங்களை நிறைவேற்றவும் நடப்பு நிதி யாண்டில் (பிப்ரவரி 26, 2016 வரை) ரூ.376.61 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## வடகிழக்கு மாநில எல்லைப்புறங்களில் நவீன வசதிகள்

வடகிழக்கு மாநிலங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்து வதற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. மத்திய அமைச்சகங்களும் அவற்றின் கட்டுப்பாட்டில் இயங்கும் துறை களும் தத்தமது பட்ஜெட்டில் 10 விழுக்காடு தொகையை வடகிழக்கு மாநிலங்களுக்கென்று ஒதுக்கியாக வேண்டும். வடகிழக்கு மாநிலங் களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்து வதற்கு வடகிழக்குப் பகுதி மேம்பாட்டிற்கான மத்திய அமைச்சகமும் (DoNER), வடகிழக்கு மாநில மன்றமும் (North Eastern Council) நிதி உதவியளிக்கும்.

வடகிழக்கு மாநிலங்களுக்கான மத்திய அமைச்சகம் காலாவதியாகா மத்திய நிதித் தொகுப்பில் இருந்து நிதி தரப்பட்டு செயல் படுத்தப்படும் திட்டங்களை நிர்வகிக்கும். ரூ. 63,313.36 லட்சம் செலவில் 53 சுகாதாரத் திட்டங்களுக்கும் ரூ. 145,416.55 லட்சம் செலவில் 168 கல்வித் திட்டங்களுக்கும் இதுவரை நிதி தரப்பட்டுள்ளது. வடகிழக்கு மாநிலமன்றம் வடகிழக்கில் பல்வேறு துறைகளின் திட்டங்களை நிர்வகித்து வருகிறது. இதனிடம் ரூ. 17,322.12 லட்சம் மதிப்பிலான 41 நடப்புத்தொழில் துறைத்திட்டங்கள் உள்ளன. ரூ. 40,870.85 லட்சம் செலவிலான 58 நடப்பு சுகாதாரத் திட்டங்களும், ரூ. 24,294.98 லட்சம் மதிப்பிலான ஒப்புதல் அளிக்கப்பட்ட 78 நடப்பு கல்வித் திட்டங்களும் வடகிழக்கு மாநில மன்றத்தின் வசம் இருக்கின்றன.

மத்திய உள்துறை அமைச்சகம் எல்லைப் புறப் பகுதிகளின் வளர்ச்சிக்கென Border Area Development Programme (BADP) திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்குகிறது. சர்வதேச எல்லைப் பகுதி களுக்கு அருகில் வசித்துவரும் மக்களின் வளர்ச்சிக்கான தேவைகளுக்கென நடப்பு நிதியாண்டில் ரூ. 27,757.86 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

600 புதிய பள்ளிகளைத் திறக்கவும், 3334 பள்ளிகளுக்கு வலுவூட்டி தரமான கல்வி வழங்கவுமென ராஷ்டிரிய மத்தியமிக் சிக்ஷா அபியான் (RSMA) திட்டத்தை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் எழுத்தறிவுத்துறை செயல்படுத்தி வருகிறது. இதற்கென ரூ. 122,884.36 லட்சம் நிதி தரப் பட்டுள்ளது.

## வடகிழக்கு மாநிலத்தில் கட்டமைப்பின் கட்டாயத் தேவை பற்றிய மதிப்பீடு

வடகிழக்கு மாநிலங்கள் சந்தித்துவரும் பலவிதமான சமூகப் பொருளாதார சவால் கள், கட்டமைப்புக் குறைபாடுகள் ஆகி யவை பற்றிய மதிப்பீடுகளை வடகிழக்கு

மாநில மன்றம் (NEC) அவ்வப்போது செய்து கொண்டுவருகிறது.

வடகிழக்கின் சிறப்பு அதிவிரைவு சாலை மேம்பாட்டுத்திட்டத்திற்கு வடகிழக்கு சாலைப் போக்குவரத்துத்திட்டம் அடிப்படையாக அமைந்துள்ளது. ஒருங்கிணைந்த மின்சாரப் பங்கீடு, மின் கட்டுமானம் இவை பற்றிய செயலாய்வும், வடகிழக்கு விஷன் 2020 ஆவணமும், வறுமை ஒழிப்பு சாத்தியக்கூறு பற்றிய் ஆய்வும், ஒன்றிணைந்த சுற்றுலா பெருந்திட்டமும், சுகாதாரப் பணியாளர் மேம் பாட்டுத்திட்டமும், வானூர்திச் சேவையும் இவற்றில் முக்கியமானவை.

வடகிழக்கு மாநிலங்களின் மன்றம் (NEC) அமைக்கப்பட்டது முதல் இதுவரை ரூ.12,756 கோடியை முதலீடு செய்திருக்கிறது. வட கிழக்கில் சாலை வசதிகள், தகவல் தொடர்பு, பாலங்கள், பேருந்து லாரி முனையங்கள், விமான நிலையம், மின் உற்பத்தியும் பங்கீடும், நீர்ப்பாசனம், நீர் மேலாண்மை, கல்வி, சமூகக் கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு, மருந்துகள், உடல்நலம், வேளாண்மையும் அதனோடு தொடர்புடைய செயல்பாடுகளும், தொழில், சுற்றுலா, அறிவியல் தொழில்நுட்பம், வாழ்வாதாரம் ஆகியவற்றிற்காக இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலமன்றத்தின் சாதனை களில் மாநிலங்களுக்கிடையிலும் பொருளா தார முக்கியத்துவம் கருதியும் 10,949 கி.மீ. நீள சாலைகள் அமைத்தது, மாநிலங்களுக்கு இடையிலான 11 பேருந்து முனையங்கள், 3 சரக்கு போக்குவரத்து முனையங்கள் ஆகியவை அடங்கும். கவுஹாத்தி, சில்ச்சர், ஜோர்ஹத், திப்ருகர், லிலாபரி, தெஸ்பூர், உம்ரோய், லெங்புய், திமாப்பூர், இம்பால், அகர்தலா, தெஸு விமான நிலையங்களின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான செலவில் 60 விழுக்காடு செலவை வடகிழக்கு மாநில மன்றம் செய்துள்ளது. •




# போக்கிடம் வடகிழக்கு 2016



**வ**டகிழக்குப் பிராந்திய வளர்ச்சி அமைச்சகமும், பண்பாட்டு அமைச்சகமும் இணைந்து ‘போக்கிடம் வடகிழக்கு 2016’ திருவிழாவை முதன்முறையாக பிப்ரவரி 12ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை புதுதில்லியில் நடத்தின. வடகிழக்குப் பிராந்திய வளர்ச்சித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் மற்றும் உள்துறை இணையமைச்சர் திரு.கிரண் ரிஜூஜூ ஆகியோரும் அந்தத் திருவிழாவைத் தொடக்கி வைத்தனர்.

வடகிழக்குப் பிராந்தியத்தின் சமூக, பண்பாட்டுச் சிறப்புகளையும், பொருளாதார வலிமையையும் தேசிய அளவில் வெளிச்சம் போட்டுப் பரப்புவதே மூன்று நாள் நடைபெற்ற அந்தப் பெருந்திருவிழாவின் முக்கிய நோக்கமாகும். அடுத்தடுத்த மாதங்களில், மும்பையிலும் பங்களூரிலும் இத்தகைய விழாக்கள் நடத்தப்படும். இளம் தொழில்முனைவோர்களுக்கும், ‘தொடங்கிடு இந்தியா’ திட்டத்தில் புதுத்தொழில் ஆரம்பிக்க விரும்புவோருக்கும் வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள பிரகாசமான வாய்ப்புகள் பற்றி இந்தத் திருவிழாக்களில் எடுத்துரைக்கப்படும். பல்வேறு மத்திய அமைச்சகங்கள், வடகிழக்குப் பிராந்திய வளர்ச்சிக்குத் தாம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றியும் இத்திருவிழாக்களில் காட்சிப்படுத்த உள்ளன.

தொடக்க விழாவை அடுத்து, வடகிழக்கில் சுற்றுலா வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த முயற்சிகள், இதுவரை கண்டறியப்படாத வாய்ப்புகளைக் கண்டறிதல், தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் அது சார்ந்த தொழில்கள் பற்றிய அமர்வுகள் நடைபெற்றன. இரண்டாம் நாளில், வடகிழக்குப் பகுதியில் மக்களின் வாழ்வாதாரம், உள்ளடக்கிய வளர்ச்சிக்கு நுண்கடன் திட்டம், தொடங்கிடு இந்தியா திட்டத்திற்கான வாய்ப்புகளும் சவால்களும், கைத்தறித் துணிகளை ஆடைகளாக மாற்றி மதிப்புக் கூட்டுதல், தொழில் முனைவோருக்குத் தேவையான திறன் பயிற்சிகள் அளித்தல், வடகிழக்குப் பிராந்தியங்களின் கைவினைப் பொருட்களை தேசிய–சர்வதேச சந்தைகளில் பிரபலப்படுத்துதல் முதலான விஷயங்கள் விவாதிக்கப்பட்டன.

மூன்றாம் நாளன்று வடகிழக்கு நாட்டுப்புற இசை மற்றும் நடனம், பிஹூ நடனம், வடகிழக்கின் பிரசித்திபெற்ற ராக் இசை, தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனம் நடத்திய அழகுப்போட்டிகள் போன்ற பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பள்ளி மாணவர்களுக்கான வினாடி வினா, நாட்டியம், (தனிநபர் மற்றும் குழு) பாட்டு (இந்துஸ்தானி, இந்தியன் பாப், வெஸ்டர்ன் பாப், வெஸ்டர்ன் கிளாசிக்கல்) ஆகிய போட்டிகளும் நடைபெற்றன. வடகிழக்கு மாநிலங்களின் பண்பாட்டுப் பெருமையைப் பறைசாற்றுவதாக இவை அமைந்தன. இவை தவிர, சுற்றுலா, வேளாண்மை, உணவு பதப்படுத்துதல், திறன் வளர்ப்பும் தொழில் முனைவும், தகவல் தொழில்நுட்பம், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள், நுண் கடன் உதவி போன்ற விஷயங்களில் தொழில்முறை சந்திப்புகளும் நடைபெற்றன.




இந்த நிகழ்வுகள் தவிர, வடகிழக்கு மாநிலங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி அரங்குகளை அமைத்திருந்தன. அவற்றில், அம்மாநிலச் சிறப்புகளான துணி வகைகள், பாரம்பரிய உடைகள், கலை வேலைப்பாடுகள், அறைக்கலன்கள், மூங்கில் ஓவியங்கள், உணவுப் பதார்த்தங்கள் போன்றவையும் காட்சிப்படுத்தி விற்பனையும் செய்யப்பட்டன.

●

# PUBLICATIONS DIVISION

website: publicationsdivision.nic.in

# Some Prestigious Titles Now Available Online

- India 2016 (also available as eBook)
- Bharat 2016 (also available as eBook)
- Legends of Indian Silver Screen (also available as eBook)
- Abode Under The Dome
- Winged Wonders of Rashtrapati Bhavan
- Right of The Line : The President's Bodyguard
- Indra Dhanush
- The Presidential Retreats of India
- Rashtrapati Bhawan
- Belief In The Ballot (also available as eBook)
- Gandhi : Jeevan Aur Darshan (hindi)
- 1857 The Uprising
- Sardar Patel-Sachitra Jeevni(hindi) (also available as eBook)
- Sardar Patel - A Pictorial Biography (also available as eBook)
- Basohli Painting
- Kangra Painting
- Indian Women : Contemporary Essays
- Bharat Ki Ekta Ka Nirman (hindi) (also available as eBook)
- Yuva Sanyasi (hindi)
- Gazetteer of India Vol.2
- The Geet Govinda of Shri Jaydev
- Who's Who of Indian Martyrs (Vol-I)
- Who's Who of Indian Martyrs (Vol-II)
- Saga of Valour
- Some Aspects of Indian Culture
- Art & Science of Playing Tabla (also available as eBook)
- Indian Classical Dance
- Celebration of Life : Indian Folk Dance
- Nataraja
- Bengali Theatre: 200 Years (also available as eBook)
- Bihari Satsai (hindi)
- Bihari Satsai - A Commentary
- Eye In Art
- Looking Again At Indian Art
- The Life of Krishna In Indian Art
- Pahari Painting of Nala Damayanti Theme
- Ajanta Ka Vaibhav (hindi)
- Bharatiya Kala - Udhbhav Aur Vikas (hindi)
- Bharatiya Chitrakala Main Sangeet Tatva (hindi)
- South Indian Paintings
- Garhwal Chitrakala (hindi)
- A Moment In Time
- Samay, Cinema Aur Itihas (hindi)
- Indian Cinema Through The Century
- Bharatiya Cinema Ka Safarnama (hindi)
- A History of Socialism
- Lamps of India
- Bharat Ke Durg (hindi)
- Wood Carving of Gujarat
- Lawns And Gardens
- Paryavaran Sanrakshan : Chunotiyan Aur Samadhan (hindi)

**eBooks**

- Lokmanya Bal Gangadhar Tilak
- The Gospel of Buddha
- Introduction To Indian Music
- Sardar Vallabhbhai Patel
- Sardar Vallabhbhai Patel (Adhunik Bharat Ke Nirmata Series)
- Lauh Purush Sardar Patel
- Aise They Bapu
- Mahatama Gandhi -A Pictorial Biography
- Gandhi In Champaran
- Mahatma Gandhi And One World

Printed Books available at flipkart.com
eBooks at kobo.com